# முனை இலக்கியம்
# 2020




## பிரதேச செயலகம் - கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனை இலக்கியம்



# 2020

இம் மலரானது பிரதேசத்தில் வாழ்கின்ற சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் முதிய கலைஞர்களினுடைய படைப்புகளை போட்டிகளினூடாக பெறப்பட்ட சிறந்த ஆக்கங்களையும் துறைசார் கலைஞர்களினதும் படைப்புக் களையும் இம் முனை இலக்கிய நூலினூடாக வெளிக் கொண்டு வருவதன் ஊடாக எதிர்கால சமூகத்திற்கு இவ் இலக்கிய துறையில் பயணிப்பதற்கான முன்னேற்பாட்டிற்கும் வழிவகுக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது


**பிரதேச செயலகம், கலாசார அலுவல்கள் திணைக்களம்**

**பிரதேச செயலகம்**

**மற்றும் கலாசார அதிகார சபை**

**கல்முனை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகத்தின் பெயர் : முனை இலக்கியம்

வெளியீட்டு திகதி : 23-மார்கழி-2020

பக்கங்கள் : 108

வெளியீடு : பிரதேச செயலகமும் கலாசார அலுவல்கள் திணைக்களமும்

மலர் குழு அங்கத்தவர்கள் விபரம்:

1. எம்.எம். நஸீர் - பிரதேச செயலாளர், கல்முனை
2. வை. ஹபிபுல்லாஹ் - கணக்காளர்
3. எம்.எம். ஜ.்.பர் - உதவி திட்டமிடல் பணிப்பாளர்
4. ஏ.ஆர்.எம். சாலிஹ் - பிரதேச சமுர்த்தி முகாமையாளர்
5. என்.எம். றம்ஸான் - நிர்வாக உத்தியோகத்தர்
6. திருமதி. எஸ்.எஸ்.எம். நௌபல் - தலைமை முகாமைத்துவ உத்தியோகத்தர்
7. யூ.எல். பதுறுதீன் - நிர்வாக கிராம சேவை உத்தியோகத்தர்
8. எம்.ஐ.எம். முகர்றப் - கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்
9. திருமதி. எம்.எச். பௌசுல் ஹிபானா - கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர்
10. எஸ். சிவ ஜோதி - பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்
11. எஸ்.எல். அஸீல் - செயலாளர், கலாசார அதிகார சபை
12. எம்.வீ.எம். கையூம் - உதவி செயலாளர், கலாசார அதிகார சபை
13. எம்.எம். ஹசன் - உறுப்பினர், கலாசார அதிகார சபை
14. ஏ. அப்துல் கபூர் - உறுப்பினர், கலாசார அதிகார சபை
15. எம்.எம். சமீர் - அபிவிருத்தி உத்தியோகத்தர்
16. எம்.ஐ.எம். ஜிப்ரி - அபிவிருத்தி உத்தியோகத்தர்
17. எஸ்.எல்.எம். அனஸ் - அபிவிருத்தி உத்தியோகத்தர்
18. திருமதி. ஏ.எம். கஸ்பியா வீவி - அபிவிருத்தி உத்தியோகத்தர்
19. திருமதி. எம்.எச். இம்திசா - அபிவிருத்தி உத்தியோகஸ்தர் (மத்திஸ்த சபை)
20. கலாபூசணம். கல்முனை நெய்னா முகம்மது - உறுப்பினர்,கலாசார அதிகார சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| ✍ | பிரதேச செயலாளர் ஆசிச் செய்தி | 05 |
| ✍ | கலாசார அதிகார சபையின் செய்தி | 06 |
| ✍ | அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் செய்தி | 7-8 |
| ✍ | நூலாசியரின் வெளியீட்டுரை | 9-10 |
| ✍ | பிரதேச செயலகத்தினதும், கலாசார திணைக்களத்தினதும் நோக்கங்களும் இலக்குகளும். | 11 |
| ✍ | பிரதேச செயலாளர் கவிதை | 12 |
| ✍ | கல்முனை பிரதேச செயலக வரலாறு | 13-16 |
| ✍ | கிராமிய கலைகளை பாதுகாப்பதன் முக்கியத்துவம் | 17 |
| ✍ | ஒழுக்கமான சிறந்த மனிதர்களை கொண்ட தேசத்தை உருவாக்கும் இலக்கியங்கள் | 18-21 |
| ✍ | அறிவுக் கண் | 22 |
| ✍ | மருதமுனை மண்ணிலிருந்து மறைந்து போன கலைகளும் கலாசாரமும் | 23-27 |
| ✍ | இஸ்லாமிய கலை கலாசாரமும் இளைஞர்களின் பங்கும் | 28-30 |
| ✍ | காக்கப்பட வேண்டிய கலை இலக்கியங்கள் | 31-33 |
| ✍ | கொரோனாவின் கோர தாண்டவம். | 34-36 |
| ✍ | வாசிப்பின் ஊடாக கற்றல் மாணவர்களின் வாழ்வை பிரகாசிக்க செய்யும் | 37-38 |
| ✍ | இன உறவும் கல்முனையும் | 39-42 |
| ✍ | தொழில் நுட்பமும் தொலைந்து போன பாரம்பரியமும் | 43-44 |
| ✍ | என்னை இகழ உங்களுக்கு ஒரு தகுதியும் இல்லை | 45-46 |
| ✍ | கலாபூஷணம் விருது, ஏனைய விருதுகள் பெற்ற கலைஞர் விபரம் | 47 |
| ✍ | கலாசார அதிகார சபையின் அங்கத்தவர் விபரம். | 48-49 |
| ✍ | கொவிட் -19 | 50 |
| ✍ | வாழ்வின் இரு கண்கள் | 51-53 |
| ✍ | நல்லதே நினைப்போம். | 54-55 |
| ✍ | இலக்கு நோக்கி அடையாளம். | 56 |
| ✍ | கனவு நனவாகட்டும் | 57-59 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அறிந்திருக்க வேண்டிய உளவியலும் எதிர்கால சமூகத்தின் பயணமும் 60-66
- மர்மக் கொலை 67-68
- கவியால் புவியாளும் காலக் கவிஞன் சோலைக்கிளியும் முனையின் முதுசங்களும் 69-72
- மறைந்த மருதமுனை கலாபூசணம் மருதூர் வாணர் வாழ்க்கை வரலாறு 73-75
- கலை வளர்ப்போம் 76
- பாடசாலை அனர்த்த முகாமைத்துவ திட்டம் 77-79
- ஓடி வா மகனே 80
- இஸ்லாமும் இலக்கியமும் 81-83
- நவீன யுகம் 84
- குயிலின் அறிவுரை 85-86
- சுன்னத்து கல்யாணம் 87
- சமாதானம் காப்போம் 88
- நேரமில்லை எனக்கு 89
- உன்னை நோக்கி 90
- கல்முனை பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்த, பதிவுக்கு அனுப்பிய கலை அமைப்புகளின் விபரம் 91-92
- நூல் வெளியீட்டாளர்கள் விபரம் 93-94
- பாலர் கையெழுத்து போட்டி 95
- சிறுவர்களுக்கான கையெழுத்து போட்டி 96
- கலைஞர் கொடுப்பனவினை பெறுவோர்கள் விபரம் 97
- விரட்டுவோம் 98
- பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய இலக்கிய போட்டித் தொடர் 2019, 2020 பெறுபேறுகள் 99-104
- எப்ப மாமி கைவிடப் போற.... 105
- அம்பாறை மாவட்டத்தின் அரச அலுவலங்களின் தொலைபேசி இலக்கங்கள் 106-109



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதேச செயலாளரின் ஆசிச் செய்தி

முனை இலக்கியம் எனும் நூலுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டில்லாத மகிழ்ச்சியடைகின்றேன். காலத்தின் தேவையினை கவனத்திற் கொண்டு கல்முனை பிரதேச செயலக கலாசார அதிகார சபையினால் வருடந்தோறும் கலை இலக்கியத்துக்கான அறுவடை விழா கலை நிகழ்ச்சிகளும் மற்றும் பல்வேறு பெயர்களின் நூல் வெளியீடு நிகழ்வு நடைபெறுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அந்த வகையில் இம் முறை 2020 ஆம் ஆண்டுக்கான கலாசார விழாவும் அதனோடு இணைந்த முனை இலக்கியம் எனும் பெயரில் மலர் வெளியீடும் நடைபெறவிருப்பது பாராட்டி நன்றி கூறத்தக்க விடயமாகும்.

இலைமறை காயாய் கலைஞர்களின் இதயங்களில் காணப்படுகின்ற கலை உணர்வுகள் சமூகத்தின் பார்வைக்கு கொண்டுவருவதற்காக செய்யப்படுகின்ற மகத்தான இப்பணியும். அத்துடன் கடந்த காலங்களில் காலசார போட்டி நிகழ்வுகளில் பங்கு கொண்ட திறமையாளர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இத்துடன் இணைந்ததாக காணப்படுவதும் இந்நிகழ்வின் இன்னுமொரு சிறப்பம்சமாகும்.

எனவே, இந்த மலர் வெளியீடும் கலை நிகழ்வுகளும் வெற்றி பெறுவதற்காக வல்ல இறைவனை பிரார்த்தித்து, இந்த இலக்கிய விழாவினூடாக இலட்சியத்தை அடைவதற்கான பணியை சிறப்பாக செய்து கொண்டிருக்கும் காலாசர உத்தியோகத்தர் மற்றும் கலாசார அதிகார சபை அங்கத்தவர்கள் கலைக்கு உரமூட்டும் ஏனைய கலைஞர்கள் எல்லோருக்கும் கலை வாழ வேண்டும் அதற்கு கலைஞர்கள் வாழ வேண்டும் எனக் கூறி உளமார்ந்த பாராட்டுக்களையும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்.எம். நஸீர் (SLAS. Special)
பிரதேச செயலாளர்
கல்முனை/இறக்காமம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

கல்முனை பிரதேச கலாசார அதிகார சபையினால் வெளியிடப்படும் "முனை இலக்கிம்" எனும் நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமிதம் அடைகிறேன பூர்வீகக் கலைகளைக் கொண்ட இம்மண்ணில் இவ்வாறான வெளியீடுகள் தற்கால சமூகத்தினை தழுவுவது மென்மேலும் இப்பிரதேசத்தின் இலக்கிய ஆர்வத்தை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமும் கிடையாது.

இலக்கிய வரலாற்றில் கல்முனைப் பிரதேசம் தேசிய மற்றும் சர்வதேச விருதுகள் வென்ற கலைஞர்கள், சர்வதேச கலை, இலக்கியத் துறை வளவாளர்களாக பங்கு பற்றுகின்ற கலைஞர்கள், திறனாய்வு கட்டுரைகள் வரைகின்ற எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்கள் இப்பிராந்தியத்தைக் கடந்து செயற்படுகின்றமை இப்பிரதேசத்தின் மற்றுமொரு சாகித்தியமாகும்.

அந்த வகையில் பல்துறைக்கலை, இலக்கிய ஆளுமை படைத்த அதை உயிர்ப்பித்த இப்பிரதேச மூத்த கலைஞர்களின் ஆவணப்படுத்தலாக வெளிவரும் "முனை இலக்கியம்" எனும் இந்நூல் சிறந்த ஒரு படைப்பாகவும் வளர்ந்து வரும் எதிர்கால சந்ததிக்கு ஒரு வழிகாட்டியாகவும் அமையுமென எதிர்பார்க்கிறேன்.

கலைகள் என்பது காலத்தால் அழியாதவை இவற்றை படைத்து பாதுகாப்பது என்பது அளப்பரிய பணி. இதனை சமூகத்தில் முறையாகப் பாதுகாப்பது மகத்தான இலக்கிய சமூகத்தை கட்டியெழுப்ப வாய்பாக அமையும். இந்த வகையில் இத்தகைய பணிகள் சமூகத்தில் முன்னெடுப்பது வரவேற்கத்தக்கதாகும். எனவே இந்நூல் சிறந்த முறையில் வெளிவருவதற்கு, எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு. இக்கலாசாரவிழா வெற்றி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஏ.ஆர்.எம் சாலிஹ் Bsc (Maths), MBA (HRM)
சிரேஷ்ட தலைமை சமுர்த்தி முகாமையாளர்
பொருளாளர், கலாசார அதிகாரசபை,
பிரதேச செயலகம்,
கல்முனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தரின் ஆசிச் செய்தி

"இலக்கியம்" அனைத்து இதயங்களிலும் இறுக பிடிக்க வேண்டும்..

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற பிரதேச கலாசார விழாவின் நிமிர்த்தம் கொரோனா (COVId19) பரிசாக வெளிவரும் இவ் இலக்கிய மலரூடாக உரையாட சந்தர்ப்பம் தந்த இறைவனுக்கு முதலில் நன்றி செலுத்தியவனாய்.

கலாசார அலுவல்கள் திணைக்களமானது கருவிலுள்ள சிசுக்களை மையமாகக் கொண்ட "அழகிய குடும்பம்" வேலைத் திட்டத்தில் ஆரம்பித்து மரணித்த கலைஞர்களுக்கான இரங்கல் உரை வரையான நீண்டு விரிந்து ஆழ அகலமான வகையில் தனது வேலை திட்டங்களை மேற்கொண்டு வருவதன் ஒரு அங்கமே பிரதேசத்தலுள்ள அனைத்து கலைஞர்களையும் உள்ளடக்கிய வருடாந்த கலாசார விழா. இதன் ஒரு செயற்பாடாகவே பாடசாலைகளில் பாலர் பிரிவு மாணவர்கள் முதல் 18 வயதிற்கு மேற்பட்ட அனைத்து தரப்பினரிடமிருந்து ஆக்கங்களை பெற்று போட்டிகளை நடாத்தி இறுதியில் அனைத்து கலைஞர்களையும் இணைத்து நடைபெறுகின்ற கலாசர விழா இவ்வருடமும் நடத்துவதில் கொரோனா ஒரு பாரிய சவாலாக உள்ளாமையால் வருடாந்த விழாவினை நினைவு கூர்ந்தும், இதற்கான போட்டிகளில் பங்குபற்றியவர்களை நிர்க்கதிக்குள்ளாக்காத வகையிலும் நடத்து வதற்குரிய முன்னேற்பாடாகவும் பல பிரயத்தனங்களுக்கு மத்தியில் இம் மலர் வழமைக்கு மாறான முறையில் இவ் வருடம் வெளிவருகிறது.

மலர் வெளியீட்டுடனான விழாவை நடத்துவதற்கு பாரிய நிதி முதலீடுகளுடனான ஏற்பாடுகள் இடம்பெறுவது வழமை. ஆனால் இவ்வருடம் மேற்படி நிலமைகளைக் கருத்தில் கொண்டு குறுகிய காலப்பகுதிக்குள் திணைக்களத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதிக்குள் கலைஞர்களை ஒன்று கூட்டாமல் போட்டியாளர்களுக்கான பரிசில்களுடன் சான்றிதழ்களையும் அவரவர் வீடுகளுக்குச் சென்று வழங்குவதாகவும் போட்டிகளில் பங்கு பற்றி முதலிடம் பெற்ற ஆக்கங்களையும் பிரதேசத்திற்கு உரித்தான தனித்துவமான கலை இலக்கிய துறைசார் விடயம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் இவ்வருடம் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டங்களையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்ததாக இம்மலர் வடிவமைப்பதாகவும் தேசிய இலக்கிய விழாவில் வெளிவருகின்ற இலக்கியம் என்ற நினைவு மலரின் பெயரையே இதற்கு வைப்பதெனவும், மேலதிக மாவட்ட செயலாளர் அவர்களது தலைமையில் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கேற்ப உத்தியோகத்தர்களால் இது தொடர்பான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது நிதி, கால அவகாசம் மற்றும் Covid-19 போன்ற விடயங்களை கருத்தில் கொண்டு இதில் ஏனைய கலைஞர்களது ஆக்கங்களை இணைத்து கொள்ளாததையிட்டு வருத்தமடைகின்றேன்.

இதனோடு இணைந்ததாக கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேலைத்திட்டங்களை மக்கள் மயப்படுத்தும் ஐந்தாண்டு வேலைத்திட்டத்தின் கீழ் எல்லா பிரதேச செயலகங்களிலும் ஒரு கலாசார விளம்பர பலகையினையும் ஏற்பாடு செய்யப்படுகின்றது அதாவது கடந்த நான்கு வருடங்களில் திணைக்களத்தினூடாக 11 தலைப்பில் சுமார் 112 வகையான வேலைகள் அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் இது தொடர்பான போதிய தெளிவு கலைஞர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் காணப்படாமை உணரப்பட்டுள்ளது.

உள்ளும் புறமும் பல்வேறு நெருக்குதல்களுக்கு மத்தியில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவதில் மாவட்ட செயலாளர், மேலதிக மாவட்ட செயலாளர் பிரதேச செயலாளர்களுடன் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களது பங்களிப்பு மகத்தானது.

**ரீ.எம்.றின்சான்**
மாவட்ட கலாசார உத்தியோகத்தர்
மாவட்ட செயலகம்
அம்பாறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூலாசிரியரின் வெளியீட்டுரை

எல்லாப் புகழும் இறைவனுக்கே. இலக்கியம் என்பது பண்பாட்டுத் தளத்தின் பிரிக்க முடியாத ஒரு கூறு. கலாசாரம் என்பது மனித இனத்தின் தனித்துவத்தை பேணி நின்று அதன் சமூக அடையாளத்தை பறைசாற்றும் உன்னதமான வெளிப்பாடாகும். இவ்வுலகில் காணப்டும் ஒவ்வெரு சமூகங்களும் தனக்கே உரித்தான கலாசாரங்களை கொண்டு இயங்குவதோடு அதனை பிரதிபலிக்கும் கலை அம்சங்களை வெளிக் கொணர்ந்த வண்ணமே இருந்து கொண்டிருக்கின்றன.

எந்தவொரு சமூகமும் தனது இருப்பை தக்கவைத்துக் கொள்ள வேண்டுமானால் தனது மொழி, மதம் கலை, கலாசார பாரம்பரியங்களில் மிகுந்த ஆர்வத்தையும், அக்கறையையும் வெளிக்காட்டுவது இன்றியமையாதாகும் இந்த வகையில் மூவின மக்களும் ஒன்று கூடி வாழும் அம்பாறை மாவட்டத்திற்கு உட்பட்ட பிரதேச செயலகங்களில் கல்முனை பிரதேச செயலகம் கலாசார பண்பாட்டு கலை அம்சங்களில் ஏனைய மதத்தினரையும் அவர்களது கலை, கலாசாரங்களை ஏற்று மதித்து தமது பரஸ்பர சகோதரத்துவ ஒற்றுமைகளை பகிர்ந்து புரிந்துணர்வின் அடிப்படையில் இணைந்து வாழும் சமூகங்களில் முன்னோடியானது என்பதில் வேறுபட்ட கருத்திற்கு இடமில்லை.

இந்தவகையில் இப்பிரிவில் வாழும் கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் தமது தனித் திறனை சுய ஆற்றல்கள் மூலம் தமது கலை இலக்கிய பணியை ஆற்றி வருவது அதன் கலாசார முதுசங்கள், கலாசார விழாக்கள், கலாசார வெளியீடுகள் துறை ரீதியாக கிடைக்கும் விருதுகள் மூலம் வெளிக்கொணரப்படுகின்றன இதற்கு ஒவ்வெரு வருடமும் பிரதேச செயலக மட்டத்தில் நடைபெற்றுவரும் கலை நிகழ்வுகளும், இலக்கிய போட்டிகளும் இதன் மூலம் சர்வதேச விருதுகள் பெற்ற கலைஞர்கள், சர்வதேச கலை இலக்கியத்துறை வளவாளர்களாக பங்குபற்றும் கலைஞர்கள், எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்கள் போன்றோர்கள் பிரதேசங்களை தாண்டிய விற்பனர்களாக திகழ்கின்றமை இப் பிரதேசத்தின் மற்றுமொரு சிறப்பம்சம் எனலாம்.

இத்தகைய சிறப்பம்சங்களை உள்ளடக்கிய பிரதேச கலை, கலாசார, பாரம்பரியங்களை ஆவணப்படுத்தவும் இனி வரும் இளம் கலைஞர்களை ஊக்குவிப்பதும் அதன் இருப்பை தக்கவைப்பதற்குமான நன்நோக்கில் கலாசார உத்தியோகத்தர் என்ற வகையில் இலை, மறை காயாக காணப்படும் கலைஞர்களை வெளியில் கொண்டுவரவும், அவர்களை கௌரவிக்கவும், கலைகள், கலாசார, பாரம்பரிய வழக்காறுகளில் இருந்து அருகிச் சென்றுவிடாமல் அதனை ஊக்குவித்து தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்று எதிர்கால சமூகமானது அதனை எழுத்துருக்களாகவோ அல்லது , புகைப்படமாகவே பெற்று பயன்பற வேண்டும் என்ற அடிப்படையில் இத்தகையதொரு நூலாக்க முயற்சியை செய்வதற்கு ஆர்வப்பட்டேன்.

தற்கால நாட்டின் அசாதாரண சூழ்நிலைகள் (கோவிட்-19) தொற்றால் ஆக்கிரமிக்கப் பட்டிருப்பதனால் படைப்புகள், ஆக்கங்கள், தகவல் திரட்டுவதற்கு மிகுந்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. நகரங்கள் மூடப்பட்டிருந்த நாட்களில் அனைத்து செயற்பாடுகளும் ஸ்தம்பித்திருந்தமையினால் கலைஞர்களை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகளும் தடைப்பட்டன. இதற்கு மத்தியில் தமது திறமைகளை வெளியிட்டவர்களை முன் கொண்டு, ஆர்வப்படுத்த வேண்டிய நன்நோக்கமுமே எனது இம் முயற்சியின் துணைக் காரணம் எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நூல் "முனை இலக்கியம்" என்ற பெயரை தாங்கி நிற்பதற்கு நான் பணியாற்றும் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட (கல்முனை, நற்பிட்டிமுனை, மருதமுனை) ஆகிய முனைகளோடு ஒன்றிணைக்கப்பட்டமை காரணமானது இந் நூல் இனிவரும் காலங்களில் இலக்கிய ஆர்வலர்களையும் ஆர்வப்படுத்தி இன்னொரு படைப்பையும் என்னை உருவாக்க வழிகோலும் என்ற தூர தரிசன எண்ணப்பாட்டை முன்மொழிவதில் ஆனந்தமடைகின்றேன்.

பாரம்பரிய கலைகளான (பொல்லடி – களிகம் பாட்டம், கவிபாடுதல், சீனடி, சிலம்படி, குரவை, வாழ்வீச்சு, நாடகம், தாலாட்டு , நாட்டார் பாடல்) போன்றவை எமது மண்வாசனை பொருந்திய கலாசார அம்சங்களாகும் தற்காலத்தில் இவைகள் அருகிய வண்ணம் காணப்படுகின்றன இவற்றை அறிந்தவர்களை கொண்டு இருப்பவர்களுக்கு கற்றுக் கொடுத்து எதிர்கால சமூதாயம் ஒன்றை வளர்த்தெடுக்க வேண்டிய அவசியமும் காணப்படுகின்றது. இந்த சிறப்பு மலர் ஊடாக திணைக்கள வேலைத்திட்டங்களையும் மக்களிடத்தில் கொண்டு செல்வதற்கான ஓர் சிறிய ஆவணமாகவும் கருதுகின்றேன்.

இருந்தும் கோவிட்19 கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதால் வேலைகளை கொண்டு செல்வதில் பல சவால்களை எதிர் நோக்க வேண்டிய நிலையிலும் கூட இத்தகையதொரு முயற்சிக்கு உதவி புரிந்தவர்களான பிரதேச செயலாளர், கணக்காளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், நிருவாக உத்தியோகத்தர், பிரதம முகாமைத்துவ உத்தியோகஸ்தர் ஏனைய அனைத்து மட்ட சக உத்தியோகத்தர்கள் மற்றும் கலாசார அதிகார சபை தலைவர், செயலாளர்கள், பொருளாளர் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதற்கு கடமைப்பட்டுள்ளேன் இன்னும் நான் இங்கு இடமாற்றம் பெறும் வரை 6 வருட காலமாக கலை இலக்கிய துறைக்கு தனது அர்ப்பணிப்பு மிக்க சேவையை ஆற்றி வந்த கலாசார உத்தியோகத்தர் அகிலா பானு அவர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்தே ஆக வேண்டும். இன்னும் எனது இம் முயற்சிக்கு தங்களது வேலைப்பழுக்களுக்கு மத்தியிலும் நேரம் ஒதுக்கி எனக்கு அனைத்து வழிகளிலும் உதவிய ஒத்தாசை புரிந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.எம். சமீர், எஸ்.எல்.எம். அனஸ் மத்தியஸ்த சபை அபிவிருத்தி உத்தியோகத்தரான இம்திஸா ஹசன் அவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன். எல்லாவற்றிற்கும் மேலாக எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். அத்துடன் எனது கணவருக்கும் என் நன்றிகள் என்றும் உரித்தாகட்டும்.

நன்றி

எம்.எச்.பௌசுல் ஹிபானா
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
கல்முனை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச செயலகத்தினதும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினதும் நோக்கங்களும் இலக்குகளும்

### பிரதேச செயலகத்தின் நோக்கு (VISION)

பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் நலனையும் மேம்படுத்தன் மூலம் பிரதேசத்தை அபிவிருத்தி செய்தல்.....

### பிரதேச செயலகத்தின் இலக்கு (MISSION)

மக்களுக்கான சேவைகளை உறுதி செய்து மனிதாபிமான மற்றும் ஏனைய சேவைகளை வழங்கி அபிவிருத்தி செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி பிரதேச செயலகத்துடன் தொடர்புபட்ட ஏனைய நிறுவனங்களின் இயைபுடைய நிகழ்ச்சித் திட்டங்களின் சேவைகளை ஒழுங்கிணைத்தல்.....

### கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நோக்கு (VISION)

அமைதியான,ஒழுக்கமான,முழுமையான சிறந்த மனிதர்களைக் கொண்ட புனித தேசத்தை ஒன்று சேர்த்து கட்டியெழுப்புங்கள்.....

### கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இலக்கு(MISSION)

தேசத்தின் கலாசார மற்றும் கலையின் பன்முகத்தினூடாக பொருளாதார மற்றும் மானிட அபிவிருத்திக்காக செல்லும் பயணத்தில் நல்ல ரசனைகளையுடைய,ஆக்கபூர்வமான தலைமுறையினை கட்டியெழுப்பும் அபிமானத்துடன்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனையில் கலை விழா...



கல்முனை, நற்பிட்டிமுனை, மருதமுனை
மும்முனையார் ஒன்றிணைந்த முயற்சி அது
கலையுணர்வை நிலை பெறச் செய்வதற்கு
கலைக்கோர் உயர் விழா
முனை இலக்கியம் எனும் நாமத்தில்
இலக்கியத்துக்கான இலட்சிய கலை விழா
அதுதான் இந்த இலக்கிய கலை விழா

மறைந்துள்ள கலை பொக்கிஷத்தை
மானிடர்க்கு வெளிகொணர்வதற்கு
மலர் வெளியீட்டுடனான மனங் கவர்
மகத்தான கலை விழா

ஏட்டிக்குப் போட்டியாய்
எனது கவிதையைச் சேருங்கள் எனும்
கலைஞர்கள் கவிதை பாடும் ஓர் விழா
கல்முனை பிரதேச செயலகத்தின்
கலாசார அறுவடை விழா

கொரோனா வைரஸ் எனும்
கொடூர நோய் பரவலுக்கு மத்தியிலும்
சுகாதார நடைமுறையை கருத்திற் கொண்டு
கலை வரிகள் மூலம்
கொரோனாவின் கொடூர பாதிப்பை உள்வாங்கி
வருட இலக்கை நோக்காக கொண்டு
மனித உள்ளங்களை மகிழ்விக்க
மகத்தான கலை விழா

கறைபடியாத உள்ளம் கொண்ட
கலைஞர்களைக் கௌரவிக்கும் விழா
போட்டியில் பங்கு கொண்ட திறமையாளர்களை
பராட்டி பரிசளிக்கும் விழா

சாதிமத பேதமின்றி சகலரும்
பங்கு கொள்ளும் மகிழ்ச்சி விழா
கலாசார அதிகார சபையின்
கனவுகள் நினைவாகும் விழரி
கற்றவர்கள் ஒன்றிணைந்து
மற்றவர்களுக்கு மகிமை சேர்க்கும் விழா
அதுதான் கல்முனையில் கலாச்சார கலை
விழா

எம்.எம். நஸீர் **(SLAS Special Grade)**
பிரதேச செயலாளர்
இறக்காமம்,கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்முனை பிரதேச செயலக வரலாறு

கல்முனை பிரதேசத்தின் வரலாறு தொடர்பில் என்னிடம் கிடைக்கப் பெற்ற ஆவணங்களின் அடிப்படையில் தகவல்களை வழங்குவதில் கல்முனை பிரதேச செயலகத்தின் நிருவாக உத்தியோகத்தர் என்ற அடிப்படையில் மிகவும் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

ஆங்கிலேயரின் வரவின்பின் இலங்கை பல பிரிவுகளாக பிரிந்த வேளை கல்முனையானது கரவாகுபற்று என்ற நாமத்தில் பல ஊர்களையும், வயல் நிலங்களையும் கொண்ட பிரதேசமாக வரையப்பட்டிருந்தது அதன் எல்லைகள் பின்வருமாறு அமைய பெற்றிருந்தன.

வடக்கு :- பெரிய கல்லாறு நீரோடை

கிழக்கு :- கடல்

மேற்கு :- கிட்டங்கி ஆறும் வெட்டுக் காட்டு வாய்க்காலும், வெட்டாறும், கிறவல் ஆறும், மானம் வட்டைக்கும் ஆம வட்டைக்குமிடையில் உள்ள வீதி களியோடை ஆற்றிற்கு போகும் வரை.

தெற்கு: வீரையடி ஆறு (களியோடை ஆறு)

இவ் எல்லைக்குள் அடங்கிய ஊர்களாக தெற்கில் இருந்து – அட்டப்பள்ளம், நிந்தவூர், காரை தீவு, மாவடிப்பள்ளி, சாய்ந்தமருது, கல்முனைக் குடி, கல்முனை, பாண்டிருப்பு, மருதமுனை, பெரிய நீலாவணை, துறை நீலாவணை, கல்லாறு, நற்பட்டிமுனை, சேனைக் குடியிருப்பு, துரவந்தியன் மேடு ஆகியனவைகளைக் குறிப்பிட்டு கூற முடியும்.

இவ்வெல்லைக்குள் அடங்கிய நெற்காணிகள் பின்வருமாறு தென்பக்கத்திலிருந்து மாட்டுப்பளை, செங்கப்படை, ஆமவட்டை, அல்லி முல்லை, கயிற்றடி வட்டை, பாலையடி வட்டை, செட்டிய வட்டை, குடாக்கரை கீழ்கண்டம், குடாக்கரை மேற் கண்டம், கராவாகுவட்டை, கல்முனைவட்டை, நற்பட்டிமுனை தென் கண்டம், நற்பட்டிமுனை மேல் கண்டம், சேத்துக் குடா வட்டை, மேட்டுவட்டை, நீலாவணைப்பற்று ஆகிய நாமங்களை கொண்ட நெற்காணிகள் அடங்கலானதுமான வடக்கு தெற்கு 8 மைல்களும், கிழக்கு மேற்கு 2 மைல்களும் கொண்டதுமான ஏறத்தாள 10240 ஏக்கர் பரப்பை கொண்டிருந்த பிரதேசமாக காணப்பட்டது.

1946 இல் DRO பிரதேச இறைவரி உத்தியோகஸ்தர் முறை இருந்தது 1947 இல் பாராளுமன்ற கமிசன் அறிக்கையின் படி பெரிய கல்லாறும், துறை நீலாவணையும் பட்டிருப்பு பிரதேசத்துடன் சேர்க்கப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1968ம் ஆண்டு நிந்தவூர் தனி DRO பகுதியாக பிரிந்துவிட்டது அதனுடன் கல்முனையுடன் இருந்த பின்வரும் ஊர்களும், வயற்காணிகளும் நிந்தவூர் DRO பிரிவுடன் இணைக்கப்பட்டது அவையாவன கரைதீவு, மாவடிப்பள்ளி, அட்டப்பளம் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாகவும் மாட்டுப்பளை, செங்கப்படை, ஆம வட்டை, அல்லி முல்லை, கயிற்றடிவட்டை, பாலையடி வட்டை, செட்டியா வட்டை ஆகிய வயல் நிலங்களைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது.

1978 ஆம் ஆண்டு உதவி அரசாங்க அதிபர் முறையில் இருந்து 1992ம் ஆண்டின் 58ம் இலக்க பாரளுமன்ற கூட்டத்தின் கீழ் பிரதேச செயலக முறைக்கு மாற்றப்பட்டது. அன்றிலிருந்து கல்முனை பிரதேச செயலகமாக இப்பிரதேச செயலகம் இயங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. கல்முனை நிருவாகத்திற்குப் பொறுப்பான இவ் அலுவலகமானது வெவ்வேறு நிருவாக பெயர்களில் இருந்துள்ளது மட்டுமல்லாமல் வேறு வேறு இடங்களில் அமைய பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. மேலும் தற்போதுள்ள கட்டிடம் 1993.10.10ம் திகதி கௌரவ வர்த்தக வாணிப துறை அமைச்சர் மர்ஹூம் ARM மன்சூர் அவர்களின் அழைப்பின் பேரில் அப்போதைய கௌரவ புனர்வாழ்வு, புணரமைப்பு, சமூக நலத்துறை அமைச்சராக இருந்த பி. தயரத்னா அவர்களால் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் 2001.02.20 ம் திகதிய 1172/8 எனும் அதி விஷேட 1993.07.28ம் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் 40 கிராம உத்தியோகஸ்தர் பிரிவு அடங்கலான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது மேலும் 2001ம் ஆண்டு சாய்ந்தமருதுக்கும் தனியான பிரதேச செயலக பிரிவு வழங்கப்பட்டதும் குறிப்பிடத் தக்கதாகும்.

மேலும் ஆரம்ப காலத்தில் வன்னிமைகளும் அவர்களின் காரியாலயங்களும் அமைந்த இடங்களும் பின்வருமாறு

| இல | பெயர் | அலுவலகம் அமைந்திருந்த இடம் |
|---|---|---|
| 01. | சின்னத்தம்பிபோடி வன்னியன | நற்பட்டிமுனை |
| 02. | சத்துரக்க போடி வன்னியன் | நற்பட்டிமுனை |
| 03. | செல்லய்யா வன்னியன் மகன் | நற்பட்டிமுனை |
| 04. | மஜீது வன்னியன | சம்மாந்துறை |
| 05. | கேட்முதலியார் M.S காரியப்பர் JPUM | கல்முனை |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1947ம் ஆண்டிலிருந்து கல்முனையில் கடமையாற்றிய DROக்கள் , AGA க்கள் , பிரதேச செயலாளர்களின் பெயர்கள் அலுவலகங்கள் அமைந்திருந்த இடங்கள் மற்றும் கடமையாற்றிய காலங்கள் பின்வருமாறு


| இல | பெயர் | பதவி | அலுவலகம் அமைந்திருந்த இடம் | சேவையாற்றிய காலப் பகுதி |
|---|---|---|---|---|
| 01 | திரு. N.நடராசா | DRO | மணல் சேனை | - |
| 02 | திரு. P.H. தியோ பிலஸ் | DRO | மணல் சேனை | - |
| 03 | திரு. M.முருகேசப்பிள்ளை | DRO | கந்த வாசா –கல்முனை | - |
| 04 | திரு. S. சபாரெட்டினம் | DRO | கந்த வாசா –கல்முனை | - |
| 05 | திரு. சோம சுந்தரம் | DRO | கந்தவில –கல்முனை | - |
| 06 | திரு.தொம்பாபிள்ளை | DRO | கந்தவில –கல்முனை | - |
| 07 | திரு. W. வைரசிங்க | DRO | கந்தவில –கல்முனை | - |
| 08 | திரு. குமார ரெட்டின | DRO | கந்தவில –கல்முனை | - |
| 09 | திரு. சுந்திர ரெட்டின | DRO | கந்தவில –கல்முனை | - |
| 10 | திரு. P. விஜய சிறி | DRO | T.C கட்டிடம் -கல்முனை | - |
| 11 | திரு. S.P.வெத்த வெல | DRO | T.C கட்டிடம் -கல்முனை | - |
| 12 | ஜனாப்.A. காலிதீன் | AGA | T.C கட்டிடம் -கல்முனை | - |
| 13 | ஜனாப்.M.H.M.முகைனுதீன் | AGA | T.C கட்டிடம் -கல்முனை | - |
| 14 | ஜனாப் M.I. அமீர் | DS | பிரதேச செயலகம்.கல்முனை (தற்போதைய கட்டிடம்) | - |
| 15 | ஜனாப் A.மன்சூர் | DS | பிரதேச செயலகம்,கல்முனை (தற்போதைய கட்டிடம்) | - |
| 16 | ஜனாப் A.L.M.பழீல் | DS | பிரதேச செயலகம்.கல்முனை (தற்போதைய கட்டிடம்) | 1997.12.16–2003.07.07 |
| 17 | ஜனாப் A.H.M. அன்சார் | DS | பிரதேச செயலகம்.கல்முனை (தற்போதைய கட்டிடம்) | 2003.07.07-2007.04.17 |
| 18 | ஜனாப்.M.M. நௌபல் | DS | பிரதேச செயலகம்.கல்முனை (தற்போதைய கட்டிடம்) | 2007.07.03-2014.06.07 |
| 19 | ஜனாப் I.M.ஹனீபா | DS | பிரதேச செயலகம்.கல்முனை | 2014.02.20-2014.06.07 |
| | | | (தற்போதைய கட்டிடம்) | |
| 20 | திருA.மங்கள விக்ரமராய்ச்சி | DS | பிரதேச செயலகம்.கல்முனை (தற்போதைய கட்டிடம்) | 2014.06.07-2015.05.18 |
| 21 | ஜனாப் M.H.M.கனி | DS | பிரதேச செயலகம்,கல்முனை (தற்போதைய கட்டிடம்) | 2015.05.18-2018.10.22 |
| 22 | ஜனாப் M.M.நஸீர் | DS | பிரதேச செயலகம்.கல்முனை (தற்போதைய கட்டிடம்) | 2018.08.22 தொடக்கம் இன்று வரை |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு இப்பிரதேச செயலகமானது "கல்முனை" பிரதேச செயலகம் என்று மட்டுமே வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது எனவே அவ்வாறே அழைக்கப்பட்டு வருகின்றமையினால் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள் கல்முனை பிரதேச செயலகம் என்று மட்டுமே விலாசமிட வேண்டும் என்பதனை அன்புடன் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

மேலும் கல்முனை பிரதேச செயலகமானது புதுப் பொலிவுடன் தற்போதுள்ள செயற்திறன் வாய்ந்த ஆளணியின் விடாமுயற்ச்சியின் காரணமாக அலுவலகமானது புதுப் பொலிவுடன் காட்சி அளிப்பதுடன் அதற்கேற்றால் போல் நேரிய சிறந்த சேவைகளையும் மக்களின் மனதில் வெல்ல நினைத்து நிற்க கூடியவாறு செய்து வருகின்றது என்பதனையும் குறிப்பிட்டு கூறிக் கொள்ள முடியும். இத் தருனத்தில் இவ் உயர் அதிகாரிகளின் வழிகாட்டுதலுடன் வேலை செய்வதனை அனைத்து உத்தியோகஸ்தர்களும் வரப்பிரசாதமென கருத்துக்கள் தெரிவிப்பதும் குறிப்பிடத்தக்கது.இவ்வாறான சிறந்த சேவைகள் தொடர எல்லோருக்கும் பொதுவான இறைவனை பிரார்த்தித்து முடிக்கின்றேன்.

## தற்போதைய நிருவாகக் கட்டமைப்பும்




நன்றி

வஸ்ஸலாம்

முஹம்மது நசுறுதீன் முகம்மது றம்ஸான் (MSO, Mediator)
நிருவாக உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
கல்முனை
2020.11.30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமியக் கலைகளை பாதுகாப்பதன் முக்கியத்துவம்



ஒரு சமூகத்தின் கலாசாரமே அச் சமூகத்தை அடையாளப்படுத்துகின்றன. பாரம்பரிய பண்புகள், பழக்க வழக்கங்கள், மனப்பாங்குகள், நம்பிக்கைகள் என்பன இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. ஒரு சமூகத்தின் பெறுமானம், இருப்பு என்பன அச் சமூகத்தின் கலாசார அம்சங்களிலேயே தங்கியுள்ளது. பொல்லடி (களிகம்பாட்டம்), சீனடி, சிலம்படி, குரவை, நாட்டார் பாடல்கள், நாடகம், திருமண ஊர்வலம், வாள்வீச்சு, கவிபாடல் போன்றன இஸ்லாமியர்களின் கலாசார அம்சங்களாக இருக்கின்ற போதிலும் தற்போதைய காலகட்டத்தில் எமது சமூகத்தில் ஓரிரு நிகழ்வுகளையே கலாசார பாரம்பரிய நிகழ்வுகளாக கண்கூடாக பார்க்கக் கூடியதாக இருக்கின்றது ஏனைய அனைத்தும் மருகிவிட்டன. எமது எதிர்கால சந்ததியினருக்கு, இவை தான் எமது கலாசார அம்சங்கள் என்று எதைத்தான் ஒப்படைக்கவுள்ளோம்? என்ற கேள்விக்கு விடை தேட வேண்டும்.

வளர்ந்துவரும் விஞ்ஞான யுகம் எமது இளஞ்சந்ததியினரை வேறு திசையை நோக்கி ஈர்த்துக் கொண்டிருக்கின்றது. தொழில்நுட்பம் வளர வளர இளம் சமுதாயம் ஒழுக்கம், சமூகக்கட்டுப்பாடு, பெற்றோரின் அன்பு, கல்வி, கலாசாரம் போன்றவற்றை புறம் தள்ளிவிட்டு தான் தோன்றித்தனமாக வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் எம் எதிரில் கண்டு கொண்டிருக்கின்றோம். இதனால் எமது சமூகத்தின் எதிர்காலம் குறித்து நாம் சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம்.

எமது முன்னோர்கள் பாரம்பரிய கலாசாரப் பண்பாடுகளைக் கொண்டிருந்த காரணத்தினால் அவர்களிடத்தில் சமூகப்பொறுப்பு, ஒழுக்கம், அன்பு, கீழ்ப்படிதல், சமூகக் கல்வி போன்றன காணப்பட்டன. நவீன சமுதாயத்தில் இவைகள் காணப்படாமையினால், சமூகப் பிரச்சினைகளும், சமூக விரோத செயல்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன. எனவேதான் எமது பாரம்பரிய காலாசார விழுமியங்களை மேம்படுத்தல், பாதுகாத்தல், மற்றும் எதிர்கால சந்ததியினரின் கைகளில் ஒப்படைத்தல் என்னும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நாம் செயற்படவேண்டும்.

இவ்விடயங்களை கருத்திற்கொண்டு எமது பிரதேசம் மட்டுமல்ல முழு இஸ்லாமிய சமூகமும் செயற்பட வேண்டும். எமது கலாசார விழுமியங்களை மேம்படுத்தும் நோக்கில் பிரதேச மட்டத்தில் நாம் சில விடயங்களை செயல்படுத்திக் கொண்டு வருகின்றோம். இருந்த போதிலும் மாவட்ட ரீதியில் செயற்திறன் மிக்க ஒரு குழுவொன்றை அமைத்து கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டால் எமது பாரம் பரியத்தை பாதுகாக்க முடியும்.

மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் பிரதேச செயலாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள், கலாசார மத்திய நிலைய கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள், துறைசார்ந்த கலைஞர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் போன்றோர்களை கொண்ட ஓர் குழு கலாசார மேம்பாட்டு வேலைத்திட்டங்களை திட்டமிட்டு செயற்படுத்தினால் இஸ்லாமிய சமூக கலாசாரம் மட்டுமன்றி அனைத்து மத கலாசாரங்களின் விழுமியங்களையும் பாதுகாத்து எதிர்கால சந்ததியினரின் கைகளில் ஒப்படைக்க முடியும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

ஐ.எல்.றிஸ்வான்

நிலையப்பொறுப்பதிகாரி, கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர்,

கலாசார மத்திய நிலையம், கல்முனை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒழுக்கமான சிறந்த மனிதர்களைக் கொண்ட தேசத்தை உருவாக்கும் இலக்கியங்கள்

இன்று உலகம் தோன்றி சுமார் இருபத்தோராம் நூற்றாண்டையும் கடந்துவிட்டது. பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பதற்காக உலகம் பல்வேறு யுகங்களைத் தாண்டி நகர்ந்து கொண்டிருக்கின்றது இவ்வாறு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் இந்த நாட்டிற்கு சிறந்த பிரஜையை உருவாக்குவது மிக முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றது.

இவ்வாறு சிறந்த மனிதர்களை உருவாக்குவதற்கு நாடகங்கள், சங்கீதங்கள், ஓவியங்கள் போன்ற கலைகளும், திருக்குறள், நாலடியார், வாக்குண்டான், இனியவை நாப்பது, முது மொழி, வெண்பா, பாரதியார் கவிதைகள் போன்றன அளப் பெரிய பங்கு வகிக்கின்றது.

முன்னொரு காலத்தில் கூறப்பட்ட செய்யுள்களில் இருந்து நன்னடத்தைகள் பல நேரிய வழியில் காட்டிக் கொண்டிருக்கின்றது உதாரணமாக வாக்குன்டான் நூலை எடுத்துக் கொண்டால் பழந் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் அரிய கருத்துக்களை கூறுவதாக அமைந்துள்ளது. ஔவையார் இதனை பின்வருமாறு கூறுகின்றார் “அடக்க முடையார் அறிவிலர் என்று எண்கடக்க கருதவும் வேண்டாம்” “மடைத் தலையில் ஓடு மீன் ஓட உறு மீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு” கொக்கு பறவையானது நீரோடும் வாய்க்காலில் சிறிய மீன்களை ஓடவிட்டு பெரிய மீன்கள் வரும் வரை காத்துக் கொண்டு இருக்குமாம் கொக்கு தக்க நேரம் வரும் வரை பணிவடக்கத்துடன் இருப்பவரை அறிவற்றவரெனக் கருதி அவரை வெல்லுவதற்கு நினைக்க வேண்டாம். நாம் பொறுமையாக இருந்து சாதிக்க முடியும் என்பது தெளிவாகின்றது. வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் அந்நாட்டின் எதையுமே அவசரமாக செய்து முடிப்பது என்பது திருப்தி அளிக்காத ஒன்றாக காணப்படுகின்றது ஒரு சிறந்த பிரஜைக்கு பொறுமை என்பது மிக முக்கியம் என்பது வாக்குன்டான் மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றது.

இதே போன்றுதான் பூதன் தேவனாரால் பாடப்பட்ட இனியவை நாற்பது சிறந்த கருத்துக்களை முன்வைக்கின்றது. கற்றவர்களுக்கு முன்பு தாம் கற்ற கல்வியை எடுத்துக் கூற வேண்டும். அறிவினில் சிறந்தோரை அடைய வேண்டும். எள்ளளவும் பிறரிடம் யாசிக்காமல் எல்லா வகையிலும் வேண்டும். நன்றாக கற்று தேறியவர்களிடம் சந்தேகங்களை சரி செய்து கொள்ள வேண்டும் தாம் கற்ற கல்வியை எடுத்துக் கூறல் வேண்டும். இவை அனைத்துமே சிறந்த மனிதர்களின் பண்பாக மிளிர வேண்டும் என இனியவை நாற்பது கூறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது முன்னோர்கள் கூறுவார்கள், ஒருவன் நல்லவனா, கெட்டவனா என்பதை அவனின் நண்பனிடம் இருந்து தெரிந்து கொள்ளலாம் என்று. இவ்வாறு கூறுவது ஏன் தெரியுமா? அவன் சிறந்த நாட்டின் பிரஜையாக மாற்றுவதும் அவனது நண்பர்கள் தான். இதனால்தான் பல புலவர்கள் நாலடியாரில் பின்வருமாறு கூறுகின்றனர்

"யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும்-யானை
அறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்தா வால்குழைக்கும் நாய்"

இதில் இருந்து யானை போன்றவர்களது நட்பை நீக்கி நாய் போன்றவர்களது நட்பினை எடுத்துக் கொள்ளல் வேண்டும். ஒரு மனிதனின் வளர்ச்சிக்கு சிறந்த நட்பு இன்றியாமையாததாக மிளிர்கின்றது

"விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்பது நாம் சான்றோர் வாக்கு ஒருவன் வளர்ந்து வரும் போதே தெரியும் அவன் நாட்டின் பிரஜையாக மிளிர்வானா இல்லையா என்று யூகிக்காமல் சிறு வயதில் இருந்து நற்கருத்துக்களை போதிக்க வேண்டும்.

பாரதியார் வாழ்ந்த காலத்தில் பெண்களை அடிமைகளாக வைத்துக் கொண்டு இருந்தனர். அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பு எதற்கு. கணவன் மடிந்தால் மனைவி உடன் கட்டை ஏற வேண்டும் என்று தவறாக கோசங்கள் எழுந்தன. இதனைக் கண்ட பாரதி மிக வேதனையும் கோபமும் கொண்டார். இதனை கண்ட வைரமுத்து பின்வருமாறு கூறுகின்றார்.

"சாத்திரங்கள் பெண் இனத்தை மூடி
மறைத்ததம்மா அந்த ஆத்திரத்தில்
பாரதிக்கு மீசை துடித்ததம்மா"

எனவே காலத்தில் பெண்களை மதித்து நடக்க வேண்டும் என்று பாரதி செய்த பெண் விடுதலை மூலம் தெளிவாகின்றது ஒரு சிறந்த பிரஜை இதனைக் கொண்டு அமைதியான முறையில் இதனை அறிந்து அனைவரையும் மதிக்கும் சமூகமாக நாட்டை வளர்த்தெடுக்க வேண்டும்.

திருவள்ளுவரும் பெற்றவர்களை மதித்து நடக்க வேண்டும் எனக் தனது குறட் பாக்களில் கூறுகின்றார். ஏனெனில் பெற்றோர்கள் இல்லை என்றால் நாம் இந்த உலகிற்கு வந்திருக்க முடியாது. எனவே பெற்றோரை மதிப்பது ஒரு சிறந்த பிரஜையின் சிறந்த பண்பாக மிளிர்கின்றது.

இருப்பதைக் கொண்டு நல்லதை செய்ய நினைக்க வேண்டும் ஆ.மு. ஷரிபுத்தீன் முதுமொழி வெண்பாவில் இப்படி கூறுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“உப்பிலாக் கஞ்சியினையுண்ணு மறுசுவை போல்
தப்பிய கந்தை பீ தாம்பரம்போல்-ஒப்பும்
பனையோலைப் பாயிற்படுத்துறங்கும் வாழ்வார்
மனங்கொண்டது மாளிகை”

எனவே உள்ளதை கொண்டு திருப்தி அடைய வேண்டும் இதுவும் நற்பிரஜை உருவாக்குவத்தில் மிக முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றது.

“நாணாமை நாடாமை நாரின்மை யாதென்றும்
பேணாமை பேதை தொழில்”

தகாதவற்றிற்கு நாணாமலிருந்தல், தக்கவற்றை நாடாமலிருத்தல் அன்பு இல்லை, நன்மை ஒன்றையும் விரும்பாமை ஆகியவை பேதையின் தொழில், எனவேதான் சிறந்த பிரஜையை உருவாக்குவதற்கு புத்தியுள்ள மனிதர்களை கோர்த்து எடுக்க வேண்டும் அவர்கள் அறக்கருத்துக்களை போற்றி வளர்க்க வேண்டும்

அறக் கருத்துக்களைக் கூறி சிறந்த பிரஜைகளை உருவாக்க முடியும். சிறந்த பிரஜைகளை உருவாக்குவதற்கு நாம் இலக்கியங்களையும் கலைகளையும் நன்கு அறிந்து அதனை திறம்பட செயற்படுத்த வேண்டும். எமது முன்னோர்களின் வார்த்தையை கேட்டு நடக்க வேண்டும். அவர்களின் பேச்சினிலே அறக்கருத்துக்கள் மிகைந்துள்ளது என்றால் அது மிகையாது. வாழ்வை செம்மையாக்கும் சீரிய நற் கருத்துக்களை கொண்டவை இலக்கியங்கள்.

சாதி மத வேறுபாடுகளை காட்டக்கூடாது இன ஐக்கியத்துடன் வாழ வேண்டும் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற கருத்து நீங்கி அனைவரும் ஒன்றாக வாழ வேண்டும். ஒருவருடைய எண்ணத்தை, உருவத்தை பார்த்து எடை போடக்கூடாது. இதனையே வெற்றி வேட்கை தெளிவுபடுத்துகின்றது.

“தேம்படுபனையின் றிரள் பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெறவளரினும்
ஒருவற்கிருக்க நிழலாகாதே
தெள்ளியவாலின் சிறுபழத்தொருவிதை
தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதேயாயினும் அண்ணல் யானை
அணிதேர்புரவி யாட் பெரும் படை யொடு
மன்னர்க்கிருகக நிழலாகும்மே”

அதனால்
பெரியோரெல்லாம் பெரியிருமல்லர்
சிறியோ ரெல்லாம் சிறியிருமல்லர்.

ஒருவரின் உருவத்தை எடை போடக்கூடாது எல்லோரையும் சமமாக மதிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்தில் சிறந்த மனிதர்களை உருவாக்குவதற்கு எம் முன்னோர்களை உற்று நோக்குவோமானால் அவர்களும் அறக் கருத்துக்களை போதித்தே வாழ்ந்து உதாரணமாக நெல்சன் மண்டேலா, ஜவகர்லால் நேரு, மகாத்மாகாந்தி போன்றவர் இன்றியாமையாதவர்கள் காந்தி அகிம்சையை தனது ஆயுதமாக கொண்டு செயற்பட்டார். எனவே அமைதியான ஒழுக்கமான முறையில் தனிநபர் மூலம் நாட்டை கட்டி எழுப்பலாம் என்பது சான்று பகரும் உண்மையாகும். ஆகவே எம் நாட்டிலும் நாம் ஒற்றுமையை வளர்த்தெடுக்க வேண்டும் அது எவ்வாறு எனில், அது அமைதியான முறையில் ஆகும்.

ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும் என்ற குறட்பாவில் இருந்து ஒழுக்கம் என்பது ஒரு மனிதனுக்கு எந்தளவிற்கு முக்கியம் என்பது தெளிவாகின்றது. ஒழுக்கம் இல்லாத உயிர் எதற்கும் பயனற்றது எனவே மாணவர்கள் ஆகிய நாம் நாளைய தலைவர்கள் என்ற வகையில் ஒழக்கம் உள்ளவர்களாக மிளிர வேண்டும்.

ஒவ்வொரு சமயமும் அறக்கருத்துக்களை வலியுறுத்துகின்றது. இதன் அடிப்படையில் சிறந்த மனிதர்களை உருவாக்க முடியும் என்பது திண்ணம். இந்து மதம் பதி, பாசத்தை நிலை நாட்டுகின்றது. ஒன்றை இழந்துதான் ஒன்றைப் பெற வேண்டும். விட்டுக் கொடுப்புடன் வாழவேண்டும் என்று கிறிஸ்தவ சமயம் எடுத்து கூறுகின்றது. தற்போது நாடு இருக்கும் நிலைக்கு கட்டாயம் சமாதானம் தேவைப்படுகின்றது. இதனை இஸ்லாம் சாந்தியும் சமாதானத்துடன் வாழ வேண்டும் என்று வலியுறுத்து கின்றது.

"வாசிப்பு ஒரு மனிதனை பூரணப்படுதத்தும்" எனும் பொன்மொழியை வாக்காக கொண்டு வாசிப்பு பழக்கம் எம்மிடம் வளரும் போது, சிறந்த இலக்கியங்களை வாசிக்கும் வாய்ப்புக் கிட்டும். அதன் மூலம் நாம் அமைதியான, ஒழுக்கமான முழுமையான சிறந்த மனிதர்களாக உருவாவதோடு, மற்றவர்களையும் உருவாக்கலாம் என்பது வெள்ளிடை மலையாகும்.

நிஜாமுடீன் இஸ்ரத் ஹின்பா
சிரேஸ்ட பிரிவு - மாவட்ட மட்ட கட்டுரை போட்டியில் 1ம் இடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவுக் கண்

அகிலம் தொடங்கி
அண்டம் வரை
அகன்று கிடக்கிறது
அறிவின் உச்சம்.

மூளைக் கலங்களின்
துருக்களை தூசு தட்டி
துடைத்தெறிந்த மனிதரின்று
நன்றாய் வாழ்கிறார்
நானிலத்தின் மீதினில்
நாலு பேர் போற்ற

தம்மறிவின் திறனை
பலரும் ஏனோ!...
பகுத்தறிந்து பாராமல்
தம்போக்கில் வீணே
வாழ்ந்து கொள்ள.....
தறி கெட்டலையும் மனம்
தொலைந்து விடுகிறது
வாழ்வியலின் வண்ணத்தை.

மட்டமான சிந்தனைக்குள்
மருகி விடும் மனிதனே-மற்றவரை
அழிக்கப் புறப்படுகிறார்
வார்த்தை ஜாலங்களிலும்
சதி-சூழ்ச்சிகளிலும்

நம்பிக்கைத் துரோகங்கள்
மலிந்து விட்ட உலகினில்
வன்மங்களின் வாய்கள்
அகலத் திறந்து வழிவிட....
அதில்....வதங்கி அழுகிறது மனம்.

எம்.எ.மாஹிறா
திறந்த போட்டியாளர்-கவிதை

அனுபவித்து வருவதும் தேடிக்
கிடைப்பதுமதேடாமல் படிப்பதுமே
அறிவுத் திறன்
இதை புரிதலே
சமூக வாழ்வியலின்
அதி உச்சம்


அறிவில் சிறந்தவர்
அடுத்தவரை....
அழ வைக்க மாட்டார்
ஆக்கத் திறன் மிக்க
சேவைகள் பாரத்தையே
பலருக்கும் செய்வர்

உலகியல் வாழ்வது
உலகத்தவருக்கு ஒரு தரமே
அதற்குள் நாமும்
அள்ளுண்டு அலை மோதாமல்
அழகாய் சிந்தித்து
அடுத்தவருக்கு.....
நல்லதைச் செய்து
நாலு பேர்
போற்ற வாழ்தலே

நமக்குப் பெருமை

அறிவு மிகப் பெரியது

அது அறிவுற்றோருக்கே
அரிதாய் புரியும் -இதை
அறிந்து வாழ்தலே
நமக்கு உயர்வு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மருதமுனை மண்ணிலிருந்து மறைந்து போன கலைகளும், கலாசாரங்களும்

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்பு. இந்த மருதமுனை மண்ணிலே மலர்ந்து மணம் வீசிய கலைகளும், கலாசார விழுமியங்களும் இன்று எனது மனம் விட்டு அகலா நினைவுகளாய் ஒன்றன் பின் ஒன்றாக கடலலைபோல என் மனக்கரையை இன்றும் ஈரமாக்கி கொண்டிருக்கின்றது. மறைந்து போன வருடங்களுக்குள் இறந்து போன நாட்களில் புதைந்து போன சம்பவங்களில் சிலவற்றையாவது தோண்டிப் பார்ப்போம்.

முதலில் ஒரு சுன்னத்து கல்யாணம் எப்படி நடந்து முடிகின்றது என்பதைப் பார்ப்போம். முதலில் அக் குறிச்சிக்கு பொறுப்பான கிராம சேவகரின் அனுமதி பெறப்பட வேண்டும். அது மட்டுமல்லாமல் அந்தக்கிராமத்தை சேர்ந்த தற்காப்புக்கலை படித்த ஒரு பலசாலி அழைக்கப்பட வேண்டும். அப்பதான் சுன்னத்து வைக்கப்படும் பிள்ளையை பிடிக்கவேண்டும். இவர்கள் இருவரும் கண்டிப்பாக கல்யாண வீட்டில் பிரசன்னமாக வேண்டும்.

கலியாண வீடொன்றில் புது வேலிகட்டி, குருத்து மணல் கொட்டி, பட்டுத்தாள் வெட்டி, ஊரெல்லாம் ஒட்டி, ஒலி பெருக்கி எடுத்து தென்னை மர வட்டுக்குள் வெச்சி அந்த காலத்து தேனிலும் இனிமையான பாடல்கள் அன்று பகல், இரவெல்லாம் காற்றோடு கலந்து மனதோடு சங்கமிக்கும். அன்று நாலு மணியாகும்போது சுன்னத்து வைக்கின்ற பிள்ளைகளை கிணற்றடியில் கொண்டு வந்து பலகை ஒன்றை போட்டு அதற்கு மேல் வெள்ளச் சீலை விரித்து வெத்திலையும், கொட்டப் பாக்கும் வைத்து அதற்கு மேல் பிள்ளையை நித்தாட்டி தண்ணியள்ளி வார்ப்பார்கள் அதற்கு பிறகு கல்யாணப் பிள்ளையை ஆடைகளால் அலங்கரித்து. கழுத்தினில் பல வண்ணங்கள் நிறைந்த மாலையும், பின்னால் குஞ்சம் வைத்த துருக்கித் தொப்பியை தலையில் போட்டு கதிரையில் இருத்தாட்டுவார்கள். தாய் தந்தையின் கண்களால், ஆனந்த கண்ணீர் சிறு, சிறு துளிகளாய் சிந்திட, உற்றார், உறவினர் அயலவர்கள், அனைவரும் பிள்ளைகளை கட்டியணைத்து முத்தமிட்டு மனதிலே உள்ள மகிழ்ச்சிகளை வெளிப்படுத்துவார்கள்.

மாலை நாலு மணியாகும் போது பிள்ளைகளை காரிலே ஏத்தி பிரதான வீதியாலும், ஊருக்குள்ளாலும், ஊர்வலம் வருவார்கள், மாப்பிளைக்கு காருக்கு முன்னால் கிராமிய கலைஞர்களின் சீனடி, சிலம்படி , வாழ்வீச்சு, பந்து வீச்சென பல சாகச விளையாட்டுகள் வீதிகளை அலங்கரிக்கும். வெட்டையாக கிடக்கின்ற பாழ் வளவெல்லாம் வெடில் சத்தம் காதுகளை பொத்தவைக்கும். கபுறடியில் காணிக்கை போடுவர்கள், இத்தனை சம்பவங்களும் முடிந்து பிள்ளைகள் வீட்டுக்கு வரும்போது இரவு 12 மணி ஆகிவிடும் . சுன்னத்து வைக்க வந்த மாமா. ஒரு கண்ணுக்கு துாங்கி எழுந்திடுவார். அதற்கு முன் சுன்னத்து வைபவம் நடைபெறும். மாமாவிற்கு முன்னால் ஒரு உரல் அதற்குமேலே வெள்ளச் சீலை. உரலை சுற்றியும் பல ஆயுதங்கள். அதனை கண்டதும் சுன்னத்து வைக்கின்ற பிள்ளைகள் பயத்தினால் ஓடி ஒளிந்து மறு நாள் அவனைக் கண்டு பிடித்து சுன்னத்து வைத்த நகைச்சுவையான சம்பவங்களும் நடக்கத்தான் செய்தது.

சுன்னத்து வைக்கின்ற மாமாவுக்கு அக்காலத்தில் (ஒய்த்தா மாமா) எனும் புன்னகை பெயர் கொண்டு அழைத்தார்கள். அது சரியா? பிழையா? என்பது புரியாது. ஆனால் அவர் ஒபரேஷன் டொக்டர், ஷேஜன். ஏன் சிறிய விஞ்ஞானி என்று சென்னாலும் ஆச்சரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவதற்கு இல்லை. ஏன் என்றால் கத்தியால் வெட்டப்பட்ட காயத்தை நாட்டு மூலிகையால் நலமடையச் செய்தவர். சுன்னத்து நடைபெற்ற வீட்டில் சிற்றுண்டி நடைபெற்றது. டையமன்ட் வெட்டுப் போட்ட தொதழ் துண்டு, வாழப்பழம் தேத்தண்ணி குடித்து விட்டு அடுத்த குறிச்சியில் ஒரு வாழ்வு கல்யாணம் எப்படி நடக்கின்றது எனப் பார்ப்போம்.

மணமகள் மணமகனை பாத்திருக்கமாட்டா . மணமகன் மணமகளை பாத்திருக்க மாட்டார். காதல் என்னும் சொல்லை அறிந்திருந்தாலும் . அதன் சுயரூபம் தெரியாதவர்கள் , இருந்தாலும் மணமக்கள் சம்மதத்தோடு . இரு வீட்டார் சம்மந்தம் கலந்து நடைபெறும் திருமணம் வானவேடிக்கைகளும் மின்னொளி அலங்காரமும் வீதிகளில் வெளிச்சம் தரும்.

பகல் பொழுது கல்யாணச்சாப்பாடு பள்ளிவாசல் மோதினாரையும் லெப்பையையும் அழைத்து வந்து குடும்பத்தில் மிக நெருங்கிய உறவினர்களும் கலந்து கொள்வார்கள், நாட்டுக் கோழியும் உருளக்கிழங்கும் ஒரு கறி, பருப்பும் கத்தரிக்காயும் ஒரு துணைக் கறி, பால் புளியாணம் இன்று நினைத்தாலும் எச்சியூறும் நாக்கிலே. ஐந்து மணியாகும் போது மருதமொண்டி விளையாட்டு ஆரம்பமாகும். பனை ஓலையால் பின்னப்பட்ட பெட்டிக்குள். பெண்ணுக்கு தேவையான சில பொருட்களை வைத்து. மாப்பிள்ளை வீட்டிலிருந்து பாவா தகரக்கட்டை அடித்துக் கொண்டு முன்னால் சொல்ல பல பெண்கள் நடந்து செல்வார்கள். கொஞ்சத் தூரம் போனதும் கூடி நின்று குலவைவிடுவார்கள்.

இதே போன்று பெண் வீட்டிலிருந்த ஒரு பெட்டி, பாவாமாரின் கட்டையடித்து, அந்த பெண்களின் குலவை ஓசையும். கடவல்களில் நின்று பார்த்துக் கொண்டிருக்கும் மக்களின் கண்களுக்கு விருந்தளிக்கும். பெண் வீட்டு கூட்டத்திற்குள் பெண்ணுக்கு, மாப்பிளைக்கு மருதமண்டி போட சில வாசனைத் திரவியங்களோடு பெண்ணின் தங்கை மறைந்து மறைந்து வந்து கொண்டு இருப்பா, அந்தப்பிள்ளையை இந்தப்பிள்ளை யாரென்று இனங்கண்டு கட்டிப்பிடிக்க வேண்டும். அத்தர் வாசம் அடுத்த குறிச்சிக்கு மணக்கும். மகிழ்ச்சியோடு இரு வீட்டாருக்கும் ஒன்று சேர்ந்து மாப்பிள்ளை வீட்டுக்கு வருவார்கள்.

மாப்பிள்ளை வெள்ளை புள்கை சேட்டும். மாப்பிளக் கோட்டும் சாறனும் கறுத்த பெல்டும், கையிலே லேஞ்சும். அந்தக் கோலத்தோடு கதிரையில் இருப்பார். மதினிமார்கள் அத்தர் பூசுவார்கள் மருதமெண்டி போடுவார்கள், பால் பழம் கொடுப்பார்கள், இதற்கு பிறகுதான் மாப்பிள்ளை வெளியே வருவார் இவருக்காக பலபேர் காத்திருப்பார்கள். மச்சினனின் கையில் மான் மார்க்கு கறுத்த குடை அதற்கு மேல வெள்ளச்சீலை விரித்திருக்கும். மச்சினன் குடை பிடிக்க மௌலாய சலவாத்துடன் மாப்பிள்ளை அன்ன நடை நடந்து போவார், அத்தர் வாசம் அடுத்த குறிச்சிக்கு மணக்கும்.

மௌலவி முன்னால் செல்ல பின்னால் வரும் மக்களும் சேர்ந்து ஸலவாத்து சொல்வர்கள்.

மௌலாயா சல்லிவசல்
லிம்தாயி மன் அபதா
ஆலா ஹபீபிகஹை
றில்ஹல்கி குல்லிஹிமி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமின்த தக்குறுஜி
ராணின்பிதி ஸலமி
மாஸஜ்த தம்மன்ஜரா
மிம்முக்ல திம்பிதமி

இதைவிட விஷேசமாக கிராமிய கலைஞர்களின் பொல்லடி சந்திக்கு சந்தி வீதியில் புழுதி கிளப்பும். அண்ணாவியார் தலமை தாங்க அவரின் சீடர்கள் 12 பேர் சேர்ந்து.

தந்தனத்தானே தனதானா
தன தான தந்தன தானானா

வத்தும் குளத்தில் வலவிரிச்சி
ரெண்டு தெத்துக்குறட்டைய தான் புடிச்சி
பெண்டிலும் பிள்ளையும்
வித்துபிளைக்கும்
பெருமையைச் செல்லுறன் கேளுங்கடி

இன்னும் பல வரிகள் ராக மிட, கம்புகள் தாளமிட பெண் வீடு வரை அது நீடிக்கும். இத்தனையும் முடியும் போது சுபஹுக்கு பாங்கு சொல்லும் அதன் பிறகு தான் தாலி கட்டி கல்லியாணம் முடிவடையும்.

இன்னும் மரணம் சம்மந்தமானது யாராவது மௌத்தானால் அங்கே லெப்பை மோதினார் சென்று மய்யத்தை குளிப்பாட்டி கபனிட்டு பன்னீர் தெளித்து மையத்தை கொண்டு போவார்கள் அப்போது மௌலவி.

அஸ்ஹது அன்லாயிலாக இல்லல்லாஹ்
வ அஸ்ஸது அன்னமுஹம்மதான்
அப்துஹர வறசூலுஹு
லாயிலாக இல்லல்லஹு ஷஹாத

இந்த ஸலவாத்தை முன்னால் சொல்லிப்போக பின்னால் போகின்றவர்கள் உரத்த குரலில் அவர் சொன்னதை சொல்வர்கள். வீதிகளில் இந்த சத்தம் கேட்டதும் தேனீர் கடையில் இருப்பவர்கள் எழுந்து நிற்பார்கள். நடந்து வருபவர்கள் ஓரமாய் நின்று ஒன்று சேர்ந்து போவார்கள். மௌத்தானது ஆணாக இருந்தால் அந்த வீட்டிற்கு பச்சோலை வெட்டி கிடுகு போல் இளைத்து அந்தகிடுகை நிப்பாட்டி வேலியோடு சேர்த்து இறுக்கி விடுவார்கள். இத்தா வீடு என்பதற்கு அது அடையாளச் சின்னம்.

ஒரு வீட்டில் பெண்பிள்ளை பிறந்து விட்டால் வீட்டுக்கு வெளிச்சம் வந்துவிட்டதென்று தாய், தந்தை அளவில்லா ஆனந்தம் அடைவார்கள். அந்தப்பிள்ளை வளர்ந்து பருவமடைந்து விட்டால், உறவினர்கள் வந்து தென்னை மரத்தில் பாளை வெட்டி. அதை செம்பு குடத்தில் விரித்து வைப்பார்கள், பிள்ளையும் பாளையும் ஏழு நாட்கள் வீட்டு மூலைக்குள் இருக்கும். ஏழாம் நாள் உறவினர்கள் வந்து தண்ணிவாத்து விடுவர்கள் அத்தோடு நெய்யத்துபுக்கையும் ஆக்கி பக்கத்து வீடுகளுக்கு பரிமாறி அந்த சந்தோசத்தை பங்கிட்டு கொள்வார்கள். அன்றிலிருந்து அந்தப்பிள்ளைக்கு வீடுதான் உலகம், வாழ்க்கைப்பட்டு கணவன் என்னும் துணை வந்த பிறகுதான் வெளி உலகம் ஒன்று இருப்பதே அந்த பிள்ளைக்கு தெரியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கடலோடு போராடி, அலையோடு உறவாடி, வலையோடு விளையாடி வாழ்வாதார தொழிலாக மீன் பிடிக்கும் மீனவர்களின் பாதங்களை பட்டுமணல் சுட்டெரிக்க வலை இழுப்பார்கள். அம்பா சொல்லி.

ஏலேலாவல ஓவேலாவல
ஆய்யாடாவல ஆடாடாவலை
தொங்கா தொங்கா
தொங்கக்கிழவா
தொங்கல்ல என்ன சுன்னாம்போ
சுன்னாம்பென்றால் சிவக்காதோ
நாறா என்ன கருவாடோ

இப்படி குருவில்லா அம்பா பாடலை பாடிக் கொண்டு அலுப்புத் தெரியாமல் வலை போடுவார்கள். பல தோணிகளுக்கு ஒவ்வொரு நாளும் மீன்படும் சில தோணிகள் மீனே இல்லாமல் வலை மட்டும் ஈரத்தோடு கரை சேரும் மீன் படாத மீனவர் மனங்கள் உலகம் அழியவில்லை கடலும் வத்தவில்லை மீன்களும் சாகவில்லை நாளைக்கு நாயன் தருவான். என்று கரையேறிப் போவார்கள்.

இதையெல்லாம் கவனித்த தோணிவலை சொந்தக்காறன் தன் குடும்பத்தோடு மஞ்ச சோறாக்கி, முட்டை பொரிச்சி முருங்கெல சுண்டி வாழ இலையும் வெட்டி எடுத்துகிட்டு. அலவாக் கரையோரம் வருவார்கள். அதைக் கண்ட சிறு பிள்ளைகள் பின்னால கூட வந்து உக்காருவார்கள். அந்த பிஞ்சி உள்ளங்களுக்கு வாழ இலையில் அள்ளி அள்ளி வைப்பார்கள். மறு நாள் மடி மடியாய் மீனள்ளிக் கொட்டுவார்கள் இதை கண்ணூறு கழிப்பதென்று சொல்வர்கள்.

றமழான் மாதம் வந்து விட்டால் பின்னிரவில் பாவாமார்கள் கையிலே அரிக்கன்லாம்பை கொளுத்திக் கொண்டு

அல்லாகஹூம்ம ஸல்லிஅலா முஹம்மது
யாரப்பி ஸல்லி அலை வஸல்லிம்
அப்துல்லா புத்திரராம் எங்க நபி
ஆமீனார் பாலகரம் முஹம்மத்
மக்கத்து மாங்கனியாம் எங்கள் நபி
மதீனத்து பூ மலராம் முஹம்மத்

இந்த ஸலவாத்தை சொல்லிச் சொல்லி. தஹறாக்கட்டடை அடித்துக் கொண்டு. உறங்கிக் கொண்டிருக்கும் நோன்பளிகளின் கதவுகளைத் தட்டி எழுப்பி விடுவார்கள் இப்படி ஒரு உரை பல தெருக்களாக பிரித்து பல பாவாமார்கள் அந்தக் கடமையில் ஈடுபடுவார்கள்.

நோன்பு முடிந்து பெருநாள் வந்துவிட்டால் கலைஞர்களின் நாடகங்கள் மைதானத்தில் அரங்கேறும் மின்னொளியில் இலங்கிக் கொண்டிருக்கும். இரவு 8 மணியானதும் ஆண்களும், பெண்களும், சிறுபிள்ளைகளும் ஆராவாரமிட்டு சலசலப்போடு போய்க் கொண்டிருப்பார்கள் கடலோரக் காற்றும், கலை நிகழ்ச்சியும் பெருநாளை புத்தாடை அணிந்து குதூகலமாய் கொண்டாடுவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த காலத்து மக்களின் உணவுகளை எடுத்துக் கொண்டால் சுத்தமும் சுகாதாரமும். கலந்திருக்கும். பந்தலிலே தொங்கும் பாவக்காய், வேலியிலே படர்ந்து போகும் பீக்கங்காய், மழை வந்து வத்திய கேணிக்குள் விளைந்து கிடக்கும் திராய், ஐஸ் அடியாத ஆத்து மீன்களும் கடல் மீன்களும், இன்னும் மருந்தடியா பழ வகைகளும் குடியிருக்கும் இடம் கூரை மேஞ்ச குடில் வளவ வளச்சி கிடுகு வேலி வழவுக்குள்ள கிணறு அதைச் சுற்றியும் வாழை மரம், முருங்க மரம், மா மரம், தென்னை மரம் எந்த நேரமும் ஈரமான வாசல் குளிர்மையான சூழல். கோபதாபம், போட்டி, புறாம, அடிபுடி சண்டை, வஞ்சகம் இல்லாத நெஞ்சமுள்ள மக்கள் மனித நேயம், ஒற்றுமை இப்படிபட்ட மக்கள் இப்பொழுதும் சில கிராமங்களில் வாழ்ந்து கொண்டுதான் இருப்பார்கள் என்றுதான் நினைக்கின்றேன்.

ஆயுள் வேத வைத்தியம் அக் காலத்தில் ஆயுளோடு வந்தது. எந்த நோய் வந்தாலும் கை மருந்தே அவர்களுக்கு கலையாக இருந்தது. தடுமல் வந்தால் பல பட்டோலை பொருட்களை சேர்த்து வேது பிடிப்பார்கள். தலையிடி வந்தால் வேலிப்பருத்தியை அரைத்து நெற்றியில் பூசுவார்கள் இப்படி நாட்டு வைத்தியத்தோடு சேர்ந்து வாழ்ந்ததால் அந்த மக்களுக்கு சீனி இல்லை, அல்சர் இல்லை, பிறசர் இல்லை, கொலஸ்ரோல் இல்லை, இன்னும் பெரிய பெரிய நோய்கள் இல்லை. உடல் நலத்தோடும் தேக ஆரோக்கியத்தோடும் நீண்ட காலம் உயிர் வாழ்ந்து மறைந்தார்கள்.

பண்முக கலைஞர் ஜீனா ராஜ்
மருதமுனை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இஸ்லாமிய கலை கலாசாரமும் இளைஞர்களின் பங்களிப்பும்

கல்முனை மாநகரம் முஸ்லிம் சமூகம் பெரும்பான்மையாக வாழ்வதால் இப்பிரதேசம் தென்கிழக்கின் முகவெற்றிலையென கூறப்பட்டுவருகிறது. எமது பிரதேசத்தின் வரலாற்றுச் சிறப்பினை எமது சமூகம் அறியாமலும் தெளிவில்லாமலும் உள்ளன என்பது கண்கூடு. ஆங்கிலேயோ் 1834ம் ஆண்டு கரவாகுப்பற்று எனப் பெயா்வைத்து அழைத்தனா். "பற்று" என்பது நிர்வாகத்தைக் குறிக்கின்றது. இதனால் அன்று தொட்டு இன்றுவரை நிர்வாகத்திற்குப் பொருத்தமான இடமாக கல்முனையைத் தேர்ந்தெடுத்தனர். இன்று கல்முனையும் கரைவாகுப்பற்றும் பிரிபடாத இரு பெயர்களாகப் புழக்கத்தில் இருந்து வருகிறது.

இப்பிரதேசத்தில் வாழும் நான்கு மதவழிபாட்டு மக்களும் ஐக்கியத்தோடு அவரவர் கலை கலாசாரம் பழமைவாய்ந்த வரலாறுகளை சுவடுகளாக பாதுகாத்து வருகின்றார்கள். முஸ்லிம் மக்களின் பள்ளிவாயல்கள், தர்ஹாக்கள், ஸியாரங்கள், தொழில்கள் மற்றும் வாழ்க்கை முறைகள் என்பவற்றில் கலாசார வரலாற்றுத் தனித்துவங்கள் பிரதிபலிக்கின்றன. இதில் "கொடியேற்றப் பள்ளி" என்று முன்னோர்களினால் அழைக்கப்பட்டுவரும் கல்முனைக் கடற்கரைப் பள்ளி நாகூர் ஆண்டகை தர்ஹா அரசாங்கத்தினால் முஸ்லிம்களின் அடையாளச் சின்னமாக அங்கீகாரம்பெற்று புகழ் வீசிக் கொண்டிருக்கின்றது. அன்றைய முஸ்லிம்களின் தொழிலாக விவசாயமும் மீன்பிடித்தலும் காணப்பட்டது. இயற்கை தந்த அருள் மேற்கே சோறும் கிழக்கே கறியுமாகும். இவ்வசனத்தை அன்றைய முன்னோர்கள் அடிக்கடிக் கூறிவருகின்றார்கள். அவர்களின் தொழில் மற்றும் குடும்ப வாழ்வியலில் தனித்துவமான கலை கலாசார பண்பாடுகள் காணப்பட்டது.

எமது பாரம்பரிய கலாசார அம்சங்களை எமது முன்னோர்கள் கடைபிடித்து வந்தார்கள். அதன் பிரகாரம் எமது கலாசாரமான பொல்லடி, சீனடி, சிலம்படி, கரவை நாடகம், தாலாட்டு பாடல், நாட்டார் கவி, கிராமியப் பாடல்கள் என்பதெல்லாம் எமது சமூக கலாசார வாசனை பொருந்திய ஆவணமாகும். கிராமத்தில் கடைப்பிடித்து நடை முறைப்படுத்தும் முக்கியமான வைபவங்களான கத்னா, கல்யாணம், காதுகுத்துதல், முக்கிய பிரமுகர்களை வரவேற்றல் போன்ற நிகழ்ச்சிகளுக்கு பொல்லடி களிகம்பாட்டம் நடத்தி மகிழ்வார்கள் பொல்லடிக்குத் தலைமை தாங்குவர் "அண்ணாவியார்" என அழைக்கப்படுவார். அவற்றைப்பற்றி தொடர்ச்சியாகப் பார்ப்போம். அக்காலத்தில் காணப்பட்ட "தையார் சுல்த்தான்" அலிபாதுதா அக்பர் ஆகிய நாடகங்கள் மிகவும் பிரசித்தி பெற்றவையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்பிடியும் கலாசார போக்கும்

1928ம் ஆண்டு எமது முன்னோர் கரைவலை மீன்பிடி தொழிலை ஆரம்பித்தார்கள். 50 பேர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ஆளுக்கு 3 ரூபா வீதம் பங்குப் பணம் அறவீடு செய்து சொந்தமாக தோணிவலை வாங்கி தொழிலை ஆரம்பித்தார்கள். இதற்கான முன்நடவடிக்கையாக இக் கூட்டுத் தொழிலுக்கு தத்தி எனப் பெயர் வைத்து அழைக்கப்பட்டது. நடைமுறையில் கறுத்த தண்டயல், சுக்கான் தண்டயல், மந்து தண்டயல், கணக்கபிள்ளை என தத்திகள் காணப்பட்டு நிரந்தரமான சபைகள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தினர். அவர்களிடையே பணம் சேர்க்கப்பட்டு சுபஹான மௌலீது, முகைதீன் மௌலீது, ஹசன் ஹுசைன் மௌலீது, என்பன ஓதப்பட்டு கந்தூரிகள் (அன்னதானம்) கொடுத்து ஒன்றுமையாகக் வாழ்ந்து வந்தார்கள்.

இத் தொழிலை மிக கௌரவத்துடன் ஒரு தலமைத்துவத்தின்கீழ் செய்து வந்தார்கள். வீடுகளுக்கு கிடுகு கட்டுதல் கிணறுக்காக திரவு வெட்டுதல் போன்றவற்றை தண்டயல் மார்களின் ஏற்பாட்டில் மீனவர்களின் வீட்டில் ஒன்றுமையாக செய்து வருவார்கள். அக்காலத்தில் மீனவர்களுக்கான ஒற்றுமை இதில் வெளிப்படும். இவர்கள் தங்களுக்கென தனியான ஆடையை அணிவார்கள் சிறுவால் (முழங்கால் மட்டும் போடக்கூடிய அரைகைச்சட்டையும்) தோளில் முடிச்சி போட்டு கட்டிக் கொள்வார்கள். இவ்வாறான பண்பாட்டு கலாசாரங்கள் மற்றும் குழுச் செயற்பாடுகள் மருகி தனித்தனியான மீன்பிடித் தொழில் மாறி பொலிவிழந்து காணப்படுவது கவலைக்குரிய விடயமாகும்.

விவசாயத்தில் கலாசார போக்கு.

எமது கிராமத்தில் முன்னோர்கள் விவசாயம் செய்வதில் மிக ஆர்வமாக இருந்தார்கள். காணிச் சொந்தக்காரரை போடியார் எனவும் விவசாயம் செய்பவர் வயல்காரன் என்றும் போடியாருக்கு உதவியாளரை முல்லைக்காரன் என்றும் பெயர் சூட்டி அழைப்பார்கள்.

அன்றய விவசாயத்தில் ஒரு புதுமை என்னவென்றால் எருமை மாட்டால் மிதிப்பது நிலத்தை சீராக்க கூலியாட்களை கொண்டு விதைப்பது நச்சுத்தன்மையான பசளைகளைப் பயன்படுத்தாது இயற்கை முறைகளைக் கொண்டு விவசாயம் செய்து நெல் உற்பத்தி செய்து உண்டு நோயற்று பலசாலியாக நீண்ட நாட்கள் ஆரோக்கியமாக வாழ்ந்து வந்தார்கள். விவசாயத்தின் முதல் உற்பத்தி செய்த நெல்லை அரிசியாக்கி வீடுகளுக்கு கொண்டு வந்து புதிர் சோறு சமைத்து குடும்பம் நண்பர்கள் உற்றார் உறவினர்கள் அனைவரும் உண்டு உறவாடி மகிழ்வார்கள்.

திருமண வைபவங்கள்

அக்காலத்தில் திருமண நிகழ்வுகள் வீடுகளிலேயே நடைபெறும் இதற்கான ஏற்பாடுகள் உற்றார் உறவினர்கள் ஒன்று சேர்ந்து குதுகலத்துடன் செய்வார்கள். திருமணத்தின் போது மணமகனின் காவின் பதிவு முடிந்த பின்னர் மணமகனின் சகோதர சகோதரிகள் நண்பர்கள் உறவினர்கள் அயலவர்கள் குடைபிடித்து ஊர்லலமாக மணமகளின் வீட்டிற்கு ஸலவாத்து முழங்க அழைத்துவருவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது இரவானால் பெற்றோல்மெக்ஸ் வெளிச்சத்தில் சிலம்படிக்காரர்கள் கம்பு வீசிக்கொண்டு செல்ல பட்டாசு கொழுத்தி பெண்கள் வீதி அருகில் நின்று குரவையிட்டபடி ஆரவாரத்துடன் செல்வார்கள். வீதியின் இருமருங்கிலும் பொதுமக்கள் நின்று பார்த்து ரசித்து மகிழ்வார்கள்.

கத்னா கல்யாணம் (சுன்னத்துக் கல்யாணம்)

கத்னாக் கடமை என்பது முஸ்லிம்களின் கட்டாய சுன்னத்தான கடமையாகும் இதனை நமது முன்னோர்கள் தனியான கலாசார நடைமுறைகளினூடகவே செயற்படுத்தி வந்தார்கள். தனது ஆண்பிள்ளைக்கு கத்னா செய்ய நினைத்து பெற்றார்கள் ஏற்பாடுகளை செய்வார்கள் அப்போது அப்பிள்ளை மாப்பிள்ளை என்று செல்லவாக அழைப்பார்கள். கத்னா செய்வதற்கு "மாமா" என்றழைக்கப்படும் பயிற்சி பெற்றவர் கட்டாயம் அழைக்கப்படுவார். அவர் வந்து பிள்ளைக்குக் கத்னா செய்து விட்டுச் செல்வார். இதன் பின்னர் புண் சுகமடைந்ததும் மாப்பிள்ளைக்கு தண்ணீர் ஊற்றும் நிகழ்வு நடைபெறும். திருமணத்திற்கு அழைப்பது போன்று உறவினர் மற்றும் ஊரார்களை அழைப்பார்கள்.

பின்னர் மாப்பிள்ளைக்கு கலாசார உடை அணிந்து துரிக்கித்தொப்பி அணிந்து இரு காளை மாடு பூட்டிய வண்டியில் கதிரை போட்டு மாப்பிள்ளையை அமரச் செய்வார்கள். அதற்கு பின்னால் அடுத்த வண்டியில் பொல்லடிக்காரர்களை இரு மருங்கிலும் அமரச் செய்து ஸலவாத்துப் பாடல்கள் பாடி ஊர்வலம் போவார்கள். வீதி ஓரங்களில் பெண்கள் நின்று பார்த்து ரசிப்பார்கள் இரவானால் கணவாலாம்பு (அரிக்கான்லாம்பு) கொழுத்துவார்கள். உறவினர்கள் நிறுத்தி மாப்பிள்ளையை கீழே இறக்கி அவர்களின் வீட்டுக்கு அழைத்துச் சென்று சோடா போத்தல் பானம் கொடுத்து வெகுமதி கொடுத்து அனுப்பிவைப்பர்கள். இவைகள் கலாசார பழக்கமாக இருந்து வந்தது தற்போதைய காலத்தில் இந்த நடைமுறை கண்ணால் காண்பது அரிதாகி விட்டது என்பது காலத்தின் கோலமாக உள்ளது.

இவ்வாறான கலாசார நிகழ்வுகள் மறைந்துபோனதன் காரணமாக குடும்ப சமூகங்களிடையே ஒற்றுமையும் உறவும் தூரமாகிவிட்டது. இதனை மீளவும் கட்டியெழுப்புவதற்காக கல்முனை கலாசார பேரவை மேற்கொண்டு வரும் செயற்பாடுகள் பாராட்டப்பட வேண்டியது. மறைந்து போன அல்லது மறந்து போன இவற்றை கலை உள்ளம் கொண்ட அனைவரும் புத்துயிர் அளித்து புதுப்பிக்க வேண்டும். இது எமது எதிர்கால இளைஞர்களுக்கு கட்டாய தேவையாக உள்ளது. இதனை உயிர்ப்பித்து பயிற்சி கொடுக்க அனைவரும் முன்வர வேண்டும்.

கலாபூசணம் கல்முனை நெய்னா முகம்மது

முன்மாதிரி முதியோர் சங்கத்,

தலைவர் -முன்மாதிரி முதியோர் சங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காக்கப்பட வேண்டிய கலை இலக்கியம்

இலங்கைத் திரு நாட்டின் இணையற்ற இருப்பிடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கும் கிழக்குமாகாணத்தின் புகழ்பெற்ற தென்கிழக்குப் பிரதேசத்தின் மணிமுடியாக விளங்கும் கல்முனை மாநகரம் ஒளிவிட்டு பிரகாசித்துக் கொண்டிருப்பதை யாரும் மறக்க முடியாது. இப்பிரதேசத்தில் வரலாற்றுக் காலந்தொட்டே மனிதர்கள் வாழ்ந்துவந்து வந்ததாக வரலாறு கூறுகிறது. அக்காலம் தொட்டே கலை இலக்கியங்கள் வளர்ந்து வந்திருப்பதை ஆரம்பகால நூல்கள், கல்வெட்டுகள் மூலம் அறியக்கிடைக்கிறது.

மேலும் தென்கிழக்குப் பிரதேசத்தில் அரேபியர்களின் வருகையோடு முஸ்லீம்களின் கலாசார விழுமியங்கள், பண்பாடுகள், பழக்க வழக்கங்கள் தொன்று தொட்டு வந்த தொடர்கதையாக இருந்திருக்கின்றது. இதனை தொடந்து முஸ்ஸீம்களின் இனவிரிசல் காரணமாக ஊர்கள் உருவாத் தொடங்கின. அந்தவகையில் மூவேந்தர்கள் இந்தியாவை ஆட்சிசெய்தது போன்று கல்முனை மாநகரத்தை மூன்று ஊர்த் தலைவர்கள் நிர்வகித்ததாக வரலாறு சான்று பகர்கின்றது. அதில் மூத்த ஊராக கல்முனையும். அடுத்த சகோதரனாக மருதமுனையும் இளைய சகோதரனாக நற்பட்டிமுனையும் உருவாகி இருக்கிறது.

இந்த மும்மணி ஊர்கச் சகோதரர்கள் ஒருவருக்கு ஒருவர் உதவியாகவும், ஒத்திசையாகவும் இன்று வரை வாழ்ந்து வருகிறார்கள், இவர்களுடைய பழக்க வழக்கங்களோடு ஒன்றுவிட்ட சகோதரன் போல கலை இலக்கியங்களும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

ஆனால் இக்காலத்தில் பண்டைய கிராமிய இஸ்லாமியக் கலைகள் அழிந்து கொண்டிருக்கின்றன அக்கலைகளை மீளப்பாதுகாத்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொரு முஸ்லீம் இலக்கிய இரசனை உள்ளவர்களின் பொறுப்பாகும். அந்த வகையில் நற்பிட்டிமுனை முஸ்லீங்களின் அழிந்து கொண்டிருக்கும் கலை இலக்கியங்களினை சற்று நோக்குவோம்.

1. குரவையிடுதல்
2. பொல்லடித்தல்
3. கும்மியடித்தல்
4. ஆராத்தியெடுத்தல்
5. கட்டியம் கூறுல்
6. கவிபாடுதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. குரவையிடுதல்

அக்காலத்து பெண்கள் சந்தோச நிகழ்வுகளிலும் பூப்பு நீராட்டுதல், திருமண நிகழ்வு, சுன்னத்து கல்யாணம் (கத்னா வைபவம்) இன்னும் மங்களம் தரும் நேரங்களிலும் குரவையிடுவார்கள். ஐந்தாறு பெண்கள் ஒன்று சேர்ந்து நாக்குகளை வளைத்து சத்தமிடும் போது ஒருவகை ஓசை வெளியாகும் அதுவே குரவை இடுதலாகும்

2. பொல்லடித்தல்

இதை களிகம்பு அடித்தல் என்றும் சொல்வார்கள். இது மிகவும் பழைமை வாய்ந்த கலையாகும். இக்கலை முற்காலத்தில் எல்லா ஆண்களும் கற்றிருந்தார்கள். இக்கலை கிராமியப் பாடல்களோடு அல்லது வரலாற்றுப்பாடல்களோடு ஆடப்படும். இதற்கு அண்ணாவியர் என்பவர் தலைவராக இருப்பார். அவருடைய கட்டளையோடு நிகழ்வு ஆரம்பமாகும். அண்ணாவியர் பாடலைப்பாடுவார் ஏனையவர்கள் அவர்களில் கைகளில் உள்ள பொல்லுகளால் அடித்து ஆடுவார்கள். இது ஓசையாகவும் அழகாகவும் இருப்பதைக் காணலாம் ஆடுபவர்கள் 06 (ஆறு) தொடக்கம் 12 பேர் குழுக்களாக இயங்குவார்கள். கல்யாண நிகழ்வுகள், களியாட்ட நிகழ்வுகளில் இக்கலை நிகழ்வு நடாத்தப்படும்.

3. கும்மியடித்தல்

இந்த நடனம் அரேபியாவில் இருந்து இங்கு பரவியதாகக் கருதப்படுகிறது. தமிழர்களின் கும்மி நடனத்தை விட வித்தியாசமானதாக இருக்கும். அரேபியா, பாக்கிஸ்தான், பங்காளதேசம் போன்ற நாடுகளின் பாணியில் இந்த நடனத்தை ஆடுகிறார்கள் இடுப்பை வளைத்து கைகளை ஒன்று சேர்த்து அடிக்கும் கும்மி நடனம் பார்ப்பவர்களை பரவசப்படுத்தும். இந்த நடனம் கலாச்சார நிகழ்வுகளின் போதும் களியாட்ட நிகழ்வுகளிலும் ஆடப்படுகிறது.

4. ஆராத்தியெடுத்தல்

இந்த நிகழ்வு திருமணங்களின் போதும், கத்னா வைபவங்களிலும் ஏனைய நிகழ்வுகளிலும் எடுக்கப்படுகிறது மணமக்களை வாழ்த்துவதற்காக இவற்றை செய்கிறார்கள் கால்வைத்த தட்டையான பாத்திரத்தில் (வட்டா) கோதுமை மாவைக் கொண்டு அழகான களியாட்ட உபகரணம் அமைத்து அதில் அழகிய வர்ண திசுக்களை கொண்டு அலங்காரப்படுத்தி மெழுகுவர்த்தி கொளுத்தி மணமக்களின் தலையை சுற்றி அசைப்பார்கள் அது அழகான காட்சியாக இருக்கும்.

5. கட்டியம் கூறல்

திருமண நிகழ்வுகளின் போது மாப்பிள்ளை அழைத்துவரும் சந்தர்ப்பத்தில் அவர்களோடு கூடவரும் அண்ணாவி ஒருவர் மணப்பெண்ணின் வீட்டின் முன் நின்று மாப்பிள்ளையை தடுத்து நிறுத்தி வைத்து பாடல்பாடுவர் மணமகளை பற்றி பெருமையாகப் பேசி இவரை உங்களுக்கு தருவதாக விடுத்தால் எங்களை கவனிக்க வேண்டும் என்றும் பாணியில் இவை அமையும் பாடும் அண்ணாவியாருக்கு பட்டுச்சால்வை கொடுக்கும் வரை இந்நிகழ்வு தொடரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கவிபாடுதல்

கவிபாடுதல் இவ்வூரவர்களுக்கு கைவந்த கலையாகும் எடுத்ததுக்கெல்லாம் கவிமூலமே பதில் சொல்லுவார்கள் இரவு வேளைகளிலும் பகலிலும் பொழுது போக்கிற்காக கவிபாடுவார்கள், கோபப்படும் போது அறமாகவும் பாடுவார்கள், களிப்புக்காகப் பாடுவார்கள், போட்டிக்காகவும் பாடுவார், இப்படி பலவகைகளில் கவியாகப்பாடுவார்கள். உதாரணத்திற்கு ஒரு சில கவிகள்.

அறப்பாடல்

மாடுகட்டிக் காசுளைக்கும்
மாயவனாம் ஆனையனை
தூளிகட்டி கொண்டுவர

தூய்யோனே உதவி செய்வாய்

ஆனையன் என்பவனை இந்த அறப்பாடலை பாடிய பின்பு தூளியில் கொண்டு வந்ததாக வரலாறு சொல்லுகிறது. நெற்செய்கைக்கு பெயர் போன நற்பிட்டிமுனையில் வேளாண்மை விதைத்த பின்பு பறன் கட்டி காவல் இருப்பார்கள். பறண் என்பது உயரமான நான்கு கால்களை நாட்டி அதன் மேல் இருப்பதற்குரிய கூடாரம் அமைத்து அதில் ஏறியிருத்து ஒருவர் ஒருபாடலைப் பாட மற்றவர் அதற்கு எதிர்ப்பாட்டுப்பாடுவார் இவர்கள் காவல் இருப்பது யானை, பன்றி, மாடு, ஆடுகள், குருவிகள் வராமல் பாதுகாப்பதாகும்.

குருவீக்காகப்பாடும் பாடல்

சட்டித் தலைக்குருவி
சனியன் வெள்ளைக்குருவி
ஒட்டித் தளமுரைக்கும்
கிளையில் குஞ்சுக் குருவி
கீழே நுளையும்
பறக்கேலா வயற்குருவி
குருவியைப் பாராய்

நெல்லுத்தின்னும் குருவியைப் பாராய்

இப்படியான கலை இலக்கியங்கள் அழிந்து போவதையிட்டு கவலை கொள்கிறேன் இக்கலைகளைப் பாதுகாக்க இலக்கியவாதிகளோடு அரசும் துணை நிற்க வேண்டும் என்பது எனது அவாவாகும்.

**அல்ஹாஜ் எம்.எல்.ஏ.கையூம்**
முன்னாள் அதிபர்
கமு-அல் அக்ஸா மத்திய மகா வித்தியாலயம்
நற்பட்டிமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "கொரோனாவின் கோரத் தாண்டவம்"

சீனாவின் ஹுபேய் மாகாணம் வூகான் நகரில் கடந்த டிசம்பர் மாதம் கண்டறியப்பட்ட கொவிட்-19 வைரஸ் தற்போது உலகின் 219 நாடுகளில் பரவி பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது. கொரோனாவிற்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் பணி இறுதிக் கட்டத்தை நெருங்கி விட்டது. எனினும் கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இந்நிலையில் உலகம் முழுவதும் கொரோனாவால்(01.12.2020) இன்றுவரை 63,576,762பேர் தொற்றுக் குள்ளாகியுள்ளதுடன் 1,473,452 மரணங்கள் பதிவாகியுள்ளன. அத்தோடு 43,973,953 பேர் குணமடைந்திருப்பது மனதுக்கு ஆறுதலைத் தருகின்ற விடயமாகவுள்ளது.

மேலும் கொரோனா தொற்றின் காரணமாக பல நாடுகள் பொருளாதார சரிவை சந்தித்துள்ளதுடன். பல மில்லியன் கணக்கானோர் தொழில் வாய்ப்புகளை இழந்துள்ளனர். அத்துடன் 6.32 இலட்சம் குழந்தைகள் கொரோனாவல் பாதிக்கப்பட்டுள்ளதுடன் (WHO), 9.7 மில்லியன் சிறுவர்கள் ஒருபோதும் பாடசாலைக்குத் திரும்ப முடியாத நிலையுள்ளதுடன் (SAVE THE CHILDREN), இந்தவருடத்தில் மேலும் 132 மில்லியன் மக்கள் மோசமான பட்டினியை எதிர் கொள்ளும் அபாயம் காணப்படுகிறது (UNO)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகாலத்தில் உலகின் கொரோனா மையமாகவிருந்த ஐரோப்பாவில் இந்த நோயின் தாக்கம் வெகுவாக குறைந்து, பல மாதங்களாக கட்டுக்குள் இருந்து வந்தது. ஆனால் இவ்வளவு காலமாக அடங்கி இருந்துவிட்டு தற்போது கொரோனா நோய்த் தொற்று மீண்டும் வீரியம் எடுத்துள்ளது உண்மையிலேயே அபாயகரமான போக்கு என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

தற்போதைய நிலையில் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட 10 நாடுகளில் 07 நாடுகள் ஐரோப்பாவில் இருக்கின்றன. ஐரோப்பாவில் குளிர் காலம் தொடங்கிய பிறகு கொரோனா பரவலின் இரண்டாவது அலை வீசும் என்று நிபுணர்கள் ஏற்கனவே எச்சரித்திருந்தனர். குளிர் காரணமாக பொது மக்கள், உள்ளரங்குகள், மற்றும் மூடப்பட்ட இடங்களில் அதிக நேரம் செலவிடுவதனால் இது கொரோனாப் பரவலைத் தீவிரப்படுத்தும் என்று அவர்கள் கூறியிருந்தனர். ஆனால் குளிர் காலம் தொடங்குவதற்கு முன்னரேயே ஐரோப்பாவில் இரண்டாவது அலை தொடங்கி விட்டதை தற்போதைய புள்ளிவிபரங்கள் உணர்த்துகின்றன.

அமெரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும், நாளொன்றுக்கு மூன்று லட்சத்திற்கும் அதிகமானோருக்கு தொற்று உறுதி செய்யப்படுகிறது. இதன் காரணமாக பல ஐரோப்பிய நாடுகள் மீண்டும் பொது முடக்கத்தை அமுல்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன. கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை முதலாவது கோடியாவதற்கு எடுக்கப்பட்ட காலம் 06 மாதங்கள். (27-06-2020) இரண்டாவது கோடியாவதற்கு எடுத்தகாலம் 47 நாட்கள். (10-08-2020) மூன்றாவது கோடியாவதற்கு 37 நாட்கள், நான்காவது கோடியாவதற்கு 31 நாட்கள், ஐந்தாவது கோடியாவதற்கு 20 நாட்கள் (07-11-2020) ஆறாவது கோடியை எட்டிப்பிடிக்க 17 நாட்களே தேவைப்பட்டன. (25-11-2020) இந்த விபரங்களை ஆராய்ந்து பார்க்கும் கொரோனாவின் கோரத்தாண்டவத்தை இலகுவில் புரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. அத்தோடு மரண எண்ணிக்கையிலும் பன்மடங்கு அதிகரிப்பு காணப்படுகிறது. இன்னும் ஓரிரு தினங்களில் மரண எண்ணிக்கை பதினைந்து இலட்சத்தை அண்மிக்க இருக்கிறது. அதேவேளை தடுப்பு மருந்து இன்னும் பாவனைக்கு வராமலேயே இதுவரை 4 கோடியே 40 இலட்சம் பேர் (01.12.2020) குணமடைந்திருப்பது பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு மன ஆறுதல் தரும் விடயமாகவுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையைப் பொறுத்தவரை ஜனவரி 27 ஆம் திகதி நாட்டில் முதலாவது தொற்றாளராக சீனப் பெண்ணொருவர் இணங்காணப்பட்டார். இதையடுத்து ஒக்டோபர் 04 ஆம் திகதி வரையான 09 மாதங்களில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 3396 ஆகக் காணப்பட்ட அதைவேளை மரண எண்ணிக்கை 13 ஆக இருந்தது. குணமடைந்தோர் எண்ணிக்கை 3254 ஆகவும் காணப்பட்டது. ஒக்டோபர் 04 ஆம் திகதி மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் பெண்ணொருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து இன்றுவரை (04.12.2020) மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 26038, மரணம் 129, குணமடைந்தோர் 19032 ஆகும்.

முதலாவது அலையில் கொழும்பு மாவட்டத்தில் மட்டுமே 100 இற்கும் அதிகமான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டிருந்தனர். கொழும்பு தவிர கம்பஹா, புத்தளம், களுத்துறை, அனுராதபுரம், குருநாகல், கண்டி மற்றும் பொலநறுவை மாவட்டங்களில் 10-40 இடைப்பட்ட எண்ணிக்கையான தொற்றாளர்களே பதிவாகயிருந்தனர். ஏனைய மாவட்டங்களில் மிகக் குறைந்தளவான இணங்காணப்பட்ட அதைவேளை வவுனியா, திருகோணமலை, நுவரெலியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் ஒரு தொற்றாளரேனும் இனங்காணப்படவில்லை. ஆனால் இரண்டாம் அலையில் நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கொரோனா வைரஸ் நோய்த்தாக்கத்தின் கோரத் தாண்டவத்திலிருந்து உலக மக்கள் பாதுகாப்புப் பெற இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

பசீர் அப்துல் கையூம், **B.A(Cey)**
கட்டுப்பாட்டாளர்,
பிறை எப்.எம்..இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்,அக்கரைப்பற்று
(உதவி செயலாளர், கலாசார அதிகாரசபை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "வாசிப்பினூடான கற்றல்" மாணவர்களின் வாழ்வை பிரகாசிக்க செய்யும்

"கண்டது கற்க பண்டிதனாவான்" எனும் புது மொழிக்கேற்ப பத்திரிகைகள், சஞ்சிகைகள் மட்டுமன்றி விளம்பர பதாதைகள் துண்டுப் பிரசுரங்கள், பெயர் பலகைகள் போன்ற கையினால் எழுதப்பட்ட, அச்சில் வடிக்கப்பட்ட மற்றும் இணையத்தள செய்திகள் அனைத்துமே வாசிக்க தகுந்தவையாகும்.

பாடசாலை கல்விக்கு வாசிப்பு பழக்கம் அத்தியவசியமாகும். வாசிப்பு பழக்கம் நம்மில் ஏற்பட்டால் அந்த பழக்கத்திற்கு நாம் அடிமை ஆகிவிடுவோம் பொதுவாக எந்தவொரு விடயத்திற்கும் அடிமையாவது நன்றன்று எனக் கூறப்பட்டாலும் வாசிப்பு பழக்கம் அதற்கு விதிவிலக்காகும். வாசிப்பு பழக்கத்தின் மூலம் வாழ்கைக்கு பல்வேறு நன்மைகள் ஏராளமாக கிடைக்கின்றன வாசிப்பு பழக்கத்திற்கு அடிமையானவர்கள் பொதுவாக எந்த விதமான கெட்ட பழக்கங்களுக்கும் அடிமையாகுவதில்லை காரணம் வாசிப்பு பழக்கத்தினால் கிடைக்கின்ற நல்ல விடயங்கள் மூலம் அவர்கள் செப்பனிடப்படுகின்றமையேயாகும். "நல்ல புத்தகங்களும் நல்ல நன்மையோகும்".

மாணவர்களின் பிரதான பொறுப்பு கல்வி கற்றலாகும். பெற்றோர் உட்பட பாடசாலைகள், அரசாங்கம், சமுதாயம் என்பன மாணவர்கள் கல்வி கற்பதை அதிகம் அதிகம் எதிர்பாக்கின்றனர். இலங்கையில் கல்வி இலவசமாக அளிக்கப்படுகின்றது. 1943ம் ஆண்டு கல்வி அமைச்சராக இருந்த CWW. கண்ணங்கர அவர்களின் சீர்திருத்த திட்டத்தின் முக்கிய விதந்துரையாக இலவசக் கல்வி அமைந்தது. அதற்கமைய பாலர் பாடசாலை முதல் பல்கலைக் கழகம் வரை இலவசமாக கல்வி அளிப்பதற்கும் அவ்வாறே தமிழ் மொழியில் கல்வி கற்பதற்கான உரிமை மற்றும் அனைத்து பாடசாலைகளிலும் ஆங்கிலம் கற்பித்தல், தொடர்பில் பாடத்திட்டத்தை அமுல்படுத்தல் என்பன இந்த ஆலோசனையில் உள்ளடங்கியிருந்தது.

பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். பாராட்டுதல், குறைகளை எடுத்துக் கூறல் பரிசில்களை வழங்குதல், தேவையான வேளைகளில் தண்டனைகளை வழங்குதல், போட்டிகளில் ஈடுபடுதல் என்பன இவைகளில் சில வழிகளாகும். இவைகளில் குறைகூறுதல் மற்றும் தண்டனை வழங்குதல் போன்ற செயற்பாடுகள் மாணவர்களுக்கு மகிழ்சியற்ற செயல்களாகவும் அதேவேளை பாராட்டுதல், பரிசில்கள் வழங்குதல் மற்றும் போட்டியில் ஈடுபடுதல் என்பன அவர்களுக்கு மகிழ்சியளிக்கும் செயல்களாகவும் விளங்குகின்றன. எனினும் பிறரின் உந்துதலால், கல்வி கற்பதைவிட மாணவர்கள் தாமாகவே உணர்ந்து வாசித்து கல்வி கற்பதே சிறந்ததாகும்.

"நுனிப் புல் மேய்வதால்" தான் நினைத்த மாதிரி சரியாக வாசிக்கவும் முடியாது. கற்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும் முடியாது. தாமாகவே சிந்தித்து செயற்படுவதானது ஒருவரின் உளரீதியான மிகப்பெரும் சக்தியாகும். சிறுபராயம் முதற்கொண்டே பல மாணவர்கள் பெற்றோர் சொல்லைக் கேட்டு கல்வி கற்கின்றனர் ஆரம்பக் கட்டம் என்பதால் இது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலமானதே எனினும் மாணவர்கள் தாமாகவே முன்வந்து கற்பதே சிறந்ததாகும். தேடி ஆராய்ந்து வாசித்து கற்பதால் மாணவர்களின் வாழ்வு பிரகாசிக்கும் என்பது மாத்திரமல்ல அவர்கள் ஒரு வளமாகவும் மாறுவார்கள். உலகப் பொது விடயங்களையும் சேமித்துக் கொள்வார்கள். தேவையான போது வெளிப்படுத்திக் காட்டுகிறார்கள். இதனாலேயே அந்த மாணவர்கள் கட்டுரை, கவிதை, சிறுகதைகள், பேச்சுக்கள் உள்ளிட்ட போட்டிகளுக்கு சென்று பிரதேச, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய ரீதியில் வெற்றி வாகையும் சூடுகிறார்கள்.

வாசிக்கும் போது உரிய விடயத்தில் அவதானம் கற்றலில் முக்கிய இடத்தை பெறுகின்றது. அனேகமாக ஒரு விடயத்தில் அவதானம் செலுத்துவது என்பது சிறு வயதில் கடினமான விடயமாகவே இருக்கும் எனினும் மனதை அமைதியாக வைத்து ஒரே விடயத்தில் கவனம் செலுத்த பழக வேண்டும். கற்றலில் தொடர்ந்து ஈடுபடுவது சிரமமாக இருந்தால் இடையிடையே வேறு பல விடயங்களிலும் ஈடுபடுதல் வேண்டும். அவ்வாறு செய்யும் போது செய்யும் வேலைகள் அல்லது மற்றும் விடயங்களில் முழுக் கவனத்தையும் செலுத்தப் பழகிக் கொள்ள வேண்டும்.

மாணவர்கள் வாசிப்பதன் ஊடாக மொழி உச்சரிப்புக்கான பயிற்சியும் கிடைக்கின்றன. மேலும் மற்றவர்களுக்கு கேட்காதவாறு வாசிக்கும் போது கண்களால் எழுத்துக்களை இனங்கண்டு மனம் விளங்கிக்கொள்ளும் பயிற்சியையும் பெறுகிறார்கள். ஒருவர் அறிந்துகொள்ளும் சொற்களின் எண்ணிக்கை அடிப்படையிலேயே சிந்தனை ஆற்றல் வளர்கின்றது. எனவே கல்வியில் முன்னேற்றம் அடைய விரும்பும் மாணவர்கள் வாசிப்பதன் மூலம் அதிக அளவு சொற்களையும் கற்றுக் கொள்வது அவசியமாகும்.

ஒரு புத்தகத்தை படிக்கும் போது அதிலுள்ள பல்வேறு விடயங்களை நாம் அறிந்து புரிந்து கொள்ளலாம். தொடர்ந்து வசிக்கும் போது நம் மனதில் ஆழமாக பதிந்து தேவையான போது அவற்றினை நினைவுபடுத்துவதகவும் அமையும். இப்படியான வாசிப்பு, அறிவு தேடுதலுக்கும் புரிதலுக்கும் கற்றலை இலகுபடுத்துவதற்கும் எழுத்தாற்றல் மற்றும் பேச்சாற்றலை அதிகரிப்பதற்கும் உதவும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை.

பத்திரிகைகள் எம்மத்தியில் நாளாந்த, வாராந்த, மாதாந்த பத்திரிகைகள் என வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவைகளை நாம் தொடர்ந்து வாசிப்பதன் மூலம் உள் நாடு, வெளிநாட்டு அரசியல், பொருளாதார விளையாட்டு நிகழ்வுகள் உட்பட பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் உட்பட பல்வேறு துறைகளின் விடயங்களை பரவலாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கின்றது. எனவே ஓய்வு நேரங்களில் புத்தகங்கள், பத்திரிகைகள், நாவல்கள், சிறுகதைகள், இலக்கண, இலக்கிய நூல்கள் மற்றும் அறிஞர்களின் தத்துவம் சார்ந்த நூல்கள் போன்றவற்றை வாசிப்பதற்கு பழக்கப்படுத்தி கொண்டால் மனம் அமைதியடையும் சிறந்த ரசனையும், ஆர்வமும் அதிகரிக்கும். கெட்ட சிந்தனையில் இருந்து விடுதலை பெறவும் முடியும். எனவே "வாசிப்பினூடான கற்றல்" மாணவர்களின் வாழ்க்கை பிரகாசிக்க செய்யும் என்பது திண்ணம்.

எம். ஜ.ஃபர்
உதவி திட்டமிடல் பணிப்பாளர்
பிரதேச செயலகம்
கல்முனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன உறவும் கல்முனையும்

கல்முனை முஸ்லிம்கள், பல்லின சமூக அமைப்புக்களைக் கொண்ட மாநகரப் பிரதேசத்தில் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இவர்கள் பெரியநீலாவனை, பாண்டிருப்பு ஆகிய பிரதேசங்களில் தமிழ் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட மக்களுடன் சிறுபான்மையாகவும், நற்பிட்டிமுனை பிரதேசத்தில் தமிழ் மக்களைவிடவும் பெரும்பான்மையாகவும், மருதமுனை, சாய்ந்தமருது பிரதேசங்களில் முஸ்லிம்களை மட்டும் கொண்டதாகவும் அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

கல்முனையைப் பொறுத்தவரையில் இங்கு முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவும் தமிழ் மக்கள் இரண்டாம் பெரும் பான்மையாகவும், கிறிஸ்தவர்களும், சிங்களவர்களும் ஏனைய இனங்களாக வாழ்கின்றனர். இவர்கள் நீண்டகால வரலாற்றைக் கொண்டவர்களாக பூர்வீகமாக இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

கல்முனையில் வாழும் தமிழ் - முஸ்லிம் ஆகிய இரு பிரதான இன மக்களுக்கு இடையிலாக பல்வேறு இனக்கப்பாடுகளும், ஒற்றுமைகளும், பாரம்பரியமாக இருக்க, கடந்த காலங்களில் நிலைகொண்டிருந்த பயங்கரவாத சூழலின் போதும், அதற்குப் பின்னரான காலங்களிலும் இப்பிரதேசம் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளது. இருந்த போதிலும் இனவுறவுகளை தொடர்ந்து செல்ல இவ்விரு சமூக கட்டமைப்புக்களும் முயற்சித்துள்ளன.

ஆரம்ப காலங்களிலிருந்து இப்பிரதேசத்தில் இணைந்து வாழும் இவ்விரு இனத்தவர்களும் விவசாயம், கல்வி, மீன்பிடி, வர்த்தகம், ரீதியான மிகநெருக்கமான உறவுகளைக் கொண்டவர்களாக இருந்து வருகின்றனர். பொருளாதார ரீதியாக மட்டுமல்லாமல் அரசியல், ஆன்மீக, நிருவாக ரீதியாகவும் 1985 வரையான காலப்பகுதியில் ஓரிரு சம்பவங்களைத் தவிர அதிகளவான முரண்பாடுகள் காணப்பட்டதாக தெரியவில்லை.

இங்கு காணப்பட்ட தமிழ் - முஸ்லிம் இன உறவானது முன்மாதிரியாகக் கொள்ளக்கூடியளவில் சிறப்புமிக்கதாக இருந்துள்ளது. இப்பிரதேசத்தில் வாழும் ஒவ்வொரு இனத்தவர்களும் தமது தனித்துவத்தை மற்றைய இனத்தவர்கள் கண்ணியமாக மதிக்கப்பழகியுள்ளனர். இங்கு பெரும்பான்மையாக வாழும் சமூகம் சிறுபான்மையாக வாழும் சமூகங்களை புறக்கனித்தாக தெரியவில்லை.

பொருளாதார போட்டி இங்கு வெளிப்படையான எந்த ஒரு முரண்பாடுகளையும் ஏற்படுத்தவில்லை. இப்பிரதேச வர்த்தக நிலையங்களும், மக்களும் பிரித்து நடைமுறைப்படுத்த முடியாத வகையில் பிணைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியைப் பொறுத்த வரையில் கத்தோலிக்க மிஷனரிப் பாடசாலைகள், தமிழ் பாடசாலைகள், சிங்கள மகா வித்தியாலயங்களில் முஸ்லிம் மாணவர்களும், முஸ்லிம் பாடசாலைகளில் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் ஊடாக எவ்விதமான பாகுபாடுகளுமின்றி கல்வி செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். இதன் மூலம் முஸ்லிம்களுக்கும் ஏனைய சமூகங்களுக்கிடையில் சிறுவர்கள் முதல் பெற்றோர்கள் வரையில் கல்வியூடான மானசீகமான புரிந்துணர்வு கட்டியெழுப்பப்பட்டன.

இங்கு பெரும்பான்மையாக வாழும் சமூகங்களின் ஒரே மொழியான தமிழ் மொழிச் செழுமை, தொடர்பாடல்கள் என்பன இப்பிரதேசத்தின் சிறப்புக்களாகின்றன. இனங்களுக் கிடையில் காணப்படும் கலை, கலாசார, பாரம்பரியங்களை புரிந்து கொண்டு கௌரவங்களை வழங்கி வந்துள்ளனர். முஸ்லிம்களின் கலைகளை ஏற்று தமிழ் பாடசாலைகளிலும், தமிழ் கலைகளை முஸ்லிம் பாடசாலைகளிலும் அரங்கேற்றி சமூகங்களை மதிகப்பட்டுள்ளன.

கல்முனையில் நிலவிவந்த இன நல்லுறவுக்கு பல சம்பங்களை சான்றுகளைக் கொண்டு நிரூபிக்க முடியும். இப்பிரதேசத்தில் பல நூற்றாண்டு காலமாக பின்பற்றுவந்த வழிபாட்டுத் தலங்களை திகழும் கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் வருடாந்த கொடியேற்ற நிகழ்வு, பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோயில் வருடாந்த தீமிதிப்பு உற்சவம் என்பன ஆன்மீன நல்லுறவின் அடையாளங்களாக காணப்படுகின்றமை ஈடுசெய்ய முடியாத சான்றுகளாகும்.

அதுமாத்திரமல்லாமல் முஸ்லிம் குடியிருப்புக்களை அண்டிய பிரதேசங்களில் ஏனைய சமூகத்தவர்களின் குடியிருப்புக்களும் காணப்படுகின்றன. இதன்மூலம் சமூகத்தினர் ஒருவரை ஒருவர் அடிக்கடி சந்திக்கவும், சுக துக்கங்கள் விசாரிக்கவும், திருமணம் உள்ளிட்ட மங்களகரமான நிகழ்வுகளிலும், மரணங் சடங்குகளில் கலந்து கொள்ளவும் அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

குறிப்பாக இங்கு சுட்டிக்காட்டி விரும்பும் விடயமாக கல்முனையின் நிருவாக கட்டமைப்பு திகழ்கின்றது. நிருவாக ரீதியான பல தொன்மைகளை கல்முனை கொண்டுள்ளது. புராதன இலங்கையில் நீர் வழிப்பாதையில் பொருத்தமான அடையாளமாக காணப்பட்ட முனைப் பிரதேசம் கடல் போக்குவரத்திற்கும், கிட்டங்கி பொருட்களை ஏற்றி இறக்கும் துறைமுகமாகவும் செயற்பட்டு வந்துள்ளமை கல்முனை புராதன இலங்கையில் செல்வாக்குப் பெற்றிருந்தன.

இலங்கை ஆட்சி செய்த சிங்கள மன்னர்களின் காலம் முதல் சுதந்திரம் வரையில் பல நிருவாக கட்டமைப்புகள் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவை இன, மொழி, பிரதேசம் கடந்து பல்லின சமூகங்கள் என்ற அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் பகுதியின் தலைநகர் எனும் அந்தஸ்தின் ஊடாக அலங்கரிக்கப்பட்டுள்ளன.

மன்னர்களின் காலங்களில் இராசகாரிகயங்களும், திசாவைகளும், போடிகளும், வன்னிமைகளும், உடையார், ஆராச்சி உள்ளிட்ட பலர் அரச சேவைகளில் தொழில்வான்மைமிக்கவர்களாக செயற்பட்டுள்ளனர். குறிப்பாக வன்னிமையாக கடமையாற்றியவர்களுள் செல்லையா, எம்.எஸ். காரியப்பர், சந்துரக்கப்போடி வன்னிமைகளையும், க. கிருஷ்ணப்பிள்ளை, கே. அஹமது லெப்பை மரைக்கார் போன்ற உடையார்களும் பொறுப்புவாய்ந்தவர்களாக திகழ்ந்துள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் ஒல்லாந்தர், பிரித்தானிய காலனித்துவ ஆட்சியிலும் உயர் பதவிகளில் பலர் வகித்து வந்துள்ளனர். பிரித்தானியர் நாட்டை முழுமையாக ஆக்கிரமிக்கும் நோக்கில் முதற்கட்டாக கிழக்குப் பிரதேசத்தில் படையெழுப்புக்களை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் மன்னனின் நிருவாக அதிகாரிகளாகவும், பாதுகாப்புப் பிரிவின் தலைமையதிகாரிகளாகவும் செயற்பட்டவர்களுள் கல்முனையைச் சேர்ந்த (1) மீரா ஒசன் அபூபக்கர் காரியப்பர், ராய்முனை, (2) ஒசன் லெப்பை உதுமாலெப்பை, ராய்முனை (3) சம்மாந்துறையைச் சேர்ந்த அபூபக்கர் ஈஸா முகாந்திரம் (4) மருதமுனையைச் சேர்ந்த டச்சுப் படையின் மலாய் உத்தியோகத்தர் அனீஸ் லெப்பை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

மட்டக்களப்புப் பிரதேசத்தின் நிருவாக தலைநகராகத் திகழ்ந்த கல்முனையானது, 1796 இல் கரவாகுப்பற்று எனும் நிருவாக முறையினூடாக உள்ளூராட்சி மற்றும் சிவில் நிருவாகங்களில் அடையாளப்படுத்தப்பட்டது.

கரவாகுப்பற்று தொன்மையான நிருவாக முறையாகும். இது வன்னிமைகள் நிருவாகம், பிரதேச இறைவரி உத்தியோகத்தர் நிருவாகக் காலங்களில் பெரும்பான்மையாக முஸ்லிம்கள் வாழ்ந்தாலும் இச்சமூகத்தைச் சாராதவர்களே பெரும்பாலும் நிருவாக தலைமைகளாக கடமையாற்றியுள்ளனர். இக்காலப்பகுதிகளில் தமிழ் - முஸ்லிம் சமூகங்களிடையே முரண்பாடுகள் ஏற்பட்டதாக தெரியவில்லை.

கல்முனை உள்ளூராட்சி நிருவாகத்தைப் பொறுத்தவரையில் சுகாதார சபை (1897), உள்ளூர் அதிகார சபை (1920), பட்டின சபை ( 1946), பிரதேச சபை (1994), நகர சபை (2000), மாநகர சபை (2001) எனும் நாட்டில் அவ்வப்போது நடை முறையில் இருந்த உச்சகட்ட நிருவாக அந்தஸ்தை பெற்று வந்துள்ளது. இங்கு தமிழ் முஸ்லிம் பிரிவினைகளற்ற தவிசாளர், உறுப்பினர்களைக் கொண்ட ஆட்சி நிலவியுள்ளது.

கல்முனை அவசரக் கச்சேரி (1942), கல்முனை மாவட்ட நிருவாக காரியாலயம் (1987), மேலதிக அரசாங்க அதிபர் காரியாலயம் (2004) என்பன கல்முனையின் சிவில் நிருவாக காரியாலயங்களால் உச்சம் தொட்டவையாகும்.

இவ்வாறாக பல்வேறு புரிந்துணர்வு பண்புகளுடன் முஸ்லிம்களும் ஏனைய இன மக்களும் ஒரே பிரதேசத்தில் இரண்டறக் கலந்து வாழ்ந்ததினூடாக ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். தனிமனித உறவின் புரிந்துணர்வு குடும்பம், சமூகம், மொழி, இனம், பிரதேசம் என பரவிச் செல்கின்றது. இதுவே கல்முனையின் பாரம்பரின இனநல்லுறவு தூபமிட்டது எனலாம்.

இவ்வாறாக சமாதான நல்லிணக்க வழியில் இனங்களுக்கு இடையில் இறுக்கமான நல்லுறவுடன் பல நூற்றாண்டு காலமாக இப்பிரதேசம் பயணித்துவந்துள்ளது. இவை எமது நாட்டின் தேசிய நல்லிணக்கத்தினூடாக வெளிக்கொண்டு வராமை துரதிஷ்டமே.

இன்றைய சூழலில் பாரம்பரியமாக போணிவந்த நல்லுறவுகள் பல்வேறு பிரிவினை கோஷங்கள் காரணமாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று தசாப்த காலத்தினுள் தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையில் போட்டி மனப்பான்மை, பிரதேசவாதங்கள் என்பன இன்றைய கல்முனையின் சாபங்களாக இருக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபான்மை இனங்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு பிரதேசத்தில் இனங்களுக்கிடையில் குரோதங்களையும், ஒரே இனங்களைக் கொண்ட பிரதேசத்தில் பிரதேச வாதங்களையும் தொடர்ச்சியாக கொண்டு செல்வது மிக ஆபத்தான சூழலை ஏற்படுத்துவனவாகும். இதுவே கல்முனை செழிப்பிழந்து காணப்படுவதற்கான பிரதானமாகும்.

பயங்கரவாத சூழலொன்றின் ஊடாகவும், பிரதேச அரசியலினூடாகவும், நிருவாகத்தின் ஊடாகவும், கல்முனை சிக்கித் தவிக்கின்றது. அரசியல் இயலாமையினால் தேர்தல் கால பிரச்சார உத்திகளில் கல்முனை வெறும் பேச்சுக்களால் உணர்வு சேர்க்கப் படுகின்றது. பிரதேச நிருவாக ரீதியாக உரிமைக் கோசங்கள் சமூகங்களிலுள்ள இளைஞர்களையும், ஆர்வலர்களையும் சுண்டியிழுக்கின்றமை அண்மைக்கால அனுபவங் களாகியுள்ளன.

ஒரு சமூகம் மற்றொரு சமூகத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கை இழந்து துன்பத்தை பரிசளிக்க முனையும் காரணிகளை கண்டறிந்து அவற்றை இல்லாமல் செய்வது இன்றியமையாததாகும். அதேபோல் சமூகங்களுக்கிடையில் பேணிவந்த நல்லபிப்பிராயங்கள் சிதைவடைந்து போகாத அரசியலை நிலைக்கச் செய்வது காலத்தின் கட்டாயமாகும்.

எனவே, கல்முனை என்பது ஒரு இனத்தின் அடையாளம் என்பதைவிடவும் ஒரு பிரதேசத்தின் அடையாளம் என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன். இதனையே இங்கு வாழும் அனைத்து மக்களும் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. வெறுமனே அரசியல் இருப்பு சார்ந்த இனத்துவ செயற்பாடுகளைக் கடந்து இதுவரை காலமும் ஒரு இனம் இன்னொரு இனத்தின் மீது வழங்கிவந்த கௌரவங்களை இனிவரும் காலங்களிலும் தொடர்ந்து செல்வது நம் ஒவ்வொருவரினதும் பொறுப்பாக இருந்து வருகின்றது.

**ஏ.எம்.பறக்கத்துள்ளாஹ்**

இலக்கிய ஆய்வு துறைக்கு 2019 தேசிய இலக்கிய விருது பெற்றவர்,
வரலாற்று நூலாசிரியர்,
கல்முனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொழில் நுட்பமும் தொலைந்து போன பாரம்பரியமும்

கலை, கலாச்சார, பாரம்பரியம் என்பது எமது மூதாதையர்கள் எமக்கு அன்பளிப்புச் செய்த வரமாகும். இது காலாகாலம் தலைமுறை தலைமுறையாக பின்பற்றப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்தது. கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த காலத்தில் எமது தாத்தா, பாட்டிமார் கதைகளாக, பாடல்களாக, வழிபாடுகளாக, விளையாட்டுக்களாக, உணவு முறை என பல வழிகளிலும் எமக்கு சொல்லியும் செய்தும் காட்டியுள்ளனர். இவை வழக்காறுகளாக பின்பற்றப்பட்டு வந்தது. இது எமது தனித்துவமான அடையாளமாகக் காணப்படுகிறது.

தொழில் நுட்பத்தின் வளர்ச்சியால் இவைகளைப் பின்பற்றுவது வழக்கொழிந்து வருகின்றது. ஆரம்ப காலத்தில் தொலைக்காட்சி, வானொலி என்பன வீடுகளில் இல்லாததால் அவைகளுக்கு முன் நேரத்தை செலவிடுவது என்பது குறைவாக இருந்தது. இதனால் அனைவரும் ஒன்றாக இருந்து உணவு உட்கொள்வதும் அச்சந்தர்பத்தில் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொள்வதும் அதைப் பார்த்து குடும்பத்து சிறுவர்கள் கற்றுக் கொள்கின்றனர். சில குடும்பங்கள் கைக்குத்து அரிசி சோறு, அம்மியில் அரைத்த கறி மற்றும் சைவம், அசைவம் என்பன அவர்களுக்கு பிறப்பிலேயே தெரிவதில்லை. இது தலைமுறை தலைமுறையாய் கடத்தப்பட்டு வந்ததாகும். ஆனால் இன்று தொழில் நுட்பத்தின் வளர்ச்சியால் இணையத்தில் ஓடர் செய்யும் பீசா, பர்கர், முறுக்கு என உட்கொள்கின்றனர். தற்போதைய உணவு முறை ஆரோக்கியம் இல்லாததாகவும் போசாக்கு அற்றதாகவும் காணப்படுகிறது. இது எமது முன்னோர்கள் கற்றுத்தந்த முறையன்று இன்றைய இளைய தலைமுறையினர் காலத்தின் கட்டாயத்தால் கற்றுக்கொண்ட நாகரீக முறையாகும்.

பாரம்பரியம் காணப்படும் ஓர் இடமாக கிராமங்கள் காணப்படுகின்றது. கிராமங்களில் இடம்பெறும் திருமணங்கள், மரணச் சடங்குகள், விழாக்கள் போன்றவை எமக்கு அனேக பாரம்பரியங்களை கற்றுத் தருகிறது. ஆனால் இன்று நகரமயமாக்கம் என்ற பெயரில் பக்கத்து வீட்டில் இருப்பவர்கள் கூட யார் என்று தெரியாத அளவுக்கு உறவுகள் சுருங்கிவிட்டது. தானும் தனது குடும்பமும் என்று அனைத்தையும் மட்டுப்படுத்திவிட்டது இந்த தொழில்நுட்பம். இதைத்தான் நாம் பாரம்பரியம் என்று எமது சந்ததியினருக்கு விட்டுச் செல்கிறோம். கிராமங்களில் காணப்படும் வாய்க்கால், ஓடைகள், வயல்வெளிகள், மரத்தோப்பு, பரந்து விரிந்த முற்றத்து வாசல், கும்மி, சிலம்படி, கரகாட்டம், பல்லாங்குழி, ஒற்றைக்கோடு, கபடி, கிட்டிப்புள் என வரிசை கட்டும் கிராமத்து பாரம்பரியங்களை இன்று திரைப்படங்களிலும் பாடப்புத்தகங்களில் ஒரு பாடமாகவே எமது தலைமுறையினர் பார்க்கின்றனர். இல்லாவிட்டால் நூதனசாலைகளிலும், அரும்பொருட் காட்சியகங்களிலுமே எமது பாரம்பரியத்தை நாம் தேடிப் பார்க்க வேண்டி இருக்கின்றது. பாரம்பரிய விளையாட்டுகள் மற்றும் சம்பிரதாயங்கள் மூலம் எமது முன்னோர்களின் மன தைரியம், உடல் வலிமை, அவர்களது சமுதாய அக்கறை என்பன பிரதிபலித்தது. ஆனால் இன்றைய இளம் தலைமுறையினர் தொழில் நுட்பத்தின் உச்சியிலிருந்து கணனி மற்றும் தொலைக்காட்சிகளில் முப்பரிமாண வீடியோ விளையாட்டுகள், கார்ட்டூன்கள் போன்றவற்றை இருந்த இடத்திலேயே விளையாடுகின்றனர். இதனால் அவர்களது ஆரோக்கியம் என்பது கேள்விக்குறியாகியுள்ளது. தொழில்நுட்பத்தின் உச்ச பயன்பாடு இன்று எமது வழக்குகளையும் பண்பாடுகளையும் மறக்கடிக்க செய்துவிட்டது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று பெற்றெடுத்த குழந்தைகளுக்கு தாலாட்டுப்பாட்டு கூட தாய்மார்கள் பாட வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது. அதற்காகவே வடிவமைக்கப்பட்ட தாலாட்டும் இயந்திரங்கள் இன்று சந்தைக்கு வந்துள்ளது. அனைத்து விதமான வேலைகளையும் இயந்திர மனிதன் செய்யும் அளவிற்கு தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மேலோங்கியுள்ளது. அம்மி, உரல், உலக்கை என்பன இன்று கொல்லைப்புறங்களில் முடங்கியுள்ளது. இவற்றை எமது எதிர்கால சந்ததிக்கு வரைந்தோ அல்லது படங்கள் மூலமாகவோ காட்ட வேண்டியுள்ளது. இந்த நிலை தொடர்வது ஆரோக்கியமான விடயமாக கருத முடியாது. எனவே எமது பாரம்பரியங்கள் பாதுகாக்கப்பட வேண்டியவை இவை எமது தாத்தா பாட்டிகளோடு நின்று விடாது எமது எதிர்கால சந்ததியினருக்கும் சென்றடைய வேண்டும் இதற்காக சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

01. எமது உறவுகளை எமது பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டும்

02. கிராமத்து தாத்தா பாட்டிகளின் பூர்வீக இடங்களையும் அவர்களது உறவுகளையும் எமது இளம் தலைமுறையினருக்கு அழைத்துச் சென்று காட்டுதல் வேண்டும்.

03. பாரம்பரிய உணவு முறைகள் மற்றும் சம்பிரதாய சடங்குகளை ஒவ்வொரு நிகழ்வுகளிலும் தவறாது பின்பற்றுதல் வேண்டும்

04. சித்திரைப் புத்தாண்டு விழா கலாசார விழா போன்ற நிகழ்வுகளில் பாரம்பரிய கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்

05. இளம் தலைமுறையினருக்கு அழிந்துவரும் கலைகளை கற்றுக் கொடுக்க வேண்டும்.

06. வரலாற்று ஆவணங்கள் குறிப்புகள் என்பவற்றை பாதுகாத்து எமது எதிர்கால சந்ததிக்கு ஒப்படைக்க வேண்டும்.

07. எனவே இவ்வாறான நடைமுறைகளை பின்பற்றி எமது பாரம்பரிய வழிமுறைகளை பாதுகாப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் செய்வது எமது சந்ததியினருக்கு செய்யும் பேருதவியாக அமையும்

**ஏ.எம்.கஸ்பியா வீவி** (திறந்த பிரிவு போட்டியாளர்-கட்டுரை)
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்
பிரதேச செயலகம்
கல்முனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னை இகழ உங்களுக்கு ஒரு தகுதியும் இல்லை!

ஓ மானிடமே!... நான் வாயில்லாத ஜீவன் கொரோனா பேசுகின்றேன்
வைராக்கியத்தில் வையகத்தோடு,....
உங்களை அழிப்பதும்... பழிப்பதும் என் நோக்கமல்ல!...

ஓ மானிடமே!

இன்று விஞ்ஞானம் வளர்ந்து மெய்ஞ்ஞானம் தோற்றுப்போனது...
மருத்துவம் உயர்ந்தது... மனிதாபிமானம் சிதைந்தது...
தொ(ல்)லை பேசியாம் தொலைபேசிக்கு அடிமையாகி
தொலை தூரமாகிப் போனது உங்கள் உறவுகளெல்லாம்.

இன்று

இயற்கையைச் சாவடித்து செயற்கைக்கு உரமூட்டி
உங்களை நீங்களே செய்வினை செய்துகொண்டீர்கள்
இயற்கையை விட மனித இனமே! உயர்ந்தது என்கின்ற
உங்களின் அகந்தையை அழிப்பதே என் நோக்கம்

இயற்கையை

வீரர்கள் என்று வீராப்புப் பேசி மார்பு தட்டும் உங்கள்
மமதையை அழிப்பேன்,... உங்களை மண்ணோடு மண்ணாக்கி மகிழ்வேன்
மனிதனாய் பூமியிலே புனிதனாய் வாழச் சொன்னால் மதத்தால் மதம் பிடித்து...
உதிரம் குடித்து... சாதி என்ற சாக்கடியில் குளித்து...
உங்களை நீங்களே அழிப்பது எந்த வகையில் நியாயம்?...

வீரர்கள்

அன்று தர்மம் கொடுத்து தலைகாத்து வாழ்ந்தீர்கள்...
ஒரு வீட்டில் உலை வைத்து பல வீட்டில் பசி தீர்த்தீர்கள்...
எங்கே போனது உங்கள் ஒற்றுமை?... எங்கே போனது உங்கள் ஒற்றுமை?...
வேற்றுமையால் வெடிகுண்டும்... வேறருக்கும் அணுகுண்டும்...
நாடு கடந்து நாசமாக்க ஏவுகணைகளும்,... காவிச் செல்ல போர் விமானங்கள் என்று
கூவித்திரியும் மானிடா!... யாருக்காக இத்தனையும்...

அன்று

வல்லரசு என்று வாய் பிளந்த நாடுகள் எங்கே?...
உலகின் அதிபதி என்று உறுமிய அரசர்கள் எங்கே?...
பணத்தால் பம்மாத்துக்காட்டிய பணப் பிசாசுகள் எங்கே?...
இனத்தால் உயர்ந்த சார்ல்ஸும் எங்கே?...
குடியில் உயர்ந்த குமரர்கள் எங்கே?... கோடிபதிகளும் ஓடி ஒழிக்க,...
படைப்பலங்கள் எல்லாம் இன்று நடைப்பிணமானது...
நடைபாதையெல்லாம் நாசமாய் போனது

வல்லரசு

இன்னுமா புரியவில்லை உங்களுக்கு!... இன்னுமா புரியவில்லை!...
நேற்று சுனாமி வந்தது... சிலருக்கு மாமி வந்தது போலானது...
இன்று கொடிய அரக்கன் கொரோனா வந்திருக்கிறேன்... இதிலும் பலர்
கொல்லையடித்து வெள்ளையடிக்க பார்க்கின்றனர்...
என்னை விட கொடியவர்கள் நீங்கள்... என்னை விட கொடியவர்கள் நீங்கள்...
என்னையே விற்று பணமாக்க நினைக்கும் உங்களை
தனிமைப்படுத்துவது தவறா?..

இன்னுமா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூப்பர் பவர் நாடு நாங்கள்.. யாரை வேண்டுமென்றாலும் அழித்துவிடுவோம்
என்று கர்வத்தோடு கர்ச்சித்தீர்கள்...
சவால் விடுகின்றேன் உங்களுக்கு!... ஆயிரம் அணுகுண்டுகள்..
பல்லாயிரம் படை கொண்டு வீசுங்கள் கர்ச்சிக்கும் படைகளால்
என் கச்சையைக் கூட தொட முடியாது...
எனது பார்வையின் போர்வைக்குள் எவரும் ஒழிய முடியாது!...
அழிக்கப் புறப்பட்டவன் நான்!... உங்கள் அகந்தையை ஒழிக்க புறப்பட்டவனும் நானே!...

சூப்பர் பவர்

உன்னை மாற்று!... மதத்தை உணர்த்து!... புனிதத்தை விதைத்து!... சுத்தத்தை பெருக்கு!...
அசுத்தத்தை விளக்கு!...புதிய யுகம் பிறக்க புறப்படுவேன் நான் தலை தெறிக்க...
எனவே,"மனிதன்" புனிதனாக வாழாவிட்டாலும் பரவாயில்லை!...
மனிதமிக்கவனாக வாழ்வதே இப்பூமியில் சிறந்தது
இப்படிக்கு உங்கள் மீது கோபப்பட்ட கொரோனா!...

உன்னை மாற்று

கவி நிழல்"எம்.ஜ.எம்.ஜிப்ரி**(BA),LLB**
(திறந்த போட்டியாளர்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை பிரதேச செயலகப் பிரிவில் கலாபூஷணம் விருது பெற்ற கலைஞர்கள் விபரங்கள்

| இல | கலைஞர் பெயர் | கலைஞர்களின் முகவரி |
|---|---|---|
| 01 | எ.ஆர்.எ.ஹமீட் | 52-எ அல்-மனா வீதி,மருதமுனை |
| 02 | எ.எம்.முஹம்மட் பாறுக் | 136 மரைக்கார் வீதி,மருதமுனை |
| 03 | ஐ.எல்.நெய்னா முஹம்மட் | 115-டி, கடற்கரை வீதி,கல்முனைக்குடி-09 |
| 04 | பி.எம்.எம்.எ.காதர் | 184-எ,அக்பர் வீதி,மருதமுனை-01 |
| 05 | எம்.எம்.ஹசனி | 119-சி, புதிய வீதி,கல்முனைக்குடி-13 |
| 06 | எம்.எ.முஹம்மது ஜெலீல் | 39,ஸம் ஸம் வீதி,மருதமுனை |
| 07 | மர்ஹூம்.எ.எ.பாத்திமா நசீறா | 164-சி, செய்லான் வீதி,கல்முனைக்குடி-02 |
| 08 | எம்.டீ.முஹம்மது முஹைதீன் | **50B**, றிஸ்வி டொக்டர் வீதி கல்முனை |

(கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலகத்தினால் ஒவ்வொரு வருடமும் 10 கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு சுபதம் கௌரவிப்பு விருது வழங்கப்படுகின்றது)

சாகித்திய விருது பெற்றவர்கள்
1.U.L.M. அதீக் (சோலைக்கிளி)
2.M.A.R. அப்துல் ஜெமீல்

இளம் கலைஞர் விருது
1. .ஜெஸ்மி M மூசா
2. M. காதர் கரீசா
3. A.M. பறக்கதுல்லாஹ்

வித்தகர் விருது
2..U.L.M. அதீக் (சோலைக்கிளி)
3.M.A. முஹம்மது ஜெலீல்
4.U.L. நஜிமுத்தீன்

இலக்கிய விருது (அரச)
1. A.M. பறக்கதுல்லாஹ்

நூல் கொள்வனவு
1. A.M. பறக்கதுல்லாஹ்

பிரதேச மட்ட கலை இலக்கிய போட்டியில்
மாவட்ட மட்டம் 1ம் இடம்
1. M.I.கைறுன்னிசா
2. N. இஸ்றத் ஹின்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்முனை பிரதேச செயலகத்தின் கலாசார அதிகார சபையின் அங்கத்தவர்களின் விபரங்கள்

| அதிகாரசபை அங்கத்தவர் பதவியின் தன்மை | அங்கத்தவரின் பெயர் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| தலைவர் | எம்.எம்.நஸீர்,<br>பிரதேச செயலாளர்,கல்முனை | 0672229236,<br>0772710361 |
| உப தலைவர் | சோலைக்களி அதீக்,<br>ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர் | 0771607056 |
| செயலாளர் | எஸ்.எல்.அஸீஸ்,(ஊடகவியலாளர்)<br>உதவி முகாமையாளர்,சமுர்த்தி வலயம் | 0772981214 |
| உப செயலாளர் | எம்.வி.எம்.கய்யூம்,<br>இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபனம்<br>பிறை வானொலி கட்டுப்பாட்டாளர் | 0777381289 |
| பொருளாளர் | எ.ஆர்.எம்.சாலிஹ்.<br>சிரேஸ்ட சமுர்த்தி தலைமை முகாமையாளர் | 0772483253 |
| உப பொருளாளர் | ஏ.அப்துல் கபூர். ஓய்வு பெற்ற அதிபர் | 0776090527 |
| ஆலோசனையாளர்கள் | எ.எம்.எ.சமட்,ஒய்வு பெற்ற அதிபர் | 0755241388 |
| | ஜுல்பிகா சரீப்,ஆசிரியர் | 0776683622 |
| | எம்.எ.எம்.ஜெலீல்,ஒய்வு பெற்ற உப பீடாதிபதி | 0778051350 |
| | எம்.எம்.விஜிலி,ஆசிரியர் | 0779797210 |
| | கலாபூசனம் ஏ.எம்.எச்.எம்.முஹைதீன், | 0774181150 |
| | கலாபூசனம் ஐ.எல்.நெய்னா முஹம்மட் | 0776915409 |
| ஊடக அனுசரனையாளார்கள் | .பி.எம்.எம்.எ.காதர் | 0772612095 |
| | ஜெஸ்மி .எம். மூஸா, ஆசிரியர் | 0773624690 |
| உத்தியோக பூர்வ அங்கத்தவர் | யூ.ஐ.பதியுத்தீன், நிர்வாக கிராம<br>உத்தியோகத்தர் | 0773839292 |
| கணக்காய்வாளர் | வை..ஹபிபுல்லாஹ்,<br>கணக்காளர் | 0766805545 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்................

## கல்முனை பிரதேச செயலகத்தின் கலாசார அதிகார சபையின் அங்கத்தவர்களின் விபரங்கள

| அதிகார சபையின் பதவி தன்மை | அங்கத்தவரின் பெயர் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| | .எஸ்.சிறாஜுூடீன்,நட்பிட்டிமுனை (ஜ.எஸ்.எ) | 0768437104 |
| | .எஸ்.எல்.எம்.ஜலாலுதீன், மருதமுனை | 0761012057 |
| | .எ.ஜ.ஹாறுான், நற்பட்டிமுனை | 0752768840 |
| | ஐஏ.எ.எம்.பாறுாக், மருதமுனை | 0673692670 |
| | ஏ.எம்.ஜ.எம்.சலாஹுூடின், மருதமுனை | - |
| | யூ.ஜ.எம்.றிபாஸ்,மருதமுனை | 0772102310 |
| | எ.வி.ஜெஸீமா,பெரிய நீலாவணை | 0775500291 |
| | எம்.எ.சி.ஸாஹிர் கரீம்,கல்முனைக்குடி | 0770630238 |
| | .எ.எஸ்.எம்.முஜாஹித் | 0772539298 |
| | யூ.முஹம்மட் அலி,கல்முனைக்குடி | 0778562191 |
| ஏனைய உறுப்பினர்கள் | எம்.எப்.காமில் பயாலஸ்,பெரியநீலாவணை | 0754802706 |
| | எம்.எம்.சதீஸ் அஹமட்,மருதமுனை | 0752506195 |
| | எஸ்.ஜெஸ்மின் இஸ்ஸத்,பெரியநீலாவணை | 0757383344 |
| | எம்.ஜ.எம்.றபீக்,மருதமுனை | 0775008976 |
| | எ.எம்.சாக்கீர்,கல்முனைக்குடி | 0769131443 |
| | எம்.எம்.கலீல்,மருதமுனை | 0778950862 |
| | எம்.எம்.ஹசன்.நற்பிட்டிமுனை | 0778228212 |
| | எம்.எ.நஸீர்,மருதமுனை | 0778603059 |
| | .எஸ்.தஸ்தகீர்,கல்முனைக்குடி | 0776072999 |
| | .எ.எல்.ஜ.ஹுசைன்,மருதமுனை | 0776688624 |

நீங்கள் உண்மையையே
பேசுங்கள்
அது அழிவைத்
தந்தாலும்
முடிவில் வெற்றியைத்
தரும்

முஹம்மத் நபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# COVID-19

வருடம் ஓர் முறை
வசந்தம் கொடுக்கும்
கல்முனையின்
கலைச்செதுக்கலாம் - இந்த
வருட சஞ்சிகையில்
மற்றுமொரு
கவி வாசனை
கொண்டு வருகிறேன்
இந்த வருடமும்

சீனத்துப் புவியின்
சீற்றம்
இன்னும் ஓய்வுமில்லை
"CORONA" - என்ற
பதட்டம்
முடியவுமில்லை....

சீனா சென்றாலும்
சீர்கல்வி பெற்றிட ,
சிறப்பாய் வாழ ,
சிற்ப வசனங்கள்
- பலவற்றை
செதுக்கித்தந்த
செம்மல் மு□ம்மதின்
இஸ்லாமிய வாரிசுகளுக்கும்
உன்னால்
சோதனையா?
சீனவே !....



சுத்தம் அதனில்
சுகம் உண்டென்று
வுழுவினில்
தொடங்கி
வழுவினில் உள்ள
மானிடமெல்லாம்
"சுகம்" எனும்
தருவாக்கி
விடைபெறும்
தருணத்திலும்
விழுமியம் சொன்ன மார்க்கத்திற்கு
இன்று சோக மேடை....

கொடூரப்பிடியின்
கொடுமை தாங்கவில்லை
கரங்களில் - நீ
காற்றினில் - நீ
மொழிதாண்டி பயணிக்கிறாய்
கண்டம் தாண்டியும் பயணமாகிறாய்
பூவுலகம் முழுவதும் - உன்
புகைமூட்டத்தால்
மறைத்திருக்கிறாய்

20தின் 20 இனை
மரித்துவிட்டாய்
20 தின் 21ல் ஆவது
நீ - மரித்துவிடு....
மனிதம் காத்த
மார்க்கத்தையும்
எம் - மானிடர்களையும்
விட்டுவிடு....

ஆக்கம்:-திருமதி
எஸ்.எஸ்.எம்.நௌபல்
பிரதம முகாமைத்துவ சேவை
உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
கல்முனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வின் இரு கண்கள்

சிந்தனையாற்றலே மனிதனிடத்திலுள்ள மாபெருஞ் சக்தியாகும். அதனால், அவன் விலங்கு நிலையினின்றும் உயர்ந்து நாகரிகமடைந்தான். ஆதிகால விலங்கினத்திற்கும் இன்றுள்ள விலங்கினத்திற்குமிடையில் வாழ்க்கை முறையிலே குறிப்பிடத்தக்க மாற்றமெதுவும் நிகழவில்லை ஆயின் அன்றுள்ள மனிதனுக்கும் இன்றுள்ள மனிதனுக்குமிடையே, வாழ்க்கை முறையிலும், மனப்போக்கிலும் தெளிவான பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. பல நூற்றாண்டு காலமாக நிகழ்ந்து வந்த இம்மாற்றங்களே மனிதன் வளர்ச்சியடைந்துள்ளான் என்ற உண்மையைக் காட்டுவன. சிந்தனையாற்றல் இல்லையாயின் மனிதன், இன்றும் விலங்குகளுக்கு ஒப்பாக காடுகளிலும் குகைகளிலும் வாழ்ந்திருப்பான் அவனுக்கு அகிலமெல்லாங் கட்டியாளவும் இயற்கையை வெல்லவும் விண்வெளிக்கு விண்கலம் அனுப்பும் எண்ணம் தோன்றிராது.

அன்று குகைகளைத் தனது உறையுளாகக் கொண்ட அவன் சிந்தனைத்திறனால் வீடு கட்டி வாழத் தொடங்கினான். அம்முயற்சியின் விரிவுபட்ட தன்மை கணிதமாகி முளைவிடத் தொடங்கியது. பச்சையிறைச்சியை உண்டு வாழ்ந்த அவன் நெருப்பைக் கண்டறிந்து உணவைப் பக்குவப்படுத்தத் தொடங்கினான். அம்முயற்சியில் விஞ்ஞானம் வேர்விடத் தொடங்கியது. இவையிரண்டும் காலகதியிலே பல கிளையிட்டு வளர்ந்தன. இவையிரண்டும் இன்று அறிவியலெனும் பெருந்திரளாய் வளர்ந்து காட்சியளிக்கின்றன. உணவுண்டு பசிக்கொடுமை மாய்ந்த பின்னர் ஆதிமனிதர் கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து ஆடியும், பாடியும் களித்தனர். அவர்கள் பாடலிலே இசை, இலக்கியம் முதலியன அரும்பத் தொடங்கின. அவர்களது ஆடலிலே நாட்டியம் மலரத் தொடங்கியது. காலப் போக்கிலே சிந்தனையாற்றலின் தொழிற்பாட்டால் இவ்வழகியற் கலைகள் ஒன்று பலவாயக் கிளைத்து வளரலாயின.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்ணென்ப வாழ முயர்க்கு"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் கூற்றினைக் கூர்ந்து நோக்குங்கால், அவர் எண்ணை அறிவியலெனவும் எழுத்தை அழகியலெனவும் கருதுவது சாலப் பொருத்தமுடையதே, அதனால் அவை கண் எனச் சிறப்பிக்கப்படுகின்றன. கண் போன்ற அறிவியியலும் அழகியலுமே உலக அறிவுத் திரளினை அறிதற்கேற்ற சிறந்த கருவிகளென்பதை உணரலாம். இவையிரண்டினதும் கூட்டுறவே கல்வியென்னும் பெருநிதியம், கல்வி, மனிதன் பூரண வளர்ச்சியடைவதற்குப் பெருந்துணையாக விளங்குவது அதனாலேயே அது தேடற்கரிய செல்வமெனவும் ஒப்புயர்வற்ற நண்பனெனவும் போற்றப்படுகிறது. மனிதன் உலகியலை அறிதற்கும் இயற்கையானவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கியாண்டு, தனக்கும் பிறர்க்கும் பயனளிக்கும் வகையை அறிவதற்கும் அறிவு வளர்ச்சி பெற வேண்டும் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற நற்குணங்கள் குடியிருக்கும் மனம் பெற்று, உலகத்தோடு ஒட்ட ஒழுகுவதற்கும் ஆன்மீக ஈடேற்றம் பெறுவதற்கும் மனவளர்ச்சி உடையவனாதல் வேண்டும். அறிவு, மனம் என்னும் இரண்டினதும் ஒருமித்த வளர்ச்சியே மனிதனது பூரண வளர்ச்சி, ஒன்றைப் புறக்கணித்து ஒன்றைப் போற்றுவதால் உண்மையான வளர்ச்சி ஏற்படாது உடலியல்புக்கேற்ற பயிற்சிகள் மூலம் உடல் வலிமையும், வனப்பும் விளங்கினும் அறிவும், மனம் தக்கபடி வளராவிடின் பயனேதுமில்லை. மனிதனது அறிவு வளர்ச்சிக்கு அறிவியல் சம்பந்தமான கல்வி துணை புரிகிறது. பலதிறப்பட்ட கணித முறைகளும் இரசாயனம், பௌதீக, உயிரியல், பொறியியல் முதலியனவும் அறிவியலுள் அடங்குகின்றன. இவை மனிதனது புறவாழ்வு சிறப்புறுவதற்குப் பெருந்துணை புரிகின்றன அறிவு வளர்ந்து மனம் வளராவிடின், பண்பாடு சிறிதும் அற்ற, வல்லனான மனிதனே காணப்படுவான் மனவளர்ச்சியின் பயன்களான அழகுணர்ச்சியும், அருளுணர்ச்சியும் இல்லாதவனாய் மிருகப் பண்புள்ளவனாய், பயங்கரமான பிராணியாய் விளங்குவான் எனவே மன வளர்ச்சியே மனிதனை மனிதனாக்குகிறது என்று கூறினும் மிகையாகாது தத்துவம், இலக்கியம், இசை, நாடகம், ஓவியம், சிற்பம் முதலிய அழகியல்கள் மன வளாச்சிக்குரியன. இவைகள் கலைகள் எனவும், கவின கலைகள் எனவும், அழைக்கப்படுவன. மனிதனது அகவாழ்வு சிறப்படைவதற்குத் துணை புரிகின்றன. எனவே அறிவியல், அழகியல் என்னும் இரண்டினாலும் மனிதன் பூரண வளர்ச்சி பெறமுடிகிறது. அறிவியல் வளர்ச்சியினால் இன்று உலகில் நிகழ்ந்துள்ள விந்தைகள் எண்ணிலடங்கா மனிதன் மண்ணையும், மகா கடலையும் வெற்றி கொண்டு பயணஞ் செய்வதோடு நின்று விடாது விண்வெளியையும் புறங்கண்டு பிற கோள்களுக்குள் செல்வதற்கும் முயன்றுவிட்டான். நோய்த்துன்பத்தைக் தெய்வத்தின் சீற்றமென நம்பிய மனிதன், இன்று அதனை வெற்றிகாணும் அளவுக்கு மருத்துவத் துறையை வளர்த்து விட்டான். அவன் ஒன்றின் பின் ஒன்றாக ஆற்றல் மிக்கதான பல சக்திகளைக் கண்டறிந்தான். அதனால் வாழ்க்கைப் பொருட்களை வெகு வேகமாக உற்பத்தி செய்யக்கூடிய பல இயந்திரங்களைப் பெருக்கிவிட்டான் இவ்வாறு மனித வாழ்க்கையின் புறத்துறை அனைத்திலும் அறிவியல் நல்லதொரு சேவகனாய், நண்பனாய்த் துணைபுரிகிறது. கோயில்களை மையப்பொருளாகக் கொண்டே பண்டு தொட்டு தமிழ் நாட்டில் அழகியற் கலைகள் பலவும் வளர்ந்துள்ளன. வான் தொட நிமிர்ந்து நிற்கும் கோயிற் கோபுரங்கள் சிற்பக் கலையின் உயர்சிக்குச் சான்று பகர்கின்றன கோயிலும் பிரகாரங்களும் உயிர்த்துடிப்புள்ள சிற்பக் கூடங்களாகக் காட்சி தருகின்றன. கோயிற் சுவர்களும், விதானங்களும் வண்ண வண்ண ஓவியங்கள் நிறைந்த சித்திர சாலையாக விளங்குகின்றன. இசையும் நாட்டியமும் இணை பிரியாது கோவிலிலே வளர்ந்தன. இங்கனம் கவின் கலைகள் யாவும் சங்கமிக்கும் இடமாகக் கோயில்கள் விளங்கியதனால் அவைகள் தெய்வீகக் கலைகளாக மதிக்கப்பட்டன அக்கவிகள் அனைத்தினூடாகவும் பக்திப் பேரொளி சுடர்விட்டுப் பிரகாசித்தது. இப்பேரொளி ஆன்ம ஞானமாக மலர்ந்தது அன்றியும் காலத்தால் நலிவடையாத உலக இலக்கியங்களும் அறநூல்களும் தத்துவக் கோட்பாடுகளும் மனவளர்ச்சிக்காக எழுந்தன இவை அனைத்தும் அழகியல் என்னும் பிரிவிலடங்குவன இவ்வாறு அழகியல் மனிதனது அக வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் ஒரு குலமாதல் வேண்டும் என்னும் குறிக்கோளே அறிவியலாலும், அழகியலாலும் சாதிக்கப்பட வேண்டியது ஒரு ஊரார் மற்றோர் ஊராரையும் ஒரு நாட்டார் மற்றொரு நாட்டாரையும் எதிர்த்துப் போராடி வாழ்ந்த கதையைச் சரித்திரம் பேசுகிறது. ஆயின் இன்று அறிவியல், அழகியல் என்பனவற்றின் வளர்ச்சியாவே தேசத் தலைவர்கள் பேதங்களை மறந்து ஓர் அரங்கிற் சந்தித்து பேசும் நிலை உருவாகியுள்ளது. இது ஓருலகக் கொள்கையின் வித்தென கருதத்தக்கது அறிவியிலும். அழகியலும் பேரறிஞர் பலர் கண்ட ஓருலகக் கனவை நனவாக்க வழியமைத்திருக் கின்றன.

"யாதானும் நடாமால் ஊராமால் என்னொருவன்

சாந்துணைவும் கல்லாத வாறு"

என்ற வள்ளுர் கருத்தை அழகியலும், அறிவியலும் பிணைந்த கல்வி சிந்திக்கச் செய்கிறது.

அறிவியல், அழகியல் என கல்வி இரு வகைப்படுமென்றும் இரண்டும் இரு கண்களெனப் போற்றப்பட வேண்டியனவென்றுங் கண்டோம். ஆயின் இன்று அறிவியலுக்குரிய பெருமதிப்பு அழகியலில்லை அறிவியலைக் கற்றலிலுள்ள ஆர்வம் அழகியலைக் கற்றல் இல்லை கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் அறிவியற் பாடங்களைக் கற்க விரும்புவோர் தொகை பெரிதாகவும் அழகியற் பாடங்களைக் கற்க விரும்புவோர் தொகை சிறிதாகவும் காணப்படுகிறது. இந்நிலை தொழிலும் வருமானம் தேடும் ஆர்வத்தால் எழுந்ததாகும் வாழ்க்கையின் புறத்துறையில் ஏற்பட்ட அபிமானத்தால் விளைந்ததாகும். இந்நிலை விரும்பத்தக்கதன்று இது ஒரு கண்ணைக் குருடாக்கி, மற்றொரு கண்ணுக்கு ஒளியேற்றலை ஒத்தாகும். இரு கண்களையும் பேணிக் காத்தலே அறிவுடமை. எனவே அறிவியல் கற்போர் அழகியலிலும், அழகியல் கற்போர் அறிவியலிலும் ஓரளவு தேர்ச்சி பெறல் வேண்டும் அப்போதுதான். அவர்கள் பூரண வாழ்வு வாழ்வதற்கு வழிகண்டவர்களாவர்.

முஹம்மட் பாயிஸ் பாத்திமா பிஷ்றா அனூத்

கனிஸ்ட பிரிவு - பிரதேச மட்ட கட்டுரைப் போட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லதையே நினைப்போம்

கடலுக்குள் நண்டும் மீன்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. ஒரு நாள், நண்டுகள் கடல் நிரை விட்டு ஒதுங்கி கரையோர மணலில், வேகமாகவும், சுறு சுறுப்பாகவும் ஆர்வத்துடன் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன. வெகு நேரமாக இவற்றையெல்லாம் பார்த்து கொண்டிருந்த மீன்களுக்கு, நண்டின் மீது புறாமையும், எரிச்சலும் வந்தது, தலைவரான சூறா மீனிடம் சென்று, கடலைப் பற்றி தவறான முறையீடு செய்தன, கடல் ஓரம் மணலை அரித்து அசிங்கப்படுத்துவதாக முறையிட்டன.

சுறா மீன் நண்டுகளை கரையில் போக விடாமல் இருப்பதற்காக யோசனை ஒன்று செய்தது.

கடலில் வாழும் ஊயிரினங்களில் எங்களுக்கு பிடித்த நண்பர்கள் நீங்கள் தான். உங்களோடு பேச எங்கள் தலைவர் சுறா மீன் அவர்கள் அழைத்து வரச் சொன்னார்.

நண்டுகள் கூட்டமாக தலைவர் சுறா மீன் இருக்கும் இடம் நோக்கி நகர்ந்தன.

சுறா மீன் சென்னது, எனது அனபுக்குரிய நண்பர்களே! நான் இப்போது செல்வதில் கவனம் செலுத்துங்கள்.

“நமது கடலுக்கு அடியில் அழகிய கரு நீல கற்பாறை ஒன்று இருக்கின்றது. இதை சுற்றி சுவையான உணவுகளும் உள்ளன. ஆதனை உண்டு அக் கற்பாறையும் முத்தமிட்டு வந்தால் ஆயுள் கூடுமாம். நாங்கள் போய் வந்து விட்டோம். இப்போது நீங்களும் போய் வாருங்கள்” என்று சுறா மீன் கூற, நண்டுகள் அனைத்தும் நீல கல் தேடி அடிக் கடலினுள் ஓடின. அங்குள்ள பல அற்புதங்களை கண்டு மகிழ்ந்து, நாம் இதுவரை காணதவற்றை எல்லாம் காண்கிறோம் என நினைத்து சந்தோசத்தில் மூழ்கின. மீன்கள் கரையை நோக்கி வந்தன. அவற்றுள் சில கரையை தொடமுடியாமல் மீண்டும் கடலுக்குள் சென்றன. தலைவர் சுறா மீன், நான் இன்று எப்படியாவது கரைக்கு செல்ல வேண்டும் என்ற பிடிவாதத்தில் கரையை நோக்கி நகர்ந்து சென்றது. அப்போது பெரிய காற்று வீச, வேகமாக வந்த அலையோடு சுறா மீன் தரையில் வந்து விழுந்து விட்டது. சுறாவுக்கு எல்லை இல்லா இன்ப அதிர்ச்சி.

ஆகா! என்னவெரு அழகு இவ்வானம், செவ்வானம் சென்று பார்க்க சீரான நேரான வழி ஒன்று உன்டோ என யோசித்து கொண்டிருக்கும் போது தனது உடல் சோர்வடைவதை உணர்ந்தது. நாம் நீரில் இல்லாமல் மணலில் இருக்கின்றோமே நம்மால் நீர் இல்லாமல் உயிர் வாழ முடியாதே என்று கண் கலங்கியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஐயே!என்னை யாராவது காப்பாற்றுங்கள். மீண்டும் என்னை இக் கடலுக்குள் விடுங்கள் என்று கத்தி கதறி அழுதது.

தோழர்களே வாருங்கள் என்னை காப்பாற்றுங்கள் என்றது. சிறிய மீன்கள் "தலைவரே என்னை மன்னியுங்கள். எங்களால் கரையை தொடக்கூட முடியவில்லை" என்று சொல்லி ஓடி மறைந்து கொண்டன.

சுறாவின் அழுகுரல் கேட்ட நண்டுகள் வேகமாக கரையை நோக்கி ஓடி வந்தன. "தலைவரே! நீங்கள் எப்படி கரைக்குள் வந்தீர்கள்? நீர் இல்லாமல் உங்களால் வாழ முடியாதே?அழாதீர்கள் உங்களை நாங்கள் காப்பற்றி விடுகின்றோம்" என்று சொல்லி விட்டு, நண்டுகள் எல்லாம் ஒற்றுமையாக கடல் நீர் சுறாவின் பாதம்படும் வரை நன்கு குழி தோண்ட, குழியின் வழியால் கடல் நீர் பெருகி வர சுறா மீன் அவ்வழியாக மீண்டும் கடலுக்குள் சென்றது. தன்னோடு வந்த நண்பர்களை பார்த்து "என் பாசத்திற்கு உரிய நண்பர்களே! நான் உங்களை ஏமாற்றுவதாக நினைத்து நானே ஏமாந்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்." என்று சொல்லியது.

எ.வி. ஜெஸீமா முஜீப்

திறந்த போட்டியாளர் -சிறுவர் கதையாக்கம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலக்கு நோக்கிய அடையாளம்

கல்முனையின் நல் இதயமது
கனிவு தரும் செயலகமும்
ஆளுமை சான்றுகள்
அங்கு சிறப்பானவை.

இலக்கியப் போட்டிகள் பல கண்டு
இன்முகமாய் விருதுகளும் வழங்கவென
இன்முகமாய் பயணிக்கிறது கலாசாரம்
முத்தாய்ப்பாய் பயணிக்கிறது கலாசாரம்

கவித்துவ ஆர்வமும்
கவிநயமும் ஊறியே
இலக்கினை எட்டத் துடிக்கும்
நம்மவர் சிறப்பும்

புத்தகங்களில் தம் எழுத்துக்கள்
புத்துணர்வு தர வேண்டுமென்று
மனசு நிறை நூல்கள் தந்து
மாண்மியமும் காக்கிறதே.

சுவதம்.... கவியரங்கு ... கலாசாரம்
சுவைக்கும் விருதுகளை வழங்கி
உன்னதம் காக்கும் கலாசார மையம்
உவகை அளிக்கிறது காணீர்

இலக்கு நோக்கிய அடையாளம்
இன்று போல் உயரட்டும்
வாழிய .... வாழிய வே ...............!

கவிஞர் மருதமுனை விஜிலி,
செயலாளர்,
அம்பாரை மாவட்ட தமிழ் மொழி நூலாசிரியர்கள் பேரவை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனவு நனவாகட்டும்

நேரம் இரவு 10 மணி மேசையின் மீது படித்துக்கொண்டிருந்தவள் அப்படியே அயர்ந்து தூங்கிவிட்டாள் நிஸ்லா. உயர்தரத்தில் கலைப்பிரிவில் படித்துக்கொண்டிருக்கும் இரண்டாம் வருட மாணவியே அவள்.

நாளாந்த தொலைக்காட்சி செய்திகளை விடாது தொடராக பார்த்து வருபவள் நிஸ்லா. நாட்டு நிலைமை குறித்து இறைவனிடம் மன்றாடிக்கொண்டிருக்கிறாள். நாளுக்கு நாள் வைரஸ் தாக்கத்தினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்திக்கொண்டே செல்வதும் மரணங்கள் கூடிக்கொண்டே செல்வதும் அனைவரையும் பாதித்த போதிலும் நிஸ்லாவின் மனதையும் அதிகமாகவே பாதித்திருந்தது. நடுத்தர குடும்பத்தில் மூன்றாவதும் கடைகுட்டியும் அவள்தான். அவளுக்கு மூத்தது ஒரு சகோதரியும் ஒரு சகோதரனும் நிஸ்லாவுக்கு.

அவளின் தந்தை ஒரு கூலி வேலை செய்து குடும்பத்தை ஓட்டுபவர். தாய், வீட்டில் பிள்ளைகளை பராமரித்துக்கொண்டு வருகிறாள்.

அழகிய இந்த சிறிய குடும்பத்தில் நிஸ்லா மிகவும் பேணுதலான பொறுப்புணர்ச்சியும் தேசப்பற்றும் நிரம்பியவள்.

இறைவணக்கத்திலும் மேலானவள்.

ரமழான் மாதம் என்பதனால் அதிக வணக்கவழிபாடுகளில் ஈடுபட்டிருந்தார்கள் நிஸ்லாவுடன் சேர்ந்து அவளது குடும்பத்தினரும்.

நாளுக்கு நாள் தொடர்ச்சியாக செய்தி பார்ப்பது போல் இரவு 7 மணியளவில் அவள் வீட்டில் இருந்த தொலைகாட்சியை திறந்தாள். செய்தி ஆரம்பித்ததும் கவனத்தை செய்தியில் செலுத்தி பார்த்துக்கொண்டிருந்தாள் நிஸ்லா. மரணம் எதுவும் இல்லை. வைரஸ் தொற்றும் இல்லை எனவும் குணமாகிக்கொண்டு வீடுகளுக்கு செல்கின்றோரும் என செய்தியில் தெரியவந்தது.

உடனே இறைவனுக்கு நன்றி சொல்ல தயாரானாள் நிஸ்லா. ஆனாலும் ஒரு பக்கத்தால் புதிதாக நோய்த்தொற்றாளர்களும் இருப்பதும் செய்தியில் சொல்லப்பட்டது. உயிர்களின் இழப்பு பற்றியும் நாட்டின் தொய்வு நிலை பற்றியும் அதிக கவலையோடு இறைவனிடம் மன்றாடுவாள் ஒவ்வொரு நாளும் அவள். நாட்டுப் பற்று நிறைந்த ஒரு தேசபக்தியுடையவள் என்பதனால் கவலையுடனே இருப்பாள். அன்றைய செய்தியில் வைரஸ்பற்றிய தகவலையடுத்து தொடராக பார்த்து வருகிறாள் எதுவித தொற்றாளர்களும் இல்லை சிலர் சிலராக குணமடைந்து வீட்டுக்கு செல்வதாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியில் தெரிவித்ததையிட்டு அவள் அகமகிழ்ந்தாள். இறைவனுக்கு மீண்டும் மீண்டும் நன்றியும் தெரிவித்தபடியே இருந்தாள்.

இப்படியே தொலைக்காட்சியில் ஐந்து நாட்களாக நல்ல செய்தியாகவே தகவல் சொல்லப்பட்டது. நாட்டு மக்கள் மனப்பூரிப்பிலும் மகிழ்ச்சியிலும் இருந்தார்கள்.

வழமைபோல் திங்கட்கிழமை அன்று செய்தியை திறந்தாள். நாளை முதல் அனைத்து காரியாலயங்களும் பாடசாலைகளும் கூலித்தொழிலாளிகளும் வணக்கஸ்தலங்களும் இயங்கவும் திறக்கவும் நாட்டின் தலைவர் உத்தரவு பிறப்பித்துள்ளார் என செய்தியில் தெரிவிக்கப்பட்டது. அங்கே தொலைக்காட்சிக்கு முன்னிருந்த நிஸ்லாவும் அவளது குடும்பத்தினரும் ஒருவரை ஒருவர் கட்டியணைத்து மகிழ்ச்சியை பகிர்ந்தனர்.

வீதியிலும் முழக்கமாக இருந்தது மகிழ்ச்சியின் பிரதிபலிப்பே அது.

இறைவனுக்கு நன்றி கூறியவர்களாக நிஸ்லாவின் குடும்பம் இறைவனுக்கு நன்றி தெரிவித்தபடி நின்றிருந்தார்கள்.

அடுத்தநாள் விடிந்தது. விடியல் அன்றுதான் முழுமையாய் இருளகன்றது போலிருந்தது. நாட்டு மக்களுக்கு நாட்டின் தலைவர் தந்த சலுகைகளுக்காகவும் உதவிக்காகவும் அனைத்து மக்களும் நாட்டின் தலைவருக்கு நன்றிக்கடிதம் எழுதியனுப்பி தங்களின் மரியாதையையும் நன்றிக்கடனையும் மனப்பூர்வமாக தெரிவித்தனர்.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சியை மக்கள் உணர்ந்து செயற்படலானர். கூண்டுக்கிளியை திறந்துவிட்டதுபோல் சுதந்திரமாய் உற்சாகமாய்

வழமைபோல் பாடசாலைக்கு மாணவச் செல்வங்கள் சென்றுகொண்டிருந்தனர்.

அவசர அவசரமாய் காரியாலங்களில் வேலைபார்க்கும் உத்தியோகத்தர்களும் ஆசிரியர்களும் மழையாக பொழிந்தனர் வீதிகளில்.

வணக்கஸ்தலங்கள் வழமைபோன்று திறந்து வரிசை வரிசையாய் இறைவனுக்கு நன்றி செலுத்தவென சென்று கொண்டிருந்தனர்.

பழையபடி தேசத்தை மீட்டுத்தந்த இறைவா உனக்கே புகழனைத்தும் என தக்பீர் முழங்கியது. அதேபோன்று அனைத்து வணக்கஸ்தலங்களும் வணக்க வழிபாட்டில் ஈடுபட்டு மக்கள் தங்கள் சந்தோசந்தை கொண்டாடினர்.

வாகனங்களும் பயணிகளும் அச்சம் மறந்து முகக் கவசம் தவிர்த்து பயணங்களை தொடங்கினர்.

அழுது கொண்டிருந்த தேசத்தை இறைவனை தொழுது தொழுது மன்றாடிய அனைவரின் பிரார்த்தனையும் வீணாகவில்லை எனவும் அனைத்து மக்களின் ஒத்துழைப்பிற்கும் சட்டத்தை மதித்து கட்டுப்பட்டமைக்காகவும் நாட்டின் தலைவர் மக்களுக்கு நன்றியும் தெரிவித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமைபோல் செயற்படுங்கள் சுதந்திரமாய் இருங்கள் என்று தகவல் ஒன்றை மக்களுக்கு தெரிவித்தார்.

மக்கள் மிக்க மகிழ்ச்சியுடன் செயற்படலானர்.

படித்துக்கொண்டிருந்த மேசையின் மீது அயர்ந்து தூங்கிய நிஸ்லா ஏதோ திடீரென சத்தம் கேட்டு கண்விழித்தாள் அங்கே வீட்டுக்கூரையில் பூனை தொப்பென விழுந்த சத்தம் கேட்டதை உணர்ந்தாள். அப்படியே நிமிர்ந்து அவளது மேசையின் மீதிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள் நேரம் அதிகாலை இரண்டு மணியாக இருந்தது.

நிஸ்லா கண்ட கனவை எண்ணி பிரம்மித்துப் போனாள். அதை எண்ணி அகம் மகிழ்ந்தவளாய் உடனே அந்த கனவு நனவாகும் படி உடனே வுழு (கை, கால், முகம் கழுவி) செய்து நேரம்பாராது இறைவனைத் தொழுதாள், கண்ணீர் வடித்தாள்.

அப்படியே நேரம் நகர்ந்து நகர்ந்து ஸஹர (நோன்பு நோற்கும் நேரம் அதிகாலை 4 மணி) நேரமாகியது எல்லோரையும் எழுப்பினாள் நிஸ்லா.

நிஸ்லாவின் தாய் சாப்பாடுகளை அனைவருக்கும் பரிமாறி ஸகரை நிறைவு செய்தனர். அப்படி இருக்கும்போது, தான் கண்ட கனவு பற்றி தன் குடும்பத்தாருடன் பகிர்ந்து கொண்டாள் நிஸ்லா. மகளே இறைவன் எம் அனைவரின் பிரார்த்தனையை கைவிடமாட்டான். உன் கனவும் நனவாகும் நிச்சயமாக நல்ல முடிவு கிடைக்கும் என நிஸ்லாவின் தலையை தடவி ஆறுதலாய் பதில் உரைத்தாள் நிஸ்லாவின் தாய்.

எம்.ஐ.ஹைறுன் நிசா

திறந்த போட்டி - பிரதேச மட்ட சிறுகதை போட்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிந்திருக்க வேண்டிய உளவியலும் எதிர்கால சமூகத்தின் பயணமும்

இன்றைய நவீன யுகத்தில் உளவியல் (Psychology) என்கின்ற விடயமானது மிகவும் இன்றியமையாததும் தவிர்க்க முடியாததுமான தேவைகளில் ஒன்றாக காணப்படுகின்றது. இத்தொழிநுட்ப உலகில் மனிதன் பல போரட்டங்களுக்கு மத்தியில் வாழ வேண்டிய நிர்ப்பந்த சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளான். பொருளாதார சிக்கல், அதனை தக்கவைப்பதற்கான ஓய்வில்லாத ஓட்டம், சமூக வலைத்தளங்களுக்குள் அகப்பட்ட இளம் சமூகம், போதை வஸ்த்தின் அதித பாவனை, வறுமை, மனித உரிமை மீறல், வன்முறைகள், வன்புணர்வுகள், யுத்தம், அனர்த்தங்கள், என இன்னும் பல காரணிகள் மனிதனை உள, உடல் மற்றும், சிந்தனை அளவில் பாரிய பலவீனத்தை உருவாக்கி விடுகின்றது. இந்த நிலை ஒரு மனிதனை உலகில் வாழ்வதற்கு தகுதியற்றவனாவே ஆக்கி விடுகின்றது.

இச்சூழ்நிலையில் மனிதன் விரும்பியோ விரும்பாமலோ இவ்வுலகில் வாழ்ந்துதான் ஆக வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளான். எனவேதான் குழந்தைப்பருவம் இருந்தே மனிதன் தான் இவ்வுலகில் வாழ்வதற்கான தயார்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். ஆனால் இது ஒரு சாதாரண விடயமல்ல இதற்காக ஒவ்வொரு பெற்றோரும் தன்னை அறியல், பண்பியல் மற்றும் மதம் தொடர்பான விடயத்திலும் முன் மாதிரியாக திகழ்வது அவசியமாகின்றது. தனது குழந்தையை ஒரு தாய் தனது கற்ப காலத்திலிருந்தே இவ்வுலகில் வாழ்வதற்கு தயார்படுத்த வேண்டிய அறிவு பண்பு, மத சார்பான கற்றுக் கொடுத்தல்களை ஆரம்பிக்க வேண்டிய தேவையும் உள்ளது. எனவே தன் சிறுவர் உளவியல் என்பது மிகவும் தவிர்க்க முடியாத ஒன்றாக இக் காலத்தில் இருக்கின்றது.

அன்றைய பெற்றோர்கள் பிள்ளைகளிடமிருந்து அதீத எதிர்பாாப்பினை அல்லது வெளியீடை எதிர்பார்ப்பது குறைவு அல்லது இல்லை என்றே சொல்லலாம். ஆனால் இன்றைய நவீன உலக பெற்றோர்கள் தங்களது ஒட்டு மொத்த எதிர்பார்ப்பையும், அபிலாசைகளையும் தங்களது பிள்ளைகளின் மீது திணிக்கக்கூடிய ஒரு போட்டி வளர்ப்பு முறைக்குள் தங்களது பிள்ளைகளை உள்வாங்கியிருப்பது மிகவும் ஒரு துர்ப்பாக்கிய நிலையாகும்.

குழந்தைப் பருவம், பிள்ளைப்பருவம் என்பது பிறப்பு முதல் பாடசாலைக்கு செல்லும் வரையிலான காலப்பகுதி இப் பருவமாக பார்க்கப்படுகின்றது. இக் காலப் பகுதியில் தான் மனிதன் சிறந்த ஓவியமாக செதுக்கப்படுகின்றான். இதன் போது ஒரு குழந்தையினுடைய புலனுணர்ச்சி - இயக்க வளர்ச்சி, சமூக - மனவெழுச்சி, மொழி வளர்ச்சி, உளத் திறன் வளர்ச்சி, அறநெறி வளர்ச்சி, விளையாட்டு மற்றும் கற்பனை, போன்ற விடயங்கள் ஆரம்பிக்கின்றன. இக்காலப்பகுதியில் சரியான முறையில் இவ்வாறான விடயங்களை வழங்குவதற்கு பொருத்தமாக அக் குழந்தை வாழ்கின்ற குடும்ப, சமூக மற்றும் சூழல் அமைகின்ற போதுதான் அக் குழந்தை சமூகத்தில் சிறந்த ஆளுமை பண்புகளை கொண்ட ஒரு பிரஜையாக வருவான் என்பது உறுதியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான குழந்தைகள் தங்களது விடயங்களை அடைவதற்கு கூடுதலாக பெற்றோரின் அல்லது தன்னை சூழ உள்ளவர்களின் மற்றும் சகபாடிகளின் உதவியை (caregivers) நாடக் கூடியவர்களாக அல்லது தங்கி வாழ்பவர்களாக இருப்பர். இவை கூடுதலாக கிடைக்காத சந்தர்ங்களில் அவர்கள் உள ரீதியாக பல்வேறுபட்ட ஆளுமை பின்னடைவுகளை எதிர்நோக்குவாதாக அமைகின்றது. குறிப்பாக அறிஞர் "பியாஜே" மனிதனுடைய பருவ மாற்றத்தை நான்கு வகையாக பிரித்து நோக்குகின்றார் அவை

1. புலனியக்க பருவம் - **Sensory- motor period** இது குழந்தை பிறந்தது முதல் 18 மாதங்கள் வரை

2. தூலச் சிந்தனைக்கு முற்பட்ட பருவம் -**period of pre operation thinking** இது 2வயது தெடக்கம் வயது வரை

3. தூல சிந்தனை அல்லது பருப் பொருள் சிந்தனை பருவம்- **Period of concrete operation** இது 7 தொடககம் 12 வயது வரை

4. நியம சிந்தனை பருவம் **period of formal operation** இது 12 வயதிலிருந்து நீடிக்கும்.

எனவே இதில் குறிப்பிடப்படும் முன் இரண்டு பருவங்களும் குழந்தையின் எதிர்கால உள வளர்ச்சியில் பெரும் பங்கினை வகிக்கினறது இக் காலப் பகுதியில் அவர்கள் தங்களுடைய இன்பங்களை தங்களின் உறுப்புகளினூடாக பெற்றுக் கொள்கின்றனர். எடுத்துக்காட்டாக சிக்மன் புரெய்டின் பின்வரும் பருவங்களையும் எடுத்துக் கொள்ள முடியும்

1. வாய் நிலை இன்பளுப் பருவம் - (**Oral phase)**
2. குத நிலை இன்பம் **(anal phase)**
3. பாலியல் உறுப்பு நிலை ( **Phallic Phase)**

அவைகள் குழந்தை பருவத்தில் இன்பத்தை பெறுவதற்கு பயன்படுத்துகின்றனர். இவ் விடயத்தை செய்வதற்காக கூடுதலான நேரங்களை விரயம் செய்கின்றனர் ஆனால் இன்றைய பெற்றோர்கள் கூடுதலாக மேற் குறிப்பிட்ட இன்பங்களை பெறுவதில் கூடுதலான கட்டுப்பாடுகளையும், தண்டனைகளையும் விதிப்பதும் கூட அவர்களுடைய பிற்கால வாழ்க்கையில் பல்வேறுபட்ட நெறி பிறழ்விற்கு உள்ளாவதற்கான காரணங்களாக அமைகின்றது.

மேலும் மேற்குறிப்பிட்ட காலப் பகுதிகளில் அவர்களை கட்டுப்படுத்தகின்ற போது பின்வரும் உளத் தாக்கங்களும் பிள்ளைகளுக்கு ஏற்படுகின்றன.

1. தொடர்பாடல் ஒழுங்கீனம் (**Communication Disorder**)
2. (**Attention deficit hyperactive Disorder**)
3. பிள்ளைப் பருவ பீதி (**Childhood Disorder**)
4. பிள்ளைப் பருவ மனச் சோர்வு (**Childhood Depression)**
5. உணவு உன்பதில் பலவீனம் (**Eating Disorder)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கற்றல் ஒழுங்கீனம் (**Learning Disorder**)
7. **Disruptive behavioral disorder**
8. வெளியேற்றல் குறைபாடு (**Elimination disorder**)
9. பால் நிலையை அடையாளப்படுத்துவதில் காணப்படும் பிரச்சினை ( **Gender Identity disorder**)
10. உள விருத்திக் குறைபாடு (**Mental Retardation**)

01. தொடர்பாடல் ஒழுங்கீனம்

தொடர்பாடல் செயன்முறையில் ஏற்படும் பிரச்சினை நிலை. இதில் உள்ள சிறப்பு என்னவெனில் இது ஒருவரின் அபிவிருத்தி புலன்கள் மற்றும் நரம்புத் தொகுதியின் அல்லது யாதாயினும் குறைபாடு காரணமாக ஏற்படுவதுதொன்றல்ல. இதன் கீழ் பல் வேறு ஒழுங்கீனங்கள் காணப்படுகின்றன.

**Expressive Language disorder –** அறிகுறிகள்

1. வயதுக்கேற்ற பேச்சு விருத்தியின்மை
2. பேச்சு மிகக் குறைவு
3. குறைந்தளவு சொற்களையே தெரிந்து வைத்திருப்பர்
4. ஊமை அல்லது செவிப் புலன் அற்றோர் என நினைக்க தூண்டும்
6. சொற்களை பிழையாக உச்சரிக்கும்.
7. புதிய சொற்களை மெதுவாகவே சேர்த்து கொள்ளும்
8. மிகவும் குறுகிய வசனங்களையே பேசும்
9. வசனத்தில் முக்கிய பகுதியை விட்டு விட்டு பேசும்
10. இத்தகைய ஒரு குழந்தை தனது கல்வி ஈ தொழிற் செயற்பாட்டை தொடர்வதில் சிக்கல் நிலை காணப்படும்.

இவ்வாறான பிரச்சினை ஏற்படுவதற்கு உளவியல் அறிஞர்கள் பின்வரும் காரணிகள் பிரதானமென அடையாளப்படுத்துகின்றனர்.

1. தனது பிறப்பிலிருந்து ஏற்படும் தாக்கங்கள் - கற்ப காலத்தில் ஏற்படுத்தப்படுகின்ற தவறுகள்

2. ஆரம்ப காலத்தில் ஒழுங்காக பேசுவதுடன் இடையில் பேச்சில் பிரச்சினை ஏற்படுதல் - மருத்துவ உளவியல் ரீதியான காரணங்கள்

- உளவியல் காரணியாக பெற்றோர்களின் சண்டை சச்சரவு, விவாகரத்து போன்ற காரணிகள்
- மருத்துவ காரணியாக –என்ஸபலைடீஸ் போன்ற நோய்கள் மற்றும் நரம்பு சார் நோய் ஏற்பட்டிருத்தல்.

3. உச்சரிப்பு ஒழுங்கீனம் **-Phonological disorder**

இது குழந்தைகள் சிறு பிள்ளைகள் தங்களது வயதிற்கேற்ப வார்த்தைகளை உச்சரிப்பதில் சிக்கல்களை எதிர் நோக்குவதுடன் உச்சரிப்புக்களை மாறி மாறி உச்சரிப்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அறிகுறிகள் : கடினமான உச்சரிப்பு சொற்களை தவிர்த்துக் கொள்வர்
- சபையில் அல்லது தொலை பேசியில் உரையாடுவதை தவிர்த்துக் கொள்வர்
- பேசும் போது கண்களை மூடி உதடுகளை உதறியவாறு அல்லது தலையை உதறியவாறு மூச்சை அடைத்து வைத்து கதைப்பர்கள்

02. உடனிருத்தல்களில் இருக்கின்ற பிரச்சினைகள் **(Attention difficult Hyperactive Disorder)**

அறிகுறிகள்:-

1. கவனம் செலுத்துவதில் சிரமம்
2. ஆலேசனையை பின்பற்றாமை
3. கட்டளைகளுக்கு அடிபணியாமை
4. பொறுமையாக இருக்க முடியாமை
5. ஒரு விடயத்தை பூரணப்படுத்தாமல் மற்றைய
6. ஒரு இடத்தில் தங்கியிருக்க முடியாமை விடயத்தை செய்ய ஆரம்பித்தல்.
7. அதிகம் பேசுதல் கேள்விக்கு பதிலளிக்காமை
8. இயந்திரத்தை போல ஓடுதல்
9. கேள்வி கேட்டு முடிப்பதற்கு முன் பதிலளித்தல்
10. தனது நேரம் வரை காத்திருப்பது கடினம்.

காரணங்கள்:-

1. பரம்பரை அலகின் தாக்கம்
2. உயிரியல் இரசாயணக் காரணிகள்
3. குறை மாத பிறப்பு
4. பெற்றோர்களுக்கு இடையிலான சண்டை
5. பெற்றோரின் திணிப்பு
6. குடும்பத்தில் பொது ஒழுங்கு அல்லது ஒழுக்கம் இல்லாதிருத்தல்.

03. பிள்ளைப் பருவ பீதி **(Childhood Fears)**

பிள்ளைகளுக்குள் யதார்த்தமாக பயம் காணப்படும். இது படிப்படியாக விருத்தி அடைய வாய்ப்புள்ளது. பிள்ளைகளில் செல்வாக்கு செலுத்துகின்றது.

1. School Phobia – பாடசாலை பீதி
2. Social phobia – சமூக பீதி

காரணங்கள்:-

1. பாடசாலை பிரச்சினை
2. குடும்ப பிரச்சினை
3. தாயுடன் உள்ள பிணைப்பு குறைவு
4. நண்பர்களுக்கு மத்தியில் ஏற்படும் பிரச்சினை
5. அதீத வெட்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. gps i s g; gUt kd r; NrhhT (Childhood depression)

பாடசாலை பிள்ளைகளுக்கு மத்தியில் பரவலாக இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

அறிகுறிகள் :-

1. சந்தோசமின்மை
2. வெறுப்பு
3. கவனமெடுப்பதில் பிரச்சினை
4. தற்கொலை எண்ணம்
5. குறை காணுதல்

05. உணவு உன்பதில் பலவீனம் (Eating Disorder)

இன்று அதிகமாக கட்டிளமைப் பருவம் ஆரம்பிக்கும் முன் இருந்து ஆரம்பிக்கின்றது. இன்றைய சமூகமயப்படுத்தலின் தாக்கத்தின் ஒரு விளைவு எனலாம். தங்களுடைய உடலை அழகாக வைத்திருக்க வேண்டும் என்பதற்காக உணவு கட்டுப்பட்டை தங்களுக்குள்ளே விதிக்கின்றனர். அது பின்வரும் விளைவுகளை அவர்களுக்கு ஏற்படுத்துகின்றது.

1. மாதவிடாய் ஒழுங்கீனம்
2. தோல் வரண்டு வெடித்தல்
3. தோல் மஞ்சள் நிறமாதல்
4. உடல் உஷ்ணம் குறைவடைதல்
5. இதய துடிப்பு குறைவடைதல்

06. கற்றல் ஒழுங்கீனம் (Learning Disorder)

இதனை மூன்று பிரிவாக பிரித்து நோக்க முடியும்

1. கற்றல் ஒழுங்கீனம் (Learning Disorder)
   வயதுக்கு ஏற்ப இருக்க வேண்டிய திருத்தமாக வாசிக்கும் ஆற்றல் விளங்கி கொள்ளும் ஆற்றல் இல்லாதிருத்தல்

2. Mathematical disorder
   வயதுக்கேற்ப கணித ஆற்றல் இல்லாதிருத்தல்

3. Disorder of written expression
   வயதிற்கு ஏற்றவாறு எழுத்து திறன் இல்லாதிருத்தல்.

07. **Disruptive Behavioral disorder**

இதன் கீழ் ஒழுங்கீனங்கள் பலவற்றை குறிப்பிடலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. எதிர்ப்பைக் காட்டும் ஒழுங்கீனம் **(Oppositional Defiant Disorder)**

1. வேண்டுமென்றே அடுத்தவரை கோபமூட்டுதல்.
2. அதீத கோபம்
3. பெரியவர்களுடன் எப்போதும் வாதிடுதல்
4. தனது தவறுகளை அடுத்தவர் மீது சாட்டல்
5. பெரியோருடைய வேண்டுகோள்களை, ஆலோசனைகளை நிராகரித்தல்
6. எப்போதும் குழப்பமும் பழிவாங்கும் செயற்பாடுகளில் ஈடுபடுதலும்.

2. நடத்தை ஒழுங்கீனம் **(Conduct disorder)**

1. கல்விசார் பிரச்சினை ஏற்படுதல்
2. எப்போதும் ஆசிரியர்களை பிரச்சினைப்படுத்தல்
3. அடுத்த பிள்ளைகளை அடித்தல்
4. பொய்பேசுதல், களவெடுத்தல்

08. வெளியேற்றல் குறைபாடு

மலம் கழித்தல், சிறு நீர் கழித்தல் தொடர்பான பிரச்சினை இதுவாகும்.

குழந்தைகள் தொடர்பாக பெற்றோருக்கு இருக்கும் பிரச்சினை இதுவாகும். இது இரண்டு வகையில் நடைபெறுகின்றது. அதாவது நித்திரையில் சிறு நீர்கழித்தல், அடுத்தது பொருத்தமில்லாத இடத்தில் இதனை செய்வது இது பின்வரும் காரணங்களினால் மேற் கொள்வதென அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

1. பதகளிப்பு மற்றும் உளவியல் கோளாறு
2. மருந்துகளின் பின் விளைவு
3. தைரொய்ட் சுரப்பிகளின் தாக்கம்
4. மலசலகூட பாவனை தொடர்பான முறையான பயிற்சி வழங்காமை.

09. பால் நிலையை அடையாளப்படுத்துவதில் காணப்படும் பிரச்சினை **(Gender Identity disorder)**

இது பெண்பிள்ளையை ஆண் பிள்ளையாகவும் ஆண் பிள்ளையை பெண் பிள்ளையாகவும் அன்பாக வளர்ப்பர். இது பிள்ளைகளின் பிற்பட்ட வாழ்க்கையில் அவர்களுடைய நடத்தை சார்பாக சமூகத்தில் பல்வேறுபட்ட சாவால்களையும் தாக்கங்களுக்கும் உள்ளாகினறனர்

10. உளவிருத்தி குறைபாடு


குறிப்பாக மேற் குறிப்பிட்ட எந்தவெரு இடத்தில் ஏற்படும் தாக்கங்களும் குழந்தைகளின் நுட்ப அறிவிலும் நடத்தைச் செயற்பாட்டிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்றாகவே காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே உளவியலில் துறையில் பல்வேறுபட்ட பிரிவுகள் இருந்தாலும் அதில் அடிப்படையானதும் முதன்மையானதுமானமான விடயமாக குழந்தை உளவியல் காணப்படுகின்றது. குழந்தைப் பருவத்தில் ஏற்படுகின்ற மேற் குறிப்பிட்ட பிரச்சினைகள் தாங்களது குழந்தைகளின் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக காணப்படுமேயானால் அவற்றை குறிப்பிட்ட பருவத்தில் சரியான முறையில் இணங்கண்டு உளவளத்துறை செய்வதனூடாக குடும்பத்திலும் சமூகத்திலும் ஆரோக்கிமான பிரஜைகளை உருவாக்க முடியும். புறம்பாக பிள்ளைகளை கண்டித்தும் தண்டித்தும் வளர்ப்பதன் மூலமாக மேலும் உக்கிரமடைந்த, ஆரோக்கிமற்ற சமூக கட்டமைப்பினை உருவாக்க நாமே காரணமாகிவிடக் கூடாது.

எனவே பெற்றோர் தங்களது பிள்ளைகளின் நடத்தைகள், செயற்பாடுகள், பழக்க வழக்கங்களில் கூடுதலான கவனம் செலுத்துவதனூடாக அவர்களுடைய கல்வி, சமூக இடைவினைகள், தொழிற்துறை, திருமண வாழ்கை போன்றவற்றில் ஏற்படும் சவால்களை முறையடித்து சிறந்த ஆளுமையும். ஆக்கத்திறனும் உள்வர்களாக உருவாக்க பெற்றோர்களாகிய அனைவரும் முனைப்புடன் பங்களிப்பாற்ற வேண்டியது காலத்தின் இன்றியமையாத தேவையாகும்.

எம்.எம் சமீர், **MA** (reading), Diploma in counseling
அபிவிருத்தி உத்தியோகத்தர்
முனை இலக்கிய மலர் குழு உறுப்பிணர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்மக் கொலை

கண்ணறியா வைரஸ் ஒன்று
எம்மை கண்ணீர் வடிக்கச் செய்கிறது
எங்கிருந்து எய்கியதோ!
ஏனோ இந்த மர்ம வெறி.

சுறுசுறுப்பாய் சென்ற உலகம்
சுக்கு சுக்கய் உடைகிறது.
யார்வைத்த கண்ணோ!
இல்லை நாம் செய்த கர்மமோ.

திடீர் திடீரென,
உள்ளங்கள் கார் மேகமாய் சூழ
உயிர் கொல்லும் மின்னலாய்
மானிடனை சாம்பல் ஆக்குகிறது.
ஏதோ ஒரு வைரஸ்.

எத்தனை எத்தனையோ
வைரசுகள் வந்தாலும்
வைத்தியமில்லாமல் பைத்தியமாக்கும்
வைரசும் இதுவே.

தினம் தினம் உசிரை
உசிப்பிப் பார்க்கிறான் மானிடன்
எப்போது மரணம் என்று.
வந்தாலும் தெரியவில்லை
வரும் என்றும் அறிய வில்லை.
காலத்தின் கோலமிதோ
கட்டாயக் கலங்கமதோ
ஒரு காலத்தில் மனிதன்
இயற்கையோடு ஒன்றித்து
அதற்கென்றும் இடம் கொடுத்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இன்றைய மானிடன்
முடிச்சுக்கட்டி மூலையில் முடக்கி விட்டான்
இந்த இயற்கையை.
அதனாலோ என்னமோ

பகுத்தறியா ஜீவன்கள் இவ்வுலகை
பங்கு போட நினைக்கிறதோ!
என்னவெல்லாம் எண்ணலாம்
எண்ணாத இந்த மர்மக் கொலைக்கு.
வாழக்கையின் தத்துவத்தை தட்டிக்கழித்து
சிந்தையின்றி கழியாட்டம் செய்தவனை
செருக்கி விட நினைத்தானோ இறைவன்.

எச்சிந்தை கொண்டாலும்
பாவங்கள் களைந்தெறிந்து
மன்னிப்பபை கோரி நின்று
இறைவனடி இரங்கிடுவோம்.
கொடிய இந்த கொரோனாவை
குழி தோண்டி புதைத்து விட.

திருமதி. ச.அக்கிலா பானு,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,பெரியநீலாவணை -02

எங்கு ஒற்றுமை இருக்கிறதோ
அங்கு
வேற்றுமையுண்டு
எங்கெல்லாம் வாழ்வு
தென்படுகிறதோ
அங்கெல்லாம் சாவுமுண்டு
[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவியால் புவியாளும் காலக் கவிஞன் சோலைக்கிளியும் முனையின் முதுசங்களும்

கவிஞர்கள் என்று தம்மைத்தாமே புனைப்பெயரிட்டு உலாவரும் கண்ணாடிக்கவிஞர்கள் மத்தியில் கவியால் உலகாளும் உலகக் கவிஞர்களும் எமது மண்ணில் பிறந்திருப்பது பெரும் பேறாகவே கொள்ளவேண்டும், அந்த வகையில் முனையெனும் சோலையில் கவிபாடும் சோலைக்கிளியின்றி கவி சோபிக்காது என்ற புது மொழிக்கு ஏற்ப கவியால் காலத்தை வென்ற கவிஞன் எம்.யு. அத்தீக் எனும் நாமத்தையுடைய சோலைக்கிளி அவர்கள் 7பேர் கொண்ட குடும்பத்தில் 1957-01-03 ம் திகதி முகைதீன்பாவா உதுமாலெவ்வைக்கும் மீரா உம்மாகும் தலைமகனாக கல்முனைக்குடி எனும் கிராமத்தில் பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை ஆண்கள் பாடசாலையில் (தற்போதய அல் அஸ்ஹர் பாடசாலை) கற்றார். அதன்பின் உயர்தர கல்வியை கல்முனை ஸாஹிறாவிலும் கற்று ஆசிரியர் தொழிலில் சொற்பகாலம் பணிபுரிந்துவிட்டு மக்கள் சேவை செய்வதற்காக 1987ல் விசேட சேவை உத்தியோகத்தராக நியமனம் பெற்றார். மாளிகைக்காடு, மாவடிப்பள்ளி போன்ற கிராமங்களில் சேவையாற்றி மக்கள் மயமானார்.

1987 ஆம் ஆண்டின் அரசின் கொள்கையின்படி இப்பதவியானது கிராம சேவை உத்தியோகத்தராக பெயர் மாற்றப்பட்டதன் விளைவாக கிராம சேவகராக பல பிரதேசங்களில் கடமையாற்ற 31 வருட சேவையின் பின் கடந்த 2012 ல் ஓய்வு பெற்றார்.

இவரின் இலக்கிய பயணம் 1970 ஆம் ஆண்டுகளில் சாதாரண தரம் படிக்கும் போதே ஆரம்பமாகியது, ஆயினும் 1980 களிலே இலக்கிய உலகில் சோபிக்கத் தொடங்குகின்றார், ஆரம்பக் கவிதைகள் சந்தக் கவிதைகளாக வெளிவந்தன, தினபதி பத்திரிகையில் "கவிதா மண்டலம்" எனும் பகுதியில் இவரின் கவிதைள் தொடர் ஊற்றாக வெளிவந்து, கால ஓட்டத்தில் வாசகர் உள்ளங்களில் உடும்பு பிடி போல் இறுக்கமாக பற்றிக் கொண்டது.

சந்தக் கவிதைளில் ஆட்கொண்டிருந்த இவர் பின்பு அதிலிருந்து விடுபட்டு நவீன கவிதைக்குள் பிரவேசிக்கின்றார், மல்லிகை எனும் சஞ்சிகையில் டொமினிக் ஜீவா என்பவரால் இவரின் கவிதைகள் அரங்கேற்றப்பட்டன அதன் பின். தொடர்ந்து நவீன கவிதைக்கும் நவீன கவி உலகிற்கும் சொந்தக்காரர் ஆனார் எனலாம்.

வானொலி நாடகம் பிரபல்யமடைந்த அக்காலத்தில் இவரால் எழுதப்பட்ட 13 நாடகங்கள் மற்றும் பக்தி இலக்கியங்கள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகின. இவை அக்காலத்தில் பிரபல்யமாக பேசப்பட்டதுடன் ரசிகர்களின் மனங்களிலும் நெடுப்பமாக ஓட்டிக் கொண்டது.

தமிழ் கவிதையுலகில் இவரின் கவிதைகள் புதிய கம்பீரமாக நடைபோட ஆரம்பித்தன குறிப்பாக நானும் ஒரு பூனை, காகம் கலைத்த கனவு, எட்டாவது நரகம், பாம்பு நரம்பு மனிதன், பனியில் மொழி எழுதி, ஆணிவேர் அறுந்த நான், என்ன செப்பங்கா நீ , வாத்து, அவனம், பகல் தண்டவாளத்தில் ரயில், மண் கோழி போன்ற கவிதை தொகுப்புகள் கவியுலகில் பேசு பொருளாக காணப்பட்டது மட்டுமன்றி அவற்றில் பாம்பு நரம்பு மனிதன், பனியில் மொழி எழுதி ஆகிய இரண்டு நூலுக்கும் தேசிய சாஹித்திய மண்டல பரிசு 1988, 1989 ஆம் ஆண்டுகளில் கிடைத்தன. மேலும் மண் கோழிக்கு தேசிய சாஹித்திய விருதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல் காகம் கலைத்த கனவுக்கு "விபவி" விருதும் எட்டாவது நரகத்தற்கு வடகிழக்கு சாஹித்திய மண்டல விருதும் கிடைத்தமை இவரின் கவிக்கு கிடைத்த உயர் மரியாதையும் கௌரவமும் ஆகும்.
கவிதைகள் மட்டுமன்றி இவரின் உரைநடைகளும் இலக்கிய வரவுகளில் இதயங்களை வருடிச் சென்று வசியமாகின அவைகளில் பொன்னாலே புழுதி பிறந்த பூமி, நெடுப்பமாய் இழுத்த பந்தல் போன்ற உரை நடைகளைக் குறிப்பிடலாம்.
இவரின் அநேகமான வெளியீடுகள் எமது தேசத்தை தாண்டியும் இந்தியா பிரான்ஸ் சுவிஸ்லாந்து போன்ற நாடுகளில் உள்ள பதிப்பகங்கள் ஊடாக வெளியிடப்பட்டுள்ளன என்பது உலக கவிக்கு கிடைத்த இன்னொரு அங்கிகாரமாகவே பார்க்கப்படுகின்றது.
விருது தேடி அலையும் கலைஞர்கள் மத்தியில் விருதுக்கு விரும்பாத கலைஞர்களில் இவரும் ஒருவர் எனினும் விடுபட முடியாத விருதுகளை பெற்றுள்ளார். மேலும் 2011 ஆம் ஆண்டில் ஜப்பான் அரசினுடைய கலாசார விருதான " புங்கா " விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். வித்தகர், கலாபூசணம் , IBS விருதுகளுடன் கொழும்பு கம்பன் கழகம் வழங்கும் கம்பன் கழக விருது வழங்கி பெருமைப்படுத்தப்பட்ட கிழக்கிலங்கையின் முதல் கவிஞராகவும் விளங்குகின்றார்.
இவரின் கவிதைகள் கன்னட மொழி ஆங்கிலம், ஜேர்மன் சிங்கள மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது என்பது இவரின் கவிக்கு கிடைத்த மானிட மகுடமாகும்.
இதைவிட 10 ஆம் ஆண்டு 11 ஆம் ஆண்டு மாணவர்களின் தமிழ்பாட புத்தகங்களில் "சீறி ஓடாத வருங்கால மனித நதி" எனும் தலைப்பில் இவரின் கவிதை உள்ளடக்கப்பட்டுள்ளது.மேலும் பல்கலைக் கழக மாணவர்களால் மேல் தத்துவ படிப்பிற்காக (MA) இவரின் கவிதைகள் ஆய்வு செய்யப்படுவதும் பட்டம் பெறுவதற்காக பல்கலைக்கழகங்களில் சமர்பிக்கப்படுவதும் இவரின் கவிதைக்கு கிடைத்த பெரும் அங்கிகாரமாகும். .
கல்வியல் கல்லூரிகளில் கற்கும் மாணவர்களுக்கு இவரின் கவிதைகள் ஒரு பாடமாக விளங்குவதும் தரணியில் கவிக்கு அரசன் எனும் நாமத்தை சொல்லாமல் சொல்லுகின்றது. சோலைக்கிளி நீ பச்சைக்கிளியுமல்ல மதுரங்கிளியுமல்ல ரசிக்கத் தெரிந்த ரசிகர் மனங்களில் வாழும் மாகவி.
இவரின் பல படைப்புக்கள் நூலாக்கம் பெறவுள்ளது அவற்றில் மேடையுரைகள், குரல் எடுத்தெறிந்த நாக்கு எனும் உரை நடைகள் போன்றன குறிப்பித்தக்கது. அத்துடன் சமூக வலைத்தளங்களில் ஒன்றான முக நூலில் இவரின் கவிதைகள் வாரந்தோறும் வசந்தம் வீசி வலம் வருவதினை முக நூல் உறவுகள் நன்கறிவர்.
எனவேதான் காலத்தால் அழியாத ஞானக் கவிஞன் சோலைக் கிளி இன்றி கவிக்கு மொழியுமில்லை அழகுமில்லை அதனால் தான் நானிலம் போற்றும் நானக் கவிஞகன் இன்றி இந் நிலம் கவிபாடது. கவியால் உயர்ந்த கலைஞனுக்கு காலங்கள் உள்ளவரை வாழ்துவோம் வையகம் சார்பாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முனையின் முதுசங்கள்

கிழக்கிலங்கையின் கலை இலக்கிய வளர்ச்சியில் கல்முனைக்கு என்று தனியான வகிபாகமுண்டு, இதற்கு சான்றாக முனையில் வாழ்ந்து மறைந்த முதுசங்களின் எழுத்தியல் எடுத்தியம்புகின்றது.

சிறந்த எழுத்தாளன் என்றுமே இறப்பதில்லை இறந்தாலும் வாசகர் மனங்களில் நீங்காமல் வாழ்ந்து கொண்டிருப்பார்கள் அந்த வகையில் காத்திரமான சிறுகதைகள்,கவிதைகள் மூலம் புடம் போட்ட கலைஞர்களில் சிலர் இங்கே முனையின் முதுசங்களாக மிளிர்கின்றார்கள்

01.எ.எச்.எம்.மஜித்



02.எஸ்.எஸ்.ஹுசைன் பாரி



04.எ.எ.எப்.நஸீறா





05.வி.எம்.எம்.இஸ்மாயில்



07.யூ.எல்.எம்.ஹனிபா



06.எம்.ஐ.எம் றஊப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எஸ்.சிவ ஜோதி
பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
கல்முனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையிலும் புலமை கொண்டு இலக்கியப் பணி செய்து வாழ்ந்து மறைந்தவர் மருதமுனை கலாபூஷணம் மருதூர் வாணர்

## மறைந்து போன முதுசங்களின் ஒருவரின் கலை வாழ்க்கை பார்வை

பிரபல எழுத்தாளரும்,கவிஞரும் சமாதானம் சஞ்சிகையின் ஆசிரியருமான மருதமுனையைச் சேர்ந்த கலாபூசணம் எஸ்.எல்.ஏ. லத்தீப் என்ற மருதூர் வாணர் மரணித்து கடந்த 2020-05-08ஆம் திகதியுடன் பதினொரு வருடம் பூர்த்தியடைந்துள்ளது.

மருதூர் வாணர் தனது எழுபதாவது வயதில் கடந்த 2009.05.08ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை மருதமுனை பிரதான வீதியைக் கடக்க முற்படும் போது விபத்தில் உயிரிழந்தார். இன்னாலில்லாஹிவஇன்னாஇலைஹி ராஜிஊன். மருதூர் வாணர் இலங்கையின் இலக்கியப்பரப்பில் இலக்கியப் படைப்பாளிகளின் வரிசையில் குறிப்பிடத்தக்க பல சாதனைகளை புரிந்துள்ளார். இலக்கியமே இவர் பேச்சிலும், மூச்சிலும் நடைமுறைச் செயற்பாடுகளிலும் இருந்து வந்ததை யாரும் மறுக்க முடியாது. எல்லோரோடும் மிகவும் அன்பாகவும் அந்நியோன்யமாகவும் உறவை வளர்த்துக் கொள்வதில் முன்னோடியாக இருந்தார். தள்ளாத வயதிலும் தளராத மன உறுதியோடு நில்லாமல் இலக்கியப் பணி செய்து வந்தவர் மருதூர் வாணர்.

தனக்கென ஒரு பாணியை அமைத்து தனித்துவமாக யாரும் அணியாத வித்தியாசமான சல்வார் உடையணிந்து தனது பழைய சைக்கிள் வண்டியில் தினமும் நூலகத்திற்குச் சென்று நாளேடுகள் அனைத்தையும் வாசித்து முடிப்பது அவரது நாளாந்தக் கடமைகளில் முக்கியமானதொன்றாகும்.

எறும்பு போல் சுறுசுறுப்பாக எல்லாக் கலை இலக்கிய நிகழ்வுகளிலும் முன்வரிசையில் அமர்ந்துகொள்வார். அவருக்கு எது சரி என்று படுகின்றதோ அதைச் செய்வார். நல்ல கலை இலக்கிய எழுத்துக்களைப் பாராட்டுவார். யாராக இருந்தாலும் பிழையானவற்றை துணிந்து விமர்சிப்பார்.

கவிஞர்கள் எழுத்தாளர்கள் சிலர் உட்பட இந்தியக் கவிஞர் கவிக்கோ அப்துர் ரஹ்மானைப் பற்றியும் மருதூர்வாணர் விமர்சிக்கத் தவறவில்லை. ஆரம்பகாலத்தில் கலை இலக்கித்தோடு அரசியலில் அதிக ஈடுபாடுகொண்டு பல தமிழ் முஸ்லிம் அரசியல் தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டிருக்கிறார்.

தந்தை செல்வநாயகத்துடனும் பின்பு மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபுடனும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் 1939.08.24 ஆம் திகதி மருதமுனையைச் சேரந்த சாலிஹ்லெவ்வை போடியார், சரீபா உம்மா தம்பதியருக்கு 3 வது மகனாக மருதமுனையில் பிறந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது இலக்கிய ஆசான்களாக புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளையையும் அவருக்குப்பின் புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்களையும் நன்றியுடன் நினைவு கூறியியிருக்கின்றார். 1951ஆம் ஆண்டு வீரகேசரிப் பத்திரிகையின் மாணவர் பகுதியில் "என் தம்பி" என்ற தலைப்பில் பிரசுரமான கவிதையின் மூலம் தனது 11வது வயதில் இலக்கிய உலகிற்குள் பிரவேசித்துள்ளார்.

இவர் பாடல், நடிப்பு, இசை ஆகிய துறைகளில் அதிக ஈடுபாடு கொண்டவர். அத்தோடு நூற்றுக்கணக்கான கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் என எழுதியுள்ளதோடு நபி ஜனனப்பா, இசைவிருந்து, முரசொலி, பெருநாள் பரிசு, முதலிரவு, சூறாவளி, மத்திய கிழக்கிலே போன்ற நூல்களையும் இன்னும் பல நூல்கலையும் எழுதியுள்ளார்.

மேலும் தேன்மதி என்ற சஞ்சிகையை வெளியிட்டதோடு இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வின் மூலம் சமாதானம் வளரவேண்டும் என்ற தூய எண்ணத்தோடு "எல்லா இனங்களும் இணைந்தன்பு கொள்வோம்" என்ற தொனிப் பொருளில் 1988 ஜூலை மாதம் முதலாவது "சமாதானம்" சஞ்சிகை இதழை வெளியிட்டு மரணிக்கும் வரை 16 இதழ்களை வெளியிட்டுள்ளதேடு 17வது சமாதானம் இதழை வெளியிட இருந்த நிலையிலேயே அவர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது எழுத்துப் பணிக்கு தினகரன், வீரகேசரி, தினபதி, சிந்தாமணி, தினக்குரல் நவமணி, சுடர் ஒளி, இடி, ஈழநாதம், தமிழ்அலை, முஸ்லிம் குரல், தினச்சுடர் போன்ற பத்திரிகைகளுக்கு எப்போதும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வார். மேலும் சுதந்திரன், விவேகி, கலாவில்லி, கதம்பம், சுடர், ராதா, திருமகன், வெற்றிமணி, செங்கதிர், சரித்திரன் போன்ற சிறு பத்திரிகைகளுக்கும் இவர் ஆக்கங்களை எழுதியுள்ளார்.

குட்டிப் புலவன், இசைவாணர், ஈழபாரதி எனப் பல பட்டங்களைத் தன்னகத்தே கொண்டதோடு 2001ஆம் ஆண்டு கலாபூஷணம் விருதும் அரசாங்கத்தால் இவருக்கு வழங்கப்பட்டது. இவரது அரசியல் மற்றும் இலக்கியப் பணியைப் பாராட்டி யாழ் தந்தை செல்வா நினைவு மன்றத்தால் 2004.04.26 ஆம் திகதி யாழ் பல்கலைக் கழக கைலாசபதி அயரங்கில் "தந்தை செல்வா விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மேலும் தினச்சுடர் விருதும் சிரேஷ்ட கவிஞருக்கான சான்றிதழும் கடந்த 2004.06.06 ஆம் திகதி கல்முனையில் ஊடகப் பிரதி அமைச்சர் எம்.எச். சேகு இஸ்ஸதீன் அர்களால் வழங்கப்பட்டது. மேலும் தென்கிழக்குப் பல்கலைக் கழக பீடாதிபதி கலாநிதி கே.எம்.எச். காலிதீன், செழியன் பேரின்பநாயகம் உட்பட பலர் இவருக்குப் பொன்னாடைபோர்த்தி இவருக்கு இவரது இலக்கியப் பணியை பாராட்டியுள்ளனர்.

இலக்கியமே தனது உயிர் மூச்சாக எண்ணிச் செயற்பட்டுவந்த இவருக்கு இவர் மரணிக்கும் வரை கிழக்கு மாகாண ஆளுனர் விருது, வித்தகர் விருது என்பன வழங்கப்படாமல் போனது பெரும் குறையாகும். இலங்கை அரசாங்கத்தால் கலை இலக்கியத்துறைக்கு என்னென்ன விருதுகள் வழங்கப்படுகிறதோ அத்தனை விருதுகளையும் பெறுவதற்கு மருதூர்வாணர் தகுதியானவர் என்பது பலரது அபிப்பிராயமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதாக எந்த வருமானமும் இல்லாத நிலையில் இவர் தனது இலக்கியப் பணியைச் செய்துவந்ததோடு இன நல்லுறவுக்காக சமாதானம் என்றபேரிலே 16 இதழ்களை வெளியிட்டு சாதனை படைத்துள்ளார். இவரது இலக்கியப் படைப்புகளின் பிரசவத்திற்கு சட்டத்தரணியும், பதில் நீதிபதியுமான மருதமுனையைச் சேர்ந்த ஏ.எம். பதுறுத்தீன் அவர்கள் அவ்வப்போது நிதியுதவிகளை வழங்கி மருதூர் வாணரை உச்சாகப் படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மருதூர்வாணர் சேமித்து வைத்திருந்த பெருந்தொகையான நூல்களை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், மருதமுனைப் பொது நூலகம், மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி நூலகம் ஆகியவற்றிற்கு தனது அந்திமக் காலத்தில் வழங்கினார். இவரது கவிதைகள், கட்டுரைகள், கதைகள், நூல்கள், ஏனைய இலக்கியப் படைப்புக்கள் அனைத்தும் தென்கிழக்குப் பல்ககலைக்கழகத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

குறைந்த கல்வித் தகைமையோடு நிறைவான இலக்கியப் பணி செய்த மருதூர்வாணர் என்னுடனும் எனது குடும்பத்தினருடனும் மிகவும் நெருக்கமான உறவைப் பேணிவந்தார். வறுமையிலும் புலமை கொண்டு பல்வேறு ஆளுமைகளுடன் பிரகாசித்த மருதூர்வாணரின் இறப்பு இலக்கிய உலகிற்கு மட்டுமல்லாது மருதமுனைக்கும் பேரிழப்பாகும். இவரது பாவங்கள் மன்னிக்கப்பட்டு ஜன்னத்துல் பிர்தௌஸ் என்னும் சுவர்க்கம் கிடைக்கப் பிரார்த்திறிகின்றேன்.

கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர்

உடலை அழகுபடுத்திக்
கொள்வதை விட
மிகமிக முக்கியம் நம்
மனதை, உள்ளத்தை
அழகுபடுத்திக்
கொண்டு, பிறர் மனதை
மதித்து வாழ்வது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலைவளர்ப்போமா!

கலைவளர்ப்போமா? கதையும்
சொல்லவா

கண் திறப்போமே கனவும்
காணுவோம்

கலாசாரம் பேணவந்த
கலைஞரெல்லாமே

கலையை பாதுகாத்து பண்படுத்தும்

மேதையல்லவோ

(கலைவளரப்போமா)

தனி சமூக கலாசாரம்

இருக்க வேண்டுமே

மற்ற மக்களுக்கு உரியதென்றதனை

மதிக்க வேண்டுமே

(ம்ஹ்ஹ்ஹ்) (II)

பார்த்து பார்த்து அதனை நாமும்

வளர்க்க வேண்டுமே

குறை நிறைகளதை

செப்பனிட்டு செய்ய வேண்டுமே (II)

கலைகளல்லவா பெரும்

செல்வமல்லவா

அதை விட்டொதுக்கி வாழுவதும்
மடமையல்லவா?

(II) (கலைவளர்ப்போமா)

பண்பாடு பாரம்பரியம்
பின் தொடர்வோமே
ஏம் பிள்ளைகளை அதன் வழியே
செல்ல வைப்போமே
(ம் ஹ்ஹ்ஹ்)
கலாசாரம் கண்ணியத்தில்
கலந்திருப்போமே
காலகாலமாகநடந்தவற்றில்
கரைந்திருப்போமே
(ம் ஹ்ஹ்ஹ்)

நாகரீக உலகத்திலே
நனையும் வேளையில்
கலை கலாசாரம் கரைந்திடாமல்
காக்க வேண்டுமே (II)

கலையைப் போற்றுவோம்
அதை நலவுமாக்குவோம்
நாளை நாடுபோற்றும்
நற்பிரசை ஆகிக்காட்டுவோம்
(II) (கலைவளர்ப்போமா)

இம்திஸா ஹஸன்
திறந்த போட்டியாளர்-
கவிதைப் பாடலாக்கப் பேட்டி
அபிவிருத்தி உத்தியோகத்தர்
(மத்தியஸ்த சபை)
பிரதேசசெயலகம் - கல்முனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலை அனர்த்த பாதுகாப்புத் திட்டம்

உலகம் தோன்றியது முதல் இன்று வரையும் ஏதோ ஓரிடத்தில் ஒவ்வொரு நாளும் அனர்த்தங்கள் நிகழ்ந்த வண்ணமேதான் இருக்கிறது. மனிதர்கள் வாழுகின்ற, வாழாத இடங்களிலும் இதன் தாக்கம் இருக்கத்தான் செய்கிறது. மனிதன் நெருக்கமாக வாழுகின்ற பகுதிகளில் இதன் தாக்கத்தை இன்னும் அதிகம் உணர முடிவதுடன் பாதிப்புகளுக்கும் உள்ளாக நேரிடுகிறது.

அந்த வகையில் இவ்வாறான அனர்த்தத்தை வரைவிலக்கணப்படுத்தினால் சமூக செயற்பாடுகளை பாதிப்படையச் செய்வதன் விளைவாக மனித மற்றும் பொருட்களுக்கும் சூழல் தொடர்பான வளங்களுக்கும் நேரடியாக தாக்கம் செலுத்தக்கூடிய பாரிய விளைவே அனர்த்தமென்று கூறலாம். மேலும் கூறுவதாயிருந்தால் பொதுவாக நடைமுறை வாழ்க்கை நிலையை துரிதமாக பாதிப்படையச் செய்வதன் விளைவாக மக்களுக்கு பாதுகாப்பு நிலைமை, உணவு வசதிகள், உடை, உறையுள், சுகாதாரம், சமூகச் சிகிச்சை மற்றும் உயிர் வாழ்வு தொடர்பான ஏனைய தேவைகளைப் பெற்றுக் கொள்ளும் அளவு ஏற்படும் பாரிய அழிவுகளையும் அனர்த்தமாக காண முடிகிறது.

அனர்த்தங்களை பொறுத்தமட்டில் இயற்கையாகவும், செயற்கையாகவும், மனித செயற்பாடுகள் மூலமாகவும் மற்றும் தொழிநுட்ப ரீதியாகவும் ஏற்பட வாய்ப்புக்கள் இருக்கின்றன. அந்த வகையில் பல அனர்த்தங்களை இன்று நாங்கள் பார்க்கக்கூடியதாகவுள்ளது. சுனாமி, சூறாவளி, வெள்ளப்பெருக்கு, வரட்சி, இடிமின்னல், புவிநடுக்கம். மண்சரிவு, கடலரிப்பு, யுத்தம், இனக்கலவரம், தொற்று நோய்கள், கொவிட் 19 வைரஸ் தொற்று, எரிமலை வெடிப்பு, விண்கற்கள் விழுதல், பனிமலை உருகுதல், வனவிலங்குகளின் பாதிப்பு, வீதி விபத்து மற்றும் காட்டுத்தீ என பல அனர்த்தங்களை வகைப்படுத்தி கூற முடியும்.

இதன் அடிப்படையில் பாடசாலைச் சூழலில் இனங்காணப்படும் அனர்த்தங்களாக இரசாயனக் கழிவுகளின் தாக்கம், தீப்பிடித்தல், விபத்துக்கள், தொற்று நோய்கள், கட்டிட இடிபாடு, வெள்ளப்பெருக்கு, சூறாவளி, வரட்சி, இடி மின்னல், புவிநடுக்கம் மற்றும் மாணவர்களுக்கு இடையிலான மோதல் போன்றவற்றுடன் கரையோரப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் சுனாமி, மண்ணரிப்பு அனர்த்தங்களையும் மலைநாட்டு பகுதியில் உள்ள பாடசாலைகளில் மண்சரிவு அனர்த்தத்தையும் சில கிராமப்புறங்களில் உள்ள பாடசாலைகளில் வனவிலங்குகளின் பாதிப்புக்களையும் கூறமுடியும். இதற்காக வருடத்தில் ஏற்படப்போகும் அனர்த்தங்களை கால அட்டவணைப்படுத்தி அதற்கேற்றாற்போல் எமது முன்னாயத்தங்களைச் செய்து கொள்ள வேண்டும். அப்பொழுது முழுமையாக இல்லா விட்டாலும் ஓரளவேனும் நமது மாணவச் செல்வங்களை பாதுகாக்கலாம்.

இதற்காகவே அனர்த்தத்துக்கு முன்னரான நிலைமைகளை கருத்திற் கொண்டு செயற்படுவதன் மூலம் தப்பிக்க முடியும். அதாவது அனர்த்தத்துக்கு முன்னரான நிலைமைகள் என்னும் போது

1. முன்னெச்சரிக்கை வழங்கும் உபகரணங்களை தயார் நிலையில் வைத்தல்.
2. முன்னெச்சரிக்கை தொடர்பான பயிற்சிகளை முன்கூட்டியே பெற்றிருத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பாதுகாப்பான வழிகளை அடையாளப்படுத்தி குறித்து காட்டும் வரைபடங்களை வைத்திருத்தல்.

4. உதவி நிறுவனங்களுடன் தொடர்பில் இருத்தல்.

5. அவரவருக்குரிய பொறுப்புக்களையும், நடவடிக்கைகளையும் உரிய நேரத்தில் செயற்படுத்துதல்.

எவ்வளவுதான் அனர்த்தத்துக்கு முன்னரான நிலைமையை மேற்கொண்டாலும் சில வேளைகளில் திடீர் அனர்த்தங்களின் போது சமூகப் பாதிப்புக்களின் ஊடாக உயிரிழப்புக்கள் ஏற்படுவதுடன் இருப்பிடங்களை விட்டு வெளியேறும் நிலையுடன் ஜீவனோபாய வழி வகைகளை இழப்பதுடன் குற்றங்களும் அதிகரிக்க வாய்ப்புக்கள் உண்டாகின்றது. அதன் வழியாக நாளாந்த நடவடிக்கைகளுக்கு தடை ஏற்பட்டு நோய்களுக்கு உள்ளாகக் கூடிய வாய்ப்பு அதிகம் காணப்படுவதுடன் இதனூடாக மாணவர்களின் கல்வியும் முற்று முழுதாக பாதிப்படைகின்றது. அதே போன்று பொருளாதார பிரச்சினைக்கு முகங்கொடுக்க வேண்டியும் ஏற்படுவதுடன் எமது பயிர் நிலங்கள் நாசமடைவதுடன் மண்வளமும் பாதிப்படைவதுடன் எமது சூழலின் உட்கட்டமைப்பு வசதிகளும் மாற்றியமைக்கப்படுகிறது.

இதற்காகவே பாடசாலை அனர்த்த பாதுகாப்புத் திட்டத்தில் பாடசாலையின் உள்ளேயும் வெளியேயும் இடம் பெறக்கூடிய அனர்த்தங்களை இனங்கண்டு தீர்வுகளை வழங்குவதன் மூலம் எமது மாணவச் செல்வங்களை இவ்வனர்த்தங்களில் இருந்து முழுமையாக பாதுகாக்க முடியும். இதற்காக அவசரகால குழுக்களின் பொறுப்புக்கள் உரிய நேரத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். அதற்காக அவர்கள் பின்வருமாறு செயல்பட வேண்டும்.

01. பாடசாலைச் சமூகத்தை ஒன்றிணைத்தல்.

02. ஏச்சரிக்கை சமிக்கைகளை தயார் நிலையில் வைத்திருத்தல்.

03. வெளியேற்றல் நடவடிக்கைக்குரிய முன்னாயத்தம்.

04. தொடர்பு கொள்ள வேண்டிய முக்கிய நபர்களின் பட்டியலை தயாரித்து வைத்திருத்தல்.

05. ஏதேனும் அவசர கால நிலைமைகளை பாடசாலை நிருவாகத்துக்கு அறிவித்தல்.

06. அவசர நிலைமைகளின் போது உதவுவதற்கு வெளிமுகவர்களான காவல்துறை, வைத்தியசாலை, பிரதேச செயலகம் மற்றும் கல்வித் திணைக்களம் என்பவற்றுக்கு அறிவிக்க தயார் நிலையில் இருத்தல்.

07. காணாமல் போனவர்களைப் பற்றி தேடல் மீட்புக் குழுக்களுக்கும் மற்றும் தீயணைப்பு சேவைக்கு அறிவித்தல்.

பாடசாலைகயைப் பொறுத்தமட்டில் ஆய்வுகூடத்தில் இரசாயனக் கழிவுகளினால் ஏற்படும் அனர்த்தங்களைக் குறைப்பதற்கும் இல்லாமல் செய்வதற்கும் இனங்காணப்பட்ட இயலுமான தீர்வுகளாக சரியானதும் பயன்பாட்டுத் திறன்மிக்கதுமான கருவிகளைப் பயன்படுத்துவதுடன் ஆசிரியர்களின் ஆலோசனைகளைப் பெற்று இரசாயன பாதுகாப்பு உபகரணங்களையும் மற்றும் தீயணைப்பு கருவிகளையும் பயன்படுத்துதல் வேண்டும்.

கட்டிட இடிபாட்டினால் நூலகம், வகுப்பறைக் கட்டிடத் தொகுதிகள் பாதிக்கப்படாமலிருக்க உட்கூரையை சீரமைத்து தண்ணீர் கசிவினை கண்டறிந்து பள்ளமான பகுதிகளை இனங்கண்டு நீர் வழிந்தோடும் இடங்களில் மண் இட்டு நிரப்புதல் வேண்டும். நீர் தேங்கி நிற்கும் மைதானம், பொது இடங்களுக்கான தீர்வாக வடிகான்களை சுத்தப்படுத்தல், நீரேந்து பிரதேசங்களை கண்டறிந்து வடிகான்களை சீர்செய்து அனர்த்தங்களைக் குறைக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுகூடங்கள், நூலகம், அலுவலகங்களில் ஏற்படும் தீப்பிடித்தல் அனர்த்தங்களுக்கு தீர்வாக மின் துண்டிப்பை முறையாக மேற்கொள்ளல், தீயணைப்பு கருவிகளை பயன்படுத்தல், எச்சரிக்கை மணிகளை பொருத்துவதுடன் மைதானம், விடுதி, விளையாட்டு நிகழ்வுகளின் போது ஏற்படும் அனர்த்தங்களுக்கு தீர்வுகளாக முதலுதவி ஆலோசனை, சாரணர் துறை ஆலோசனை, வைத்தியசாலை உதவியைப் பெறுதல், முதலுதவிப் பெட்டிகள், வைத்திய உபகரணங்களை கையாண்டு வகுப்பறைகள் விடுதிகளில் தொற்று நோய்கள் ஏற்படாமல் இருக்க பிராந்திய சுகாதார பணியகம், வைத்தியசாலை, பொது சுகாதார பரிசோதகர்களின் உதவிகளைப் பெற்று அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பு பெறலாம்.

பாடசாலையில் அவசர தேவைகளை வெளிப்படுத்தும் செயற்பாடு.

01. விபத்து அல்லது அவசர நிலமைகளை இனங்காணல்.

02. அது தொடர்பாக பாடசாலை இடர் பாதுகாப்புக் குழுவின் மூலம் செய்திகளை பெற்றுக் கொள்ளல்.

03. இடர் அல்லது விபத்து தொடர்பாக கலந்துரையாடல் மற்றும் பாடசாலை மாணவர்களை வெளியேற்றுவதா? இல்லையா? என்பது தொடர்பாக பாடசாலை பாதுகாப்புக் குழு மூலம் செய்திகளை பெற்றுக் கொள்ளல்.

04. பாடசாலை மாணவர்களை வெளியேற்ற தேவை எனில் அவசர நிலைமை தொடர்பாக அறிவிக்க மணி ஓசைகளைப் பயன்படுத்துதல்.

05. பாடசாலை மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள வழிகளின் மூலம் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வழிகாட்டல்.

06. கணக்கெடுத்தல் மற்றும் பாடசாலை மாணவர்களின் வரவு தொடர்பாக சரியாக தேடிப்பார்ததல்.

07. பாடசாலை மாணவர்களை திட்டமிட்ட வழி ஊடாக வெளியேற்றுதல்.

எப்பொழுதும் பாடசாலையில் பெற்றுக் கொள்ளக்கூடிய வளங்களாக தீயணை கருவி, முதலுதவிப் பெட்டி, ஒலிபெருக்கி (மெகா போன்) எச்சரிக்கை மணி, வெளியேற்றுகைக்கான வரைபடம், அவசர கால தொடர்பு விபரங்கள், வானொலி, தொலைக்காட்சி. தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி மற்றும் வேறு பொருட்கள் காணப்படுவது சிறந்தது. அதன் மூலம் அவைகளை சரியான நேரத்தில் பயன்படுத்தி பாடசாலை அனர்த்த திட்டத்தின் ஊடாக மாணவர் சமூகத்தை பாதுகாப்போம்.

திறந்த போட்டியாளர்,
தேசகீர்த்தி, ரத்னதீப.
றாசிக் நபாயிஸ் (BA, MA)
அபிவிருத்தி உத்தியோகத்தர
அனர்த்த நிவாரண சேவைகள்
அபிவிருத்தி உத்தியோகத்தர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடி வா மகனே.......!



தோழிலே தொட்டில் கட்டி
தோப்பிலே நீர் அருந்தி
துள்ளி விளையாட
குதித்து ஓடி வா மகனே!

புன்னகை செல்வா!
புது மலர் ரோசா!
வானுயர்ந்த மின் விளக்கே!
மகிழ்ந்து ஓடி வா மகனே!

என் ஐந்து வர்ண புத்தகத்தின்
முதல் வரி நீயல்லவா
முத்தமிட நான் இருக்கின்றேன்
முழு மதியே ஓடி வா!

கலிமா விரல் பிடித்து
கால் நடையாய் நாம் நடந்து
கடைத்தெரு சென்று
களைப்பாற ஓடி வா!

கல்விக்கு உரமாய்
கரை சேர படகாய்
காரிருள் ஒளியாய்
கனவை நிஜமாக்க ஓடி வா மகனே!

பஞ்சி போன்ற –உன் கன்னம்
பவளம் போன்ற –உன் விழிகள்
பாரம் இல்லா-உன் பாதம்
உன்னை பார்த்து நான் பசியாற
பறந்தோடி வா மகனே!

நெஞ்சில் உனை நிறுத்தி
உன் நிழலில் நான் வாழ
வழி வகுக்க வல்லோன்வளர் பிறையே
ஓடி வா!

என் வாரிசாய் வந்த
பஞ்ச வர்ண கிளியே
அள்ளி அணைத்து-முதல்
முத்தம் தந்ததிலே
தாடி தந்த தாகால்
அழுகிறாயோ என் உயிரே

சிறிய மலரின் முதல் பூவே!
உன்னை அள்ளி அணைக்க
ஆவலுடன் காத்துக் கிடக்கின்றேன்
விரைந்து ஓடி வா மகனே!

உன் கேற்றடியில் வந்து நின்று
கேலி செய்து நான் அழைத்தால்
பின்னால் ஓடி வந்து
என் முதுகில் ஏறிடுவாய்
நித்தமும் வாறேன் என்று-உன்

முத்தமும் சலிக்காதடா
உன்னை நித்தமும் பார்க்காவிட்டால்
எனக்கு பித்தம் வரப்பார்க்குதடா

என் பிள்ளை கனியல்லவா-நீ
தெகிட்டாத நீரூற்றே
வற்றாத பெருங்கடலே –உன்னை
வாரியணைக்க நான் இருக்கின்றேன்

நான் கண்ட கனவெல்லாம்
நீ!நிஜமாக்க வேண்டும்
நீ! செய்த பணியெல்லாம்
என் கபுறுக்கு வரவேண்டும்

காண இருப்பேனோ
கன தூரம் செல்வேனோ
கண் மணியே நீ வாறாயோ.....

அஹமட் லெப்பை ஹாறூன்
திறந்த போட்டியாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமும் இலக்கியமும்



இஸ்லாம் எழுதுகோல்கள் இல்லாத 1442 ஆண்டுகளுக்கு முன்னர் எழுத்தின் மகிமை பற்றிய பேசியதோடு, இலக்கியப் புருஷர்களால் என்றென்றும் வழங்க, வரைய முடியாத முக்கியத்துவத்தை இஸ்லாம் இலக்கியத்துக்கு வழங்கிச் சிறப்பித்துள்ளது. இதனால் தான் இன்றுவரை அல்குர்ஆன் தனிச் சிறப்புமிக்க ஓர் இலக்கிய புத்தகமாக காணப்படுகின்றது. அது மாத்திரமல்லாமல் உலகம் அழியும் வரை யாராலும் இதனை போன்ற ஓர் இலக்கிய புத்தகத்தினை உருவாக்கமுடியாது என சவால் விடுவதை காணலாம்.

இஸ்லாம் ஆன்மீக ரீதியாக மட்டுமன்றி,மனிதவாழ்வின் ஒவ்வொரு அசைவிலும் அவனை நெறிப்படுத்துகிறது. அரசியல், கல்வி, விஞ்ஞானம், பொருளாதாரம், இலக்கியம், இல்லறம், விளையாட்டு என்ற எல்லாத் தளங்களிலும் பரந்துபட்ட அடிப்படைகளைக் கொண்ட தெளிவான, வலுவான வழிகாட்டுதல்களை வழங்குகிறது. எனினும், இஸ்லாத்தைப் பற்றிய புரிதலில் தவறிழைத்துக் கொண்டவர்களைப் போலவே, இஸ்லாமிய இலக்கியப் பார்வை குறித்த புரிதலிலும் தவறிழைத்து விட்டனர். இஸ்லாமிய இலக்கியத்தின் களம் விரிந்து பரந்துபட்ட அளவிற்கு இலக்கியம் குறித்த இஸ்லாமியர்களின் பார்வையோ விரியவில்லை. இஸ்லாமியப் பல்கலைக்கழகங்களில், மத்ரஸாக்களில், இஸ்லாமிய கற்கைத் துறை சார்ந்த கணிசமான தொகையினரிடத்தில் கூட அது குறித்த விரிந்த, ஆழமான பார்வை இல்லை என துணிந்து கூறலாம்.

இலக்கிய வடிவத்தினூடாக பல்வேறு கொள்கைகள், இஸ்லாமியர்களின் சிந்தனையில் ஊடுருவும் இன்றைய காலகட்டத்தில் கூட, அதைத் தடுத்துவிட இஸ்லாமிய மதிப்பீடுகளின் அடிப்படையிலான இலக்கியங்கள் உருவாகவில்லை. மாறாக, சில தனி மனிதர்கள் தங்கள் சுயநலத்திற்காக, ஷிர்க் கலந்த கவிதைகளுக்கு பொது நிதியில் உதவி புரிகின்றமை வேதனைக்கும் விசனத்திற்குமுரிய விஷயமாகும். அல்லாஹ்வின் வார்த்தைகளையும், அவனது இறுதித் தூதரின் பொன்மொழிகளையும் தாங்கி வரும் தூய்மையான நூல்களுக்கு இல்லாத பெறுமானம், சிந்தனையாளர்களின் கவிதை நூல்களுக்குள்ளமை சத்தியத்தை நேசிக்கும் எந்த ஈமானிய உள்ளத்தையும் வேதனைப்படுத்தாமல் இருக்க முடியாது. அத்தகைய அயோக்கியத் தனங்களை எதிர்த்தே நமது எழுது கோல்கள் சீறிப் பாய்கின்றன. இதனைப் பொறுக்க முடியாத வக்கிர புத்தி உள்ளங்கள் வன்முறை வழிகளை திரைமறைவில் தூண்டிவிடுகின்றன. இருளைச் சகித்துக் கொண்டிருப்பதை விட ஒளி விளக்கொன்றை சுயமாக ஏற்றிக் கொள்ள வேண்டிய காலம் கனிந்து விட்டது. சத்தியத்திற்காக பல்துறைச் சமர் புரியவும் உண்மைக்கு உயிர் கொடுக்கவும் ஆர்த்தெழ வேண்டிய தகுந்த தருணம் இது. நாம் என்ன செய்ய வேண்டுமென்பதை பிறர் தீர்மானிக்காது அல்குர்ஆனும் அஸ்ஸுன்னாவும் முற்று முழுதாகத் தீர்மானிக்க வேண்டும்.

இஸ்லாமிய இலக்கியவாதி நிஜ உலகை மறக்க மாட்டான் சத்தியத்தோடுள்ள உறவைத் துண்டித்துக்கொள்ள மாட்டான். ஆனால், இன்று நம்மில் பலர் போலிகளை உலாவவிடும் போலிகளாகவே மாறி, அழைப்புப் பணிக்குரிய பலமான பாலத்தைப் பயன்படுத்தாமல். இலக்கியத்திற்கும் இஸ்லாமியர்களுக்குமிடையில் பெரும் சுவரொன்றை எழுப்பிக் கொண்டுள்ளார்கள். இந்தச் சுவர் தகர்க்கப்பட்டு, இலக்கிய உணர்வுகளை இஸ்லாமியக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டத்தில், விரிந்தளவில் மதிப்பீடு செய்தல் வேண்டும். அதனால் முஸ்லிம்களின் அழகியல் உணர்வும் சத்தியத் தாகமும் சரியான செல் நெறியான நிழலில் விரிவுபடல் வேண்டும்.

இஸ்லாமிய சிந்தனையில் ஆழ்ந்து, ஆய்ந்து கற்று, உள்ளத்தில் அதனை உணர்வு பூர்வமாக ஏற்ற இஸ்லாமியக் கற்கைத் துறை சார்ந்தவர்களால் தான் இலக்கியத்தை முழுமையாக இஸ்லாமிய மயப்படுத்த முடியும். மனித வாழ்வையும், நிகழ்வையும் வரலாற்றையும் இஸ்லாமிய உள்ளத்தோடு, அவர்களால் மட்டுமே முழுமையாகப் பார்க்க முடியும். எனினும், இன்றைய இலக்கிய பதிவுகளில் இவர்களின் பங்கு எந்தளவில் உள்ளது என்பதை உங்களிடமே விடுகிறோம்.

இதனால் தான் பத்திரிகைகளில் அல்லது சில கலை இலக்கிய இதழ்களில் தலை காட்டும் இஸ்லாமிய எழுத்தாளர்கள(?) சிலர் இப்படித் தாம் என்ற வட்டத்துக்குள் நுழையாமலோ, அல்லது வட்டத்தையும் எல்லைக் கோடுகளையும் தாண்டி வரம்பு மீறிய பாதையிலோ இலக்கியப் பணி செய்கிறார்கள். இஸ்லாமிய இலக்கியம் என்று எழுதப்படும் போது மனிதனின் அழகனுபத்தைத் தடுத்து, புன்னகையைத் தடுத்து, மனித மகிழ்ச்சிக்குத் தடை போடும் மத வாழ்க்கைக்கு அழைப்பு விடுவதாக சமயச் சார்பற்ற புத்தி ஜீவிகள்(?) விசனப்படுவதுண்டு. சமயச் சார்பற்றோர், எழுத்தாளர்களுக்கு மதம் என்ற முகவரி தேவையில்லை என்ற வரட்டு வாதத்தைமும் முன் வைப்பர் எனினும், எழுத்தாளனுக்கும், எழுத்துக்கும் ஒரு அழகான அளவு கோலைக் கொடுத்து இஸ்லாம் நெறிப்படுத்துகிறது.

முஸ்லிம்கள் எழுதுவதெல்லாம் இஸ்லாமிய இலக்கியங்களாகிவிடமாட்டாது. இங்கே, அவர்கள் எல்லாம் இஸ்லாமிய இலக்கியவாதி என்று அடைமொழி பெற்றிடவும் முடியாது. எழுதுபவரின் இலக்கு, பாடுபொருள், அவரது ஒழுக்கவியல் என்பன போன்ற இன்னோரன்ன வரைமுறைகளை நிர்ணயிப்பதன் மூலமே, அது உள்வாங்கப்படும். வீண் கற்பனைகளுக்கோ, தனிமனித புகழ்பாட்டிற்கோ, வழிபாட்டிற்கோ, ஆபாச களியாட்ட லீலைகளுக்கோ, வன்முறைத் தூண்டல்களுக்கோ, வெறியாட்டங்களுக்கோ, ஒரு சமூகத்தின் மீது அபாண்டமான போலித் சித்திரத்தை புனைந்து கூறவோ, தாக்குதலுக்கோ, சொல்லம்புகளால் குத்திக் குதறுவதற்கோ, கிழிப்பதற்கோ இஸ்லாத்தில் அனுமதியில்லை.

"ஒருவரது வயிற்றில் கவிதை நிரம்பியிருப்பதை விடச் சீழ் நிரம்பியிருப்பது சிறந்தாகும் அறவிப்பவர்: அபூஹுரைரா(ரழி) நூல்: புகாரி, முஸ்லிம், திர்மிதி, அபூதாவூத். காம உணர்வுகளைத் தூண்டக் கூடிய விரசமான கவிதைகள், பாடல்கள் உள்ளத்தில் மனனமிட்டு வைப்பதை விட சீழ் சிறந்தது தான் என்பதை நபியவர்களின் பொன்மொழி உணர்த்துகிறது. கீழான வார்த்தைகளில் கவிதை பாடல் இயற்றுபவர்கள் ஷைத்தான்கள் எனவும் எச்சரித்துள்ளார்கள். "அர்ஜ்" எனுமிடத்தில் ஓர் கவிஞன் கவிதை புனைந்து கொண்டிருப்பதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள், "இந்த ஷைத்தானைப் பிடியுங்கள்" என்று கூறினார்கள் அறிவிப்பவர்: அபூ ஸயீத் (ரழி) நூல்: முஸ்லிம். நபியவர்கள் பொய், மது, மாது, ஆபாசம் என்பன பற்றிய விரசமான வர்ணனைகள் கொண்ட கவிதைகளை தான் கண்டித்துள்ளார்கள். நல்ல கவிதைகளை அனுமதித்துள்ளார்கள். "நிச்சயமாக கவிதையின் தத்துவம் இருக்கிறது"அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரழி) நூல்: திர்மிதி "கவிஞர்கள் கூறியதில் மிக உண்மையானது" அல்லாஹ்வைத் தவிர அனைத்தும் அழியக்கூடியதாகும். அறிவிப்பவர்: அபூ ஹுரைரா(ரழி) நூல்: புகாரி, முஸ்லிம். இஸ்லாம் வரம்புக்குட்பட்ட, எல்லைக் கோடுகளைத் தாண்டாத கவிதைகளைத் தடுக்கவில்லை என்பது புலனாகிறது. இஸ்லாமிய இலக்கியம், மனித உணர்வுகளின் வெளிப்பாட்டுக்கு மிக விரிந்த அளவில் களம் அமைத்துக் கொடுக்கின்றது. ஏனெனில் உயிர்த்தன்மையுள்ள இலக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சியுடையதாக இருத்தல் அவசியம். எனவே இஸ்லாமிய இலக்கியம் என்பது தத்துவரீதியாக இஸ்லாமியக் கோட்டுபாடுகளை விளக்கும் இலக்கியமன்று அல்லது அது சில உபதேசங்கள், அறிவுரைகள், போதனைகளின் கூட்டுக் கலயையன்று. அது அவற்றை பன்மடங்கு விரிந்த பொருட்களை உள்ளடக்குகின்றது.

